www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரியாக பதிவு செய்யப்பட்டது. Registered sa a Newspaper at the GP

புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

புதிய கண்ணோட்டம்

வெளியீடு: 42 | 01 ஐப்பசி 1998 | விலை: ரூபா 7.00

தமிழ் மக்களின் விருப்பத்தைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்களா?

மக்களுக்கு தேவை அமைதி, சமாதானம், கௌரவமான தீர்வு.

கடந்த ஓரிரு வாரங்களாக மீண்டும் பேச்சுவார்த்தை என்ற கதைகள் பரவலாக அடிபடத் தொடங்கியுள்ளன. அண்மையில் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவரான தமிழ்ச்செல்வன் "சன்டே லீடர்" என்ற பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியும், கூட் டுச் சேரா மாநாடு ஆபிரிக் காவில் நடந்த பொழுதில் தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா அவர்கள், புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்றைத்தொடங்கதான் உதவி செய்யத் தயாராக உள்ளதாக கூறியமையும், பேச்சுவார்த்தை ஒன்று நடக்கக் கூடும் என்ற சந்தேகத்தை பரவலாக ஏற்படுத்தியது.

அத்துடன் நிபந்தனைகளுடன் பேசத்தயார் என ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் கூறியதும், நிபந்தனையின்றிப் பேச வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியதும், பேச்சு வார்த்தைகள் நடக்கலாம் என்ற ஊகத்தை பலப்படுத்தியது. ஆனால் அவ்வூகங்கள் யாவும் காற்றில் கரைந்து மறைந்து போய்விட்ட சூழல்கள் தான் மீண்டும் தோன்றுகின்றது.

பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற வேண்டும். எமக்கு கௌரவமான தீர்வு கிட்ட வேண்டும், அமைதியாக சமாதானமாக

வாழவேண்டும் என்பதுதான் முழுத்தமிழ் மக்களின் விரும்பமுமாகும். இராணுவம் அற்ற, ஆயுதங்களற்ற, சோதனைச்சாவடிகளற்ற ஓர் சூழலையே மக்கள் விரும்புகின்றார்கள்.

யாரிடம் ஆயுதம் இருந்தாலும், அவை துஷ்பிரயோகம் செய்யப்படுவதே இயல்பாகிவிட்டது. இராணுவத்தின் ஆயுதங்களும் சரி, புலிகளின் ஆயுதங்களும் சரி, ஏனைய இயக்கங்களின் ஆயுதங்களும் சரி எல்லாமே தத்தமது ஆதிக்கத்தை காப்பாற்றிக் கொள்ளவே பயன்படுத்தப் படுகின்றது. ஆயுதங்கள் என்பன மக்களை மௌனப்படுத்துகின்றது. அவர்களுக்கு கொலை அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் இவை எல்லாம் அற்ற ஓர் ஜனநாயக சூழலையே மக்கள் எதிர்ப்பார்க்கின்றார்கள்.

ஆனால் மக்களின் இவ்விருப்பங்கள் யாரின் காதிலும் ஏறுவதாக இல்லை. புலிகள் உண்மையாகவே ஓர் பேச்சு வார்த்தையை விரும்புகின்றார்களா? என்பதும் கேள்விக்குரியதே. தமது ஆயுதப் போராட்டம் தோல்வியை நோக்கிப்போகும் பொழுதெல்லாம், புலிகள் பேச்சுவார்த்தை என்பதை ஓர் துரும்புச்சீட்டாக பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

பிரேமதாசாவினுடனான பேச்சு வார்த்தையை முறிக்கும் பொழுது அதனை ஓர் ("Peace trap") சமாதானப்பொறி என்றே பாலசிங்கம் வர்ணித்தார். ஒவ்வொரு பேச்சுவார்த்தையும், தம்மை மீளவும் ஒருங்கிணைத்து யுத்தத்துக்கு தயார் படுத்தும் ஓர் இடைக் காலகட்டமாகவே புலிகளால் பயன்படுத்தப்பட்டது. பேச்சு வார்த்தை என்பது புலிகளைப் பொறுத்தவரை யுத்தத்தை தொடர்வதற்கான தந்திரோபாயமே தவிர, உரிமைகளை வெல்வதற்கான மூலோபாயமாக இருந்ததில்லை.

எனவே இன்று ஏற்படும் பேச்சுவார்த்தை தொடர்பான புலிகளின் கருத்துக்கள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பது கேள்விக்குறியே. யாழ்-கண்டி வீதியை திறக்கும் அரசாங்கத்தின் முயற்சி இதுவரை கைகூடா விட்டாலும், வீதியை திறந்தே ஆக வேண்டும் என்ற பெரு முயற்சியிலேயே சிறீலங்கா இராணுவம் உள்ளது.

வன்னியிலிருந்து வரும் செய்திகளின் படியும், வீதி திறப்பதை தவிர்க்க முடியாததென்றே புலி

களும் நம்புகின்றார்கள். இந்நிலையில் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் காலத்தை இழுத்தடிக்கலாம் என்பதுடன், மூர்க்கத்தனமான இன்னுமொரு யுத்தத்துக்கான தயாரிப்புக்களையும் செய்யலாம் என புலிகளின் தலமை எதிர்பார்க்கக் கூடும்.

ஆனால் இப்படியான தந்திரோபாயங்கள் மேலும் பாரிய இழப்புக்களையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்துமே தவிர இதனால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் ஏற்படாது என்பதே நிதர்சனமானது.

எனவே நேரடியாகவோ அல்லது 3ம்தரப்பு மத்தியஸ்தத்துடனோ, எவ்வாறு பேசுவதாயினும், பேச்சுவார்த்தையூடாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை கொள்கை ரீதியாக புலிகள்ஏற்றுக்கொண்டால் மாத்திரமே உண்மையான, நியாயமான பேச்சுவார்த்தையாகஅது அமைய முடியும்.

சிங்களவர் மட்டுமே அனுபவிக்க "ஜனநாயகம்" என்ன ஆடம்பரப் பொருளா?

ஐ.தே.கட்சியின் சர்வகட்சி மாநாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரதிநிதி.

கௌரவ தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய பேராளர்களே, பெரியோர்களே! இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை அழைத்தமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அவர்கட்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே இலங்கையின் வரலாற்றில் இது ஓர் முக்கிய காலகட்டம்தான். "ஜனநாயகத்தின் எதிர்காலமும் பல கட்சி முறையும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது. தேர்தல் முறைகளில் மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையேற்படுத்த வேண்டிய அவசரமான தேவை ஏற்பட்டுள்ளது. ஆனால்தென்பகுதியில் மட்டுமே மீண்டும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோமா என்பதுதான் புதிராக இருக் கிறது. தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தல்கள் பின்போடப்பட்டதையிட்டு ஐக்கிய தேசியக்கட்சி கவலைப்படுகிறது. நாமும் கவலைப்படுகிறோம்.

ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளாக வட-கிழக்கு மாகாணசபை ஆளுநர் ஆட்சியின் கீழ் இருக்கிறதே? தென்னிலங்கைக்கு உயர்ந்த ஜனநாயக விழுமியங்களைக் கொண்டுவரவேண்டும் எனப்பேசிக்கொண்டிருக்கும் அதேவேளை கடந்த ஒரு தசாப்தமாக வடகிழக்கில் ஜனநாயகத்தின் அடிப்படைகளை சிதறிப்போயிருக்கிறது என்ற உண்மையை,அலட்சியப்படுத்த் விட்டோம். ஐ.தே.க.வும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தென்னிலங்கைக்கு ஜந்து நட்சத்திர ஜனநாயகத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் அதேவேளை தமிழ்மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையை அடுத்த 10ஆண்டுகளுக்கு பிரபாகரனிடம் வழங்கவேண்டும் எனவும் முன்மொழிகின்றன.

சிங்களமக்கள் மத்தியில் மீண்டும் கட்டியெழுப்பவேண்டும் என நீங்கள் கருதும் ஜனநாயகக் கோட்பாட்டின் மீது பிரபாகரனுக்கு எந்தளவுக்கு ஈடுபாடு உண்டு என்பதை நான் இங்கு விளக்கத்தேவையில்லை. தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மட்டுமே அனுபவிப்பதற்கும், தமிழ் மக்கள் அதனை அனுபவிக்கத்தகுதியில்லை என நீங்கள் கருதுவதற்கும் ஜனநாயகம் என்ன அத்துணை ஆடம்பரப்பொருளா?

இக்கேள்விகளை நான் ஏன் இங்கு எழுப்புகிறேனென்றால் கடந்த 17ஆண்டுகள் ஐ.தே.கட்சி ஆட்சியிலும் சரி 4ஆண்டுகள் பொ.ஜ.மு. ஆட்சியிலும் சரி தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட்டதற்கோ அல்லது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்கோ ஓர் நிகழ்வைக் கூட என்னால் பார்க்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் 1981 நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தல், 1989மற்றும் 1994 பொதுத் தேர்தல்கள், 1993இல் கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் இவை அனைத்திலும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் அரசினால் வெட்கங்கெட்ட முறையில் மீறப்பட்டன.

வட-கிழக்கில் இன்றைய சூழ்நிலை மேலும் மோசமாகியிருக்கிறது. ஒரு புறம் துப்பாக்கி முனையில் தமது அதிகாரத்தை மக்கள் மீது திணிக்கும் புலிகளின் பைத்தியக்காரத்தனமான அணுகுமுறைக்கும், மறுபுறம் எங்கும் நிறைந்திருக்கும் இராணுவம் சிவில் நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களிலும் தலைநீட்டிக்கொண்டிருக்கும் நிலைமைக்குமிடையே தமிழ் மக்கள் பாக்குவெட்டிக்கு நடுவே மாட்டிய பாக்கு போல் சிக்கித்தவிக்கின்றனர். அவர்கள் உணவு உண்ணவும் கொட்டாவி விடவும் மட்டுமே வாய்திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு உறுதி பூண்டிருக்கும் கட்சி என்றவகையில், புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற ஐ.தே.க.வின் ஆலோசனையையிட்டு அச்சப்படவேண்டியிருக்கிறது. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பது புலிகளைப் பொறுத்தவரை ஏனைய தமிழ்க்கட்சிகளை அழிப்பதற்கு வழங்கும் அனுமதிப்பத்திரமே. புலிகளுடன் அரசு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடாத்தியபோதே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்டார், ஈ.பி.ஆர்.எல்.எவ் புளொட் உறுப்பினர்கள் கொடூரமாகக் கொண்றொழிக்கப்பட்டனர்.

எனவே ஜனநாயகத்தில் ஈடுபாடுகொண்ட கட்சி என்ற வகையில் ஐ.தே.க புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையாக அவர்கள் ஜனநாயகக் கோட்பாட்டையும் விழுமியங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தவேண்டும். ஓர் ஜனநாயகச் சூழலில் ஏகப் பிரதிநிதி என்பதே இருக்க முடியாது.

17ஆண்டுகள் ஆட்சி செய்த கட்சி என்ற வகையிலும், எதிர்காலத்தில் ஆட்சி செய்யக்கூடிய கட்சி என்ற வகையிலும் ஐ.தே.கட்சியிடமும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமயப்பெரியவர்கள், மற்றும் இங்கு வந்திருக்கும் சிவில் சமூக பிரதிநிதிகளிடமும் தமிழ்மக்களுக்கு ஜனநாயகச் சூழ்நிலையை ஏற்படுத்துவதில் உயர்ந்த முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென அறைகூவல் விடுக்கின்றேன். இவ்வகையில் தமிழ்மக்களுக்கு பாதியளவு ஜனநாயக சூழ்நிலை வழங்கப்பட்டால் இந்நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் அரைவாசிக்கு தீர்வு காணப்பட்டுவி

படிப்பகம்

www.padippakam.com

கண்ணோட்டம்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியல் எதிரிகள் யார்?

யாழ்ப்பாண மாநகர முதல்வர்களாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் பொறுப்பேற்ற இருவர் அடுத்தடுத்து கொல்லப்பட்டுள்ளனர். இது தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியல் நிலைப்பாட்டுக்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய சவாலாகும். தமிழினத்தின்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதாகக் கூறிக்கொள்ளும் கூட்டணி இந்தச்சவாலை எப்படி எதிர்நோக்கப் போகின்றது என்ற கேள்வி பலமடைந்து வருகின்றது.

தமிழ்மக்களின் விடுதலைக்காக பாதுகாப்பு படையினருடன் மோதலில் ஈடுபட்டுள்ளவர்களை மக்களின் உண்மையான பிரதிநிதிகள் ஏனைய அரசியல் சக்திகள் யாவும் வெறும் பக்கப்பாட்டுக்காரர்களை என்ற பிரச்சாரத்தை கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பராராசசிங்கம் போன்றவர்கள் நடாத்துகின்றனர். இதேவேளை தமிழ்மக்களின் அரசியலரங்கில் குறைந்த பட்ச ஜனநாயகம் கூட வெளி வரவில்லையே என்று மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான நிலன்திருச்செல்வம் TNL தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு ஆதங்கப்பட்டிருக்கிறார். இவை எதிர் நோக்கப்படும் பாரிய அரசியல் சவால் குறித்து கூட்டணிக்குள் ஒத்த அபிப்பிராயம் இல்லை என்பதையே காட்டுகின்றது.

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தியது மூலம் ஜனநாயக ரீதியிலான அரசியல் செயற்பாடுகளுக்கு அத்திவாரம் போடுவதில் அரசாங்கம் குறிப்பிடத்தக்கதொரு முயற்சியை எடுத்தது. இந்த வகையில் யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகத்தையும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை நிர்வாகத்தையும் கைப்பற்றியதன் மூலமாக தமிழர் விடுதலைக்கூட்டணி ஜனநாயக ரீதியாக மக்கள் மத்தியில் தனக்குள்ள செல்வாக்கை வெளிப்படுத்தியது. இதன் மூலமாக மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படக்கூடிய தலைமைத்துவம் என்ற இலக்கை தமிழர் விடுதலைக்கூட்டணி எட்டலாம் என்ற நிலையே இன்று அவர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தலுக்கு அடிப்படையானதாகும்.

சிறீலங்கா அரசாங்கத்தின் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆயுதப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்ற நிலையை எடுத்துக்கொண்டும் ஏனைய தமிழ் அரசியல் சக்திகளுடன் உறவு ஏற்படுத்திக்கொள்வதைத் தவிர்த்தும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயற்பட்டு வருகின்றது. இதன் மூலமாக கடந்த காலத்தில் ஆயுதம் தாங்கியவர்களின் செயற்பாடுகளின் பாதிப்புக்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும், அதே சமயம், தமிழீழ விடுதலைப்புலிகளின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம், என்பதும் கூட்டணியினரின் கற்பனை.

இந்தக் கற்பனைக்கு மண் தூவுவதாகவே யாழ் மாநகர சபைக்குண்டு வெடிப்பு நடந்துள்ளது. அதாவது மாநகரசபைக் கூரைக்குள் பொருத்தப்பட்டிருந்த குண்டு உயிர்களை காவு கொண்டு கட்டிடத்தை தரைமட்டமாக்கியது மட்டுமல்லாமல் தமிழர் விடுதலைக்கூட்டணி நம்பும் ஆயுதம் ஏந்தாத ஜனநாயகத்தையும் தகர்த்துள்ளது. அரசியல் தலைமைத்துவம் என்பது அதிகாரப் போட்டியை மட்டுமல்ல அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியதே என்பதும் இப்போதாவது கூட்டணிக்கு தெளிவாக வேண்டும்.

சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரானதாக மட்டுமன்றி ஏனைய தமிழ் அரசியல் தலைமைகளுக்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகள் திசை திருப்பப்பட்டுள்ளதைக் காலங்கடந்து போன இன்றைய நிலையிலாவது தமிழர் விடுதலைக்கூட்டணி உணரவேண்டும். தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமாக சித்தரிக்கப்படும் ஆயுதம் தாங்கிய செயற்பாடுகளின் அடிப்படையில் ஏகப்பிரதிநிதிகள் என்ற கருத்தையே நிலை நிறுத்த முற்படுகின்றனர். இந்தப் போராட்டச் செயற்பாடுகளின் எதிர் விளைவுகளால் முழுத்தமிழ் மக்களும் தலைகுனிந்து, கை கட்டி, வாய் பொத்தி, இருக்க வேண்டிய அவலநிலமையே ஏற்பட்டு வருகின்றது என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியானது மதிப்பும், பெறுமதியும் மிக்கப்பல தலைவர்களை பதிகொடுத்த போதும் தமிழ் அரசியலரங்கில் ஜனநாயக மரபுகள் மறுக்கப்படுவதற்கு எதிராக இது வரை குரல் கொடுத்ததாக இல்லை. இதே போக்கையே தொடர்ந்து கைக்கொள்ளுமாயின் அதன் எதிர்காலம் கேள்விக்குறியதாக மட்டுமல்ல கேலிக்குரியதாகவும் மாறக்கூடும்.

எனவே உண்மையான ஜனநாயக சக்திகளை இனங்கண்டு அவர்களுடன் தமது நட்புறவைப் பலப்படுத்துவதன் மூலமாகவே தமிழர் விடுதலைக்கூட்டணி தமது உயிர் வாழ்வுக்கான உத்தரவாதத்தையும் கூட தக்க வைத்துக் கொள்ள முடியும். அது இல்லாமல் கொள்கைகளையும், விவேகத்தையும் வெளிப்படுத்துவது மூலமாக அரசியல் தலைமைத்துவத்தை தொடர்ந்து பேணலாம் என்று கூட்டணி எதிர்பார்க்குமேயானால் கவலைக்குரிய விடையங்களையே தொடர்ந்தும் எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்பது வெளிப்படையாகியுள்ளது.

தியாகிகள் தின தலைமை உரை,

தோழர் குமரேஷ் மன்னார்

தோழர் பத்மநாபா ஞாபகார்தமாக இங்கு நாம் விளையாட்டுப் போட்டிகளை நடத்திவிருக்கின்றோம். தியாகிகள் ஞாபகார்தமாக விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏன் நடத்துகிறீர்கள் என்ற கேள்வி நியாயமாகவே எழ முடியும். உண்மையில் ஈவிரக்க மற்ற யுத்தம் மக்களின் உடல், மன ஆரோக்கியங்களைச் சிதைத்து நடைப்பிணமாக்கியுள்ளது. அந்த வகையில் ஒரு ஆரோக்கியமான சமூகம் என்பதற்கான குறியீட்டு நிகழ்ச்சியாகவே நாம் விளையாட்டுப் போட்டிகளை நடத்தினோம்.

தவிர தியாகிகளின் ஞாபகர்த்தமாக நாம் நிகழ்ச்சிகளை நடத்துவதோடு மட்டுப்படுத்த முடியுமா? நிச்சயமாய் இல்லை, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டு மரணித்துள்ளார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது உயிரைமாய்த்துள்ளார்கள். இவ்வளவு தியாகங்களுக்கும், உயிருடன் இருக்கும் நாம் என்ன அர்த்தத்தை கற்பித்திருக்கின்றோம். இன்று எமது தேசமே அகதி முகாமாகி விட்டது.

இலங்கைத்தீவில் சகல பகுதிகளிலும் சிதறுண்டு எமது மக்கள் வாழ்கின்றார்கள். இந்தியாவில் மத்தியகிழக்கில் மேற்கு நாடுகளில் ஏன் தென் அமெரிக்காவிற் கூட எமது மக்கள் தஞ்சமடைந்துள்ளார்கள். இன்றும் கூட பல்லாயிரக்கணக்காக மக்கள் உயிராபத்து நிறைந்த பயணத்தை மேற்கொண்டு வங்கக்கடலைத் தாண்டி இந்தியா செல்கின்றார்கள்.

இன்றும் ஆயிரக்கணக்கானோர் வவுனியாத் தடுப்பு முகாம்களும் மன்னார். திருமலை போன்ற பகுதிகளிலும் அடைந்து கிடக்கின்றார்கள். இன்று இந்த நாட்டில் ஒரு மனிதனைக் கைது செய்வதற்கு தமிழர் என்ற தகுதியே போதுமானது. வகை தொகை இல்லாத கைதுகள் தொடர்ந்து கொண்டே போகின்றன. கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி அலையும் பெற்றோரும் உற்றாரும், உறவினர்களும் கூட கைதுக்கு விதிவிலக்கில்லை. தமிழர்கள் முறைப்படி பொலிசில் பதிவு செய்து உரிய ஆவணங்களை வைத்திருந்தாலும் கூட கைதுக்கு அவர்கள் உள்ளாவதும் உள்ளாகாமல் இருப்பதும் சோதனைச்சாலையில் நிற்கும் பொலிஸ் அல்லது இராணுவத்தின் சுபாவத்திற்கு ஏற்ப நிகழலாம். ஆனால் சமூகத்தின் மதிப்பிற்குரிய மதகுருமார்கள் கூட இதற்கு விதிவிலக்கில்லை.

கிழக்கில் நாளாந்த யுத்தத்தில் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் முன் எப்போதும் அனுபவிக்காத பேரவலத்தை தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இருக்கும் தமிழ் தலைமைகளுக்கிடையே ஐக்கியமில்லை ஒற்றுமையில்லை. இது எமக்கிகாரு சாபக்கேடுடென்றே கூறலாம். நாம் இந்த சாபக் கேட்டிலிருந்து வெளிவந்ததாக வேண்டும்.

எமக்குள் ஒற்றுமை, எமக்குள் ஐக்கியம் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளுக்காக ஜனநாயக வழியிலேனும் போராடுதல், எல்லாவற்றையும் தானஞ் செய்யும் போக்கைத் தவிர்த்தல் என்பன முக்கியமானவை. மன்னார் பிரதேசத்தை பொறுத்த வரை யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். மன்னார் தீவுப்பகுதியை எடுத்துக் கொண்டால் மீன்பிடியே பிரதான தொழில். கடல் வலயக் கட்டுப்பாடுகளால் செழுமைமிக்க மீன்பிடித்தொழில் மங்கி மறைந்து கொண்டு இருக்கிறது. மன்னார் பெருநிலப் பகுதியை பொறுத்தவரை பாதை திறப்பின்போது வளமுள்ள நிலங்களை ஊடறுத்து பாதுகாப்பு அரண்கள் செல்வதால் செழிப்பான நெல்வயல்கள் அழிந்துள்ளன. விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பும் சீரழிவுக்கு உள்ளாகி உள்ளது.

மன்னார் பெருநிலப்பரப்பில் இருந்து, மன்னார் தீவுப் பகுதிக்கான பயணம் சோதனை மிகுந்த மறைக்க முடியாத இடர்பாடுள்ள பயணமாகவே உள்ளது. சுதந்திரத்துக்காக போராட புறப்பட்ட எமது மக்கள் அடக்கு முறை இருளில் அகப்பட்டுத்தவிக்கிறார்கள். இந்த இருளில் இருந்து வெளிவர எம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும். உயிரைத் தியாகம் செய்தவர்களின் இழப்பிற்கு அர் த்தம் தேடவும் பல காரியங்கள் செய்தாகவேண்டும்.

தமிழ் மக்களின் 50ஆண்டு கால பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அது இதுவரை தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களுக்கு ஈடானதாக இருக்க வேண்டும். அதாவது தமிழ் மக்களின் கௌரவம் சுயமரியாதையை உறுதி செய்யும் தீர்வாக அமைய வேண்டும். ஜனநாயகத்துடன் கூடிய சமாதானம் உருவாகவேண்டும். எமது மக்கள் இரண்டு துப் பாக்கிகளின் நிழலில் வாழும் நிலை அகல வேண்டும். பயத்தில் இருந்து விடு படவேண்டும். அகதி வாழ்க்கை என்ற பேரவலம் நீக்கப்பட வேண்டும். சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும். இதற்காக தமிழ் மக்களும் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதுவே இன்றைய வரலாற் றின் தேவையும் கூட.

தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

P.Fach: 66,
59514 Welver,
Germany.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epiclondon @gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

எமது மின் இணைய முகவரி (Web site Address):

http://www.epicnews.com

படிப்பகம்

இனிய தமிழ் மக்களே!...

அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

உங்களுக்கு ஆயிரம் அன்றாடப் பிரச்சினைகள். செம்மணிப் புதை குழியில் காணாமல் போன எனது மகனும் கிடக்கிறானோ என்ற கவலையும், நிவாரணத்தை வெட்டினால் அடுத்தநேரம் கூழோ, கஞ்சியோ காய்ச்சுவதற்கு ஏதாவது கிடைக்குமா என்ற கவலையும், சோதனைச் சாவடிகளில் கைது செய்யப்பட்டோர் உயிருடன் வருவார்களா? அல்லது விடுவிக்கப்படுவார்களா என்ற கவலையும், மண்ணெண்ணை, டீசல், வாங்க அனுமதி எடுக்க யார் யாரைப்பிடிப்பதென்ற கவலையும், யாழ்ப்பாணம், கொழும்பு செல்ல அனுமதி எடுக்க அலைய வேண்டும் என்ற கவலையுமாக, உங்களுக்கு பல கவலைகள் உள்ளன. மறுக்கவில்லை.

ஆனால் இவற்றில் இருந்து விடுபட மக்களாகிய நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? யாரை யாவது பிடித்து எமது காரியத்தை முடித்து விடுவோம் என்பதில் அக்கறையாக உள்ளோமே தவிர, இவற்றிற்கு ஒட்டுமொத்தமான தீர்வுகாண நீங்கள் என்ன செய்தீர்கள் என்று தயவு செய்து உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

டீசல் மண்ணெண்ணைப் பிரச்சினை என்றால் அது புளட் பிரச்சனை, திருமலையில் சந்தைத்தகராறென்றால் அது சூரியமூர்த்தியின் பிரச்சினை, சரோஜினி, சிவபாலன் கொலை செய்யப்பட்டால் அது கூட்டணிப்பிரச்சினை, காணமல் போனோர் விடயம் என்றால் அது ஈ.பி.டி.பி பிரச்சினை, இப்படித்தான் நீங்கள் பார்க்கின்றீர்களே அல்லாமல் இது எல்லாம் மொத்தமாகத் தமிழ் மக்களின் பிரச்சினையாக நீங்கள் சிந்திக்கின்றீர்களா என்பது சந்தேகமாகவே உள்ளது.

இவற்றை இங்கு நான் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், இப்படியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எமது எதிர்ப்புணர்வை அரசுக்கு தெரிவிக்க தமிழ் கட்சிகள் நடாத்தும் உண்ணாவிரதத்துக்கோ ஊர்வலத்துக்கோ எத்தனை பேர் கலந்து கொள்கின்றீர்கள் என்பது உங்களுக்கே புரியும். உங்களது ஒத்துழைப்பு இல்லாமல் இயக்கங்கள் இவற்றைத்தீர்த்து விடுமென்று நீங்கள் நம்பினால் தவறு விடுகின்றீர்கள் என்றே அர்த்தமாகும்.

அன்பான தமிழ் மக்களே!

போராட்டங்களில் கலந்து கொண்டால் இராணுவத்தாலோ, புலிகளாலோ உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என நீங்கள் அஞ்சக் கூடும். கடந்த 20வருட ஆயுதப் போராட்டத்தில் 60.000க்கு மேற்பட்ட இன்னுயிர்களை நாம் இழந்துள்ளோம். இன்றும் அநாவசியமாகவும், அநியாயமாகவும் பல உயிர்களை இழந்துவருகின்றோம். இந்நிலையில் அச்சம், பயம் ஏற்படும் என்பது தவிர்க்க முடியாததே.

ஆனால் எந்தவித வன்முறையும் இல்லாமல் அமைதியாக நாம் எமது எதிர்ப்புணர்வுகளைக் காட்ட யாருக்கு பயப்பட வேண்டும். ஆயிரமாயிரமாய் நாம் ஒன்று திரளும் போதுயாரால் என்ன செய்ய முடியும்? உலகின் பல்வேறு விடுதலைப் போராட்டங்களை எடுத்துப்பார்த்தாலும், இறுதியாக மக்கள் எழுச்சியே பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டு வந்துள்ளது.

இந்தவகையில் அன்றாடப் பிரச்சினையாக இருந்தாலும் சரி ஒட்டுமொத்தமான எமது உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும் சரி உங்களதுபங்களிப்பு, ஒத்துழைப்பு இல்லாமல் யாராலும், எதனையும் சாதிக்க முடியாது என்பதே உண்மை. நாம் வாய் மூடி மௌனியாக இருக்கும்வரை அராஜகமும், துப்பாக்கியும்தான் ஆட்சி செலுத்தும் இதனை நாம் வாழ்க்கையில் பல முறை சந்தித்துள்ளோம்.

அண்மையில் யாழ், மாநகர சபை குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. அதனால் பாதிப்படையப்போவது யார்? யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் தான். மாநகர முதல்வர் உட்பட, பொறியியலாளர். கட்டடக்கலைஞர், நிர்வாக உத்தியோகஸ்தர் என யாழ்ப்பாணத்தின் புத்தி ஜீவிகள் பலர் கொல்லப்பட்டனர். இவர்கள் எல்லோரும் என்ன துரோகம் செய்தார்கள்? கனடா, அமெரிக்கா என்று ஓடாமல் தமது மக்களுக்கு சேவை செய்ததுதான் அவர்கள் செய்த குற்றமா? இப்படியான தாக்குதல் நடந்தால் நடக்கட்டும் என மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றோமா?

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தைக் குழப்புவதால் மீண்டும் துன்பப்படப்போவதும் நீங்கள்தான். நீண்ட காலத்திற்குப் பின் சொற்பமான மின்சாரம், குறைந்தளவிலாவது தொலைபேசி வசதி, போக்குவரத்து வசதி ஆகியன படிப்படியாக ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. இவற்றை சீர் குலைக்க நாம் அனுமதிக்கப் போகின்றோமா?

அரசாக இருந்தாலும் சரி, புலிகளாக இருந்தாலும் சரி பிழைகளைக் கண்டிக்கவும், அதற்காக போராடவும் நாம் முன் வரவில்லையென்றால், அராஜகத்துக்குள்ளும், சர்வாதிகாரத்துக்குள்ளும்தான் நாம் சீவிக்கவேண்டி இருக்கும்.

எமது உரிமைகளுககாக அரசுக்கெதிராக போராடும் அதேவேளை, அநாவசியக் கொலைகளுக்கும், அராஜகத்துக்கும் எதிராகவும் நாம் போராட வேண்டியுள்ளது. தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் போராடுகின்றோம் எனக்கூறுபவர்கள், உண்மையில் என்ன செய்கின்றார்கள்? தமிழ் மக்களின் சேவகர்களை கொலைசெய்வதுடன் அவர்களுக்கான சிவில் நிர்வாகத்தையும் சீர்குலைக்கின்றார்கள். இதன் மூலம் எமது அன்றாட வாழ்க்கையே ஸ்தம்பித நிலையை அடைகின்றது. அண்மையில் கொழும்புக்கும் யாழ், நகருக்குமான ஒரேயொரு போக்குவரத்துச் சேவையான விமான சேவையையும் நிறுத்தும் படி கட்டளை இட்டுள்ளார்கள்.

இதுவும் நிறுத்தப்பட்டால், யாழ்ப்பாணம் முழு உலகத்திலிருந்தும் துண்டிக்கப்பட்ட ஓர் பிரதேசமாகவே மாறிவிடும். குறைந்த பட்சம் தமது வயதான பெற்றோரின் மரணச்சடங்கிற்கு கூட போய்வரமுடியாத நிலைதான் ஏற்படும்.

இதனைப் போன்றே கிழக்கு மாகாணத்தில் மின்மாற்றிகளை குண்டுவைத்து தகர்ப்பது. இவையெல்லாமே தமிழ் மக்களுக்கெதிரான போராட்டம் என்பது தான் யதார்த்தமானதும், உண்மையானதும். இவையாவும் சரியான நடவடிக்கைகள் என கைகட்டி, வாய்பொத்தி பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றோமா? அல்லது இவ்வாறான மக்கள் விரோத நடவடிக்கைகளை நிறுத்தும்படி கோரப்போகின்றோமா?

குறைந்த பட்சம் எது சரி எது பிழை என்று சொல்லும் உரிமை தானும் எமக்கு வேண்டாமா? நாம் எல்லோரும் வாய் மூடி மௌனமாக இருந்தால் தான் எமது விடுதலைப் போராட்டமே சீரழிந்தது. 1990 இலிருந்து 1995 வரை யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் தானே இருந்தது. 95ம் ஆண்டு ரிவிரச தாக்குதலின் போது தாம் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்று வோம் என்றுதானே 5லட்சம் மக்களை அகதிகளாக்கி தென்மராட்சிக்கும் வன்னிக்கும் கொண்டு சென்றார்கள்.

யாழ்ப்பாணத்தை இவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிந்ததா? இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் குடா நாட்டை கொண்டு வந்த பின்னர் நீங்கள் அங்கே சென்றீர்கள். வீடுகள் உடைக்கப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும், நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டும், காடு மண்டிப்போய் இருந்த பிரதேசம்தானே எமக்கு மிஞ்சியது.

நிலக்கண்ணி வெடிகளால் இன்னும், சிறுவர்களும், இளைஞர்களும், முதியோரும் கைகால்களை இழந்தும் மரணித்தும் வருகின்றனர். இப்படியான சம்பவங்களுக்கு நாம் மௌனிகளாக இருந்தது ஒரு காரணம் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

எனவேதான் ஒவ்வொருவரும் தத்தமது பிரச்சினை தீர்ந்தால் போதும் என்று சிந்திக்காமல், எமது பிரச்சினைகளைத் தீர்க்க நாம் எல்லோரும் தான் போராடியாகவேண்டும்.

இவ்விடயத்தில் சக தமிழ் இயக்கங்களுக்கும் ஓர் விடயத்தை கூறிக்கொள்ளவிரும்புகின்றேன். உங்கள் மக்கள் விரோத செயற்பாடுகளை கை விடுங்கள். மக்களை துன்புறுத்தும் சகல விதமான நடவடிக்கைகளையும் கைவிடுங்கள்.

மக்களை ஒதுக்கித் தள்ளி நீங்கள் தனித்துவமாக நின்று சாதிக்கப் போவது எதுவுமில்லை. முதலில் நீங்கள் மக்களுக்கு சேவை செய்ய, அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தான் இவ் இயக்கங்களை ஆரம்பித்தீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். குறுகிய அரசியல் இலாபங்களையும், வறட்டுத்தனமாக சிந்த னைகளையும் கைவிட்டு, இவ்யுத்தத் திற்கு முடிவு காணவும், கௌரவமானதீர்வொன்றை எட்டுவதற்கும் நாம் ஐக்கியப் படவேண்டும் என்று சிந்தியுங்கள் மக்களை அணிதிட்டிய தொடர்ச்சியான மக்கள் போராட்டம் தான் அரசாங்கத்தையும் சிந்திக்க வைக்கும், அராஜக வாதிகளையும் சிந்திக்க வைக்கும்.

எமது அரசியல் முதிர்ச்சியை மக்களுக்கு புலப்படுத்த வேண்டிய காலகட்டமிது. நாம் என்ன செய்யவேண்டுமென்பதை சர்வதேச மன்னிப்புச்சை போன்ற அமைப்புக்கள் எமக்குச் சொல்ல நாம் இடமளிக்கக் கூடாது. தவறுகள் நடப்பது இயல்பு. ஆனால் தவறுகளில் இருந்து கற்றுக்கொண்டு எம்மைத்திருத்திக் கொள்வது தான் மனிதப் பண்பாடு. எம்மைத் திருத்திக் கொண்டு நாம் ஒற்றுமைப்படுவோமாயின் நாம் நிட்சயமாக பலமான சக்தியாக மாறமுடியும். அதை விடுத்து. ஒரு பக்கம் அராஜக நடவடிக்கைகள் மறுபக்கம் போராட்டம் என்றால் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதனைப் புரிந்து கொள்வோமாயின், மக்களும் எம்முடன் வருவார்கள் போராட்டமும் வெற்றியடையும்.

அன்புடன்
சுரேஷ்.

மன்னாருக்கு ஒருபயணம்

வவுனியாவிலிருந்து மன்னாருக்கான பொதுமக்களின் பயணம ஒரு அவலமான அனுபவமே. வவுனியா வேப்பங்குளத்திலுள்ள சோதனைச்சாவடியில் வாங்கிய பொருட்களையெல்லாம் கவிழ்த்துக்கொட்டி, திரும்ப நிரப்பி குன்றும் குழியுமாக புழுதிபடிந்த தெருக்களில் பஸ்களிலும், மினிவான்களிலும் மன்னாரை நோக்கிய பயணம்.

தெருப்புழுதி முழுவதும் அந்த பஸ்களினுள்தான் நிறைந்து நிற்கும். வீதியின் இருமருங்கும் மரங்கள் தறிக்கப்பட்டு பொட்டல் வெளிகள் உருவாக்கப் பட்டுள்ளன. வீதியை ஒட்டி இருமருங்கும் வீதி அருகாகவும் கண்ணுக்கெட்டாத தூரத்திலும் பாதுகாப்பு வேலிகள் நெளிந்து வளைந்து செல்கின்றன. வயல்களை நதிகளை குளங்களை காடுகளை குடிமனைகளை ஊடறுத்துச்செல்கிறது. இந்த வேலி. மன்னார் வீதியின் இரு புறமும் ஒரு காலத்தில் உயிரோட்டமான வாழ்க்கை இருந்தது. இன்று அது தொல் பொருளியல் சுவடு போல் இடிபாடுகளை கொண்டதாக காணப்படுகிறது.

கால்நடைகள் பராமரிப்பின்றி கட்டாக்காலிகளாக காட்டு விலங்குகள் போல் அலைந்து திரிகின்றன. மன்னார் செல்லும்வரை மனித நடமாட்டம் அற்ற சூளிய பிரதேசம் வரண்டு போன ஒரு பகுதியாகத்தான் இந்தவீதிப்பகுதி காட்சியளிக்கிறது. அங்கிருக்கும் இராணுவத்தினர் முகத்தில் வெறுப்பும் விரக்தியும் மாத்திரமே எஞ்சி நிற்கிறது. உடையிலும், உடலிலும், தலையிலும் புழுதி படிய இந்தப் பாதுகாப்பு அரண்களுக்குள் சீவியம் அவர்களுக்கு அலுத்து விட்டது போல்தான் தெரிகிறது.

வவுனியாவிலிருந்து அரசகட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிக்கு செல்பவர்கள் உயிலங்குளத்தில் மூட்டை முடிச்சுக்களுடன் இறங்கி விடுகின்றார்கள். அங்கும் சோதனை சம்பிரதாயங்களை முடித்துவிட்டு அரசகட்டுப்பாட்டில் இல்லாத மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளுக்கு மீண்டும் இடர்மிகு பயணத்தை தொடர வேண்டும். சிலவேளை மறுநாள் தான் வீடு போய் சேரலாம்.

மன்னார் தீவு பற்றாக்குறையான வளங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். அது தாங்கிக் கொள்ளக் கூடிய சனத்தொகைக்கு மேலதிகமான சனத்தொகையை கொண்டுள்ளது. இங்கும் வவுனியாவைப் போல் புதிதாக வருபவர்கள் மூன்றுநாள் பாஸ், ஒருகிழமை, இரண்டுகிழமை, ஒரு மாதம் என பாஸ்கள் பொலிசாரால் வழங்கப்படுகின்றன. இங்கு வரிசைப் படுத்தியது போல் எளிதாக இந்தப் பாஸ்களைப் பெற்று விடமுடியாது.

இங்கு நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு இராணுவத்தினால் அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளது. இந்த அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் மாத்திரம் தான் கொழும்புக்கோ, தென்பகுதிக்கோ இலகுவாக செல்ல முடியும். மற்றவர்கள் செல்வது மிகமிகக் கடினம். செவ்வாய், வியாழன், சனி கிழமைகளில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத மன்னார் பகுதிக்கும், அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கும் இடையே போக்குவரத்து அனுமதிக்கப் படுகிறது. 800பேர் வரையில் வந்து செல்கிறார்கள். 7-8 பஸ் வண்டிகளும் மினி வான்களும் சேவையில் ஈடுபடுகின்றன. அனுமதிக்கப்படும் பொருட்கள் உணவுப்பொருட்கள் தவிர 5 லீட்டர் மண்ணெண்ணை, தேங்காய் எண்ணெய், சைக்கிள் ரயர், ரீயூப் 1, ஊது பத்தி, சவர்க்காரம் போன்ற பொருட்களே அனுமதிக்கப் படுகின்றன. பச்சை, நீலம், கறுப்பு உடைகள், தொப்பிகள், பைகள் அனுமதிக்கப்படுவதில்லை.

ஒரு பஸ்வண்டியில் 140 தொடக்கம் 160வரை ஏற்றப் படுகிறார்கள். ஆனால், ஒரு பஸ்ஸில் 60க்கு குறைவானர்களே பிரயாணம் செய்ய முடியும். கொழும்பு செல்லும் பயணிகள் வண்டிகள் தள்ளாடி இராணுவ முகாமுக்கு சென்று அங்கிருந்து இராணுவ வாகன அணிகளுடனேயே பயணிக்க முடியும். சிவிலியன் பஸ்களில் இராணு வத்தினரும் கலந்து செல்கிறார்கள்

மீன்பிடி அனுமதி

காலை 6.30மணிக்கு தொழிலுக்கு சென்றால் மாலை 5.30 மணிக்குள் திரும்பி வரவேண்டும். 15குதிரைவலு இயந்திரங்களையே பாவிக்க முடியும்.

விலைவாசி

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஏறி இறங்கிய படியே இருக்கின்றன. அரிசி 28 ரூபாவிலிருந்து 30ரூபா வரை விற்கப்படுகிறது. சன்லைட் 10.50, காய்கறி 80ரூபா தொடக்கம் 90ரூபா, மீன் கொழும்புக்கு ஏற்றப்படுவதால் மன்னாரில் 80ரூபா பாதை திறப்பதற்கு முன்னர் இருந்ததைவிட தற் போது மண்ணெண்ணை தட்டுப் பாடு என மன்னார் தீவு வாசிகள் தெரிவிக்கிறார்கள்.

அகதிமுகாம்

பேசாலையில் சராசரி 200[illegible] பேர் தங்கயுள்ளார்கள். அந்[illegible] முகாம் பனை ஓலையால் வேய[illegible] பட்டது. வசதிகள் குறைந்தது[illegible] மன்னார் பாடசாலைகளும் சி[illegible] சந்தர்ப்பங்களில் இந்த ம[illegible] களுக்கு பொருட்களை சேக[illegible] த்து கொடுத்தன. மன்னார் செ[illegible] லகம் தான் இந்த முகாமை பா[illegible] மரிக்கிறது. சமைத்த உணவு த[illegible] போதும் வழங்கப்படுகிறது. [illegible] சாலையில் சிறிய வைத்தி[illegible] சாலை உண்டு. ஆனால் பே[illegible] லை மக்களும் சரி அகதிமுகா[illegible] களில் இருப்பவர்களும் சரி [illegible] கிலோ மீட்டருக்கு அப்பால் இ[illegible] க்கும் மன்னார் வைத்தியசா[illegible] க்குத்தான் வரவேண்டும்.

தண்ணீர்

மன்னாரின் பாரிய பி[illegible] சினை இது. கீரி என்ற இடத்தி[illegible] ருந்து கொள்கலன்கள் மூ[illegible] மன்னார் நகருக்கு தண்[illegible] வினியோகிக்கப்படுகிறது. [illegible] குடம் தண்ணீர் 1.50 இலிரு[illegible] 2.00 ரூபா வரை விற்கப்ப[illegible] றது. ஒரு குடும்பத்திற்கு 2கு[illegible] தண்ணீரே அனுமதிக்கப் ப[illegible] றது. பல்வேறு இயக்கங்க[illegible] சமூகநல ஸ்தாபனங்களும், [illegible] னார் செயலகமும் தண்ணீ[illegible]

தொடர்ச்சி 9ம் ப[illegible]

www.padippakam.com

தனிநாட்டுக் கோரிக்கையும் தமிழ் மக்களும்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இப்போதும் தனியரசு நிறுவுவதற்கான கோரிக்கையை ஆதரிக்கின்றார்களா? தனியான தமிழீழ அரசு நிறுவப்படக் கூடியவசதிகள், வாய்ப்புக்கள் இப்போதும் இருக்கின்றதா? பாதுகாப்பு படையினருக்கும், சிறீலங்கா அரசாங்கத்திற்கும் எதிராக, தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் செயற் பாடுகள் மூலம் "தமிழீழத் தனியரசு" நிறுவப்பட முடியுமா? என்பன போன்ற கேள்விகளை எழுப்பிப் பார்த்து கொள்கை ரீதியிலான தீர்க்கமான முடிவுகளை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலை தற்போது மேலெழுந்து வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நீடித்து நிலைக்கக் கூடியதுமான தீர்வு காணப்பட வேண்டும்.போரும், அதன் மூலம் ஏற்படும் உயிர் உடமை இழப்புக்களும் தவிர்க்கப்பட வேண்டும். எவருக்கும் இக் கருத்துக்களில் மாறுபாடான அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

எனினும், இவற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்காக விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்வோர் ஒரு புறம், விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தும் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கிப் போக வேண்டும் எனக் கருதுபவர்கள் மன்றி, அரசாங்கத்திற்கும் படையினருக்கும் எதிரான செயற்பாடுகளையும் இடை நிறுத்தியதுடன் ஜனநாயக வழியில் உரிமைக்கோரிக்கையை முன்னெடுப்பவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மதிப்பும் இத் தருணத்தில் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும்.

தனிநாட்டு கோரிக்கையின் தோற்றம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு தனியாகப் பிரிந்து ஒரு அரசமைப்பதே என்ற எண்ணம் அடங்காத்தமிழர் இயக்கத்தின் சி.சுந்தரலிங்கம் அவர்களால் முன்வைக்கப்பட்ட போது தமிழ் மக்கள் அதனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பின்னர் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் வி.நவரத்தினம் தனிநாட்டை வலியுறுத்திய போதும் தனியரசுக் கோரிக்கை வலுவான செல்வாக்கைப் பெறவில்லை என்பது வரலாறு தரும் பாடம். எழுபதுகளின் பின்னரைப் பகுதியில் தான் தனியரசுக் கோரிக்கை மெல்ல மெல்ல செல்வாக்குப் பெறத்தொடங்கியது.

1972 ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு மூலம் சோல்பரி அரசியல் யாப்பில் வழங்கப்பட்ட சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு அம்சங்கள் அகற்றப்பட்டமை, தரப்படுத்தல் போன்றவற்றுமொரு சாரார், விடுதலைப்புலிகளுக்கு மாற்றான அரசியல் தலமைத்துவம் கட்டியெழுப்பப்பட்ட வேண்டுமெனக் கருதுபவர்கள் பிறிதொரு சாரார்.

இவ்வாறாக அடிப் படைப் பிரச்சினைகளில் காணப்படும் வேறுபட்ட அபிப்பிராய பேதங்கள் கருத்து வேறுபாடுகளாக வெளிப்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் அரசியல் சக்திகளிடையே பிளவு மையினம் என்பதன் அடிப்படையாகிறது. இந்தப் பின்னணியில் தமிழ் மக்கள் மத்தியில் தனிநாட்டுக்கான தமிழீழம் அமைப்பதற்கான ஆதரவு குறித்து மீள் பரிசீலனை செய்து கொள்வது அவசியமுடையதாக இருக்கும். தமிழீழக்கோரிக்கையை மட்டு மன்றி, அரசாங்கத்திற்கும் படையினருக்கும் எதிரான செயற்பாடுகள் மூலம் இனப் பாகுபாடு வெளிப்படையாகப் புலப்படுத்தப்பட்டமை, ஆரம்ப கால எதிர்ப்புணர்வின் உள்ளடக்கம் புரிந்து கொள்ளப்படாமல் மூர்க்கத்தனமாக அடக்கப் பட்டமை, என்பன போன்ற பல்வேறு காரணங்கள் சேர்ந்து மக்கள் மனதில் உணர்ச் சிவசப்படுத்தப்பட்ட நிலைமையைத் தோற்றுவித்தன உணர்ச்சிகளால் உந்தப்பட்ட அரசியல் சூழலின் குழந்தையாக தமிழீழக் கோரிக்கை உருவாகியது.

இளைஞர்களின் இந்த உணர்ச்சி அலையில் அள்ளுண்ட தமிழர் களின் அரசியல் தலமைகள் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை வெளியிட நிர்ப்பந்திக் கப்பட்டன. 1975ன் பிற்பகுதியில் "புதிய தமிழ்ப் புலிகளும்", முத்துக்குமாரசாமி தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கமும் செயற்பாடுகளை ஆரம்பித்த பின்னரேயே தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணியாகி வட்டுக்கோட் டையில் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றியது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இந்த நிலைமையிலேயே 1977 பொதுத் தேர்தல் தமிழீழக் கோரிக்கைக்கான சர்வசன வாக்கெடுப்பாகப் பிரகடனம் செய்யப்பட்டது. வாக்களித்தல் போன்ற மிகச்சாதாரண ஜனநாயக செயற்பாடுகள் மூலமாக தனி நாடு எட்டப்பட்டு விடலாம் என்ற மனோ நிலையே அப்போது சாதாரண மக்களிடம் மலிந்திருந்தது என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

எனினும் 1977 பொதுத் தேர்தலைத் தொடர்ந்து இடம் பெற்ற கலவரங்களும், "போர் என்றால் போர்" என்று திமிர்த்தனமாக ஆட்சியாளர் விடுத்த அறைகூவலும் தனிநாடு அமைக்கப் போராட வேண்டுமென தமிழ் மக்களைத்தூண்டியது இது இலங்கையின் ஒருமைப் பாட்டிற்கு குரல்கொடுத்த வி. பொன்னம்பலம் போன்றவர்களைக்கூட தனிநாட்டுக்கு ஆதரவாக செயற்படவைத்தது.

தமிழீழ தேசிய மன்றமாக அமைந்து தமிழீழக் குடியரசின் அரசியலமைப்பை வரையும் முயற்சியில் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஈடுபட முன்வரவில்லை. எனினும் "தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள்" "ஈழத் தமிழர் இறைமை" போன்ற நூல்கள் வெளிவந்தன. அரசாங்கத்திற்கு எதிராகவும், இரகசியப் பொலீசாருக்கு எதிராகவும் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

இருந்த போதிலும் கூட போராட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்தவர்களை விடவும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சொந்த வாழ்வைச் செழுமைப்படுத்தியவர்களே அதிகம். தமிழீழக் கோரிக்கை பற்றி உரத்த குரலில் முழங்கிய பலரும், சிறீலங்கா அரசாங்கம் வழங்கிய வேலை வாய்ப்புக்களுக்கு முன்னால் மண்டியிட்டு நிற்க தமிழர் விடுதலைக் கூட்டணியும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு படியிறங்க வேண்டியதாயிற்று.

இந்தச் சபைகள் விடயத்திலும் ஜே.ஆர். அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ளாமையும், இராணுவ கெடுபிடிகள் அதிகரித்தமையும் தீவிரவாதம் வளர்வதற்கு செழிப்பான விளை நிலத்தை வழங்கியது. இதன் உச்சக்கட்டம் 1983ல் அரங்கேறியது. தமிழ் மக்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டதுடன் மிதவாத ஜனநாயக அரசியல் சக்திகளைக் கையாலாகதவர்களாக்கும் கைங்கரியங்களும் நடைபெற்றன.

குறிப்பாக அரசி யலமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தின் மூலம் தமிழர்களுக்கான பாராளுமன்றக்கதவுகள் மூடப்பட்டன. எனவே தான் இன ஒழிப்பு என்பதிலிருந்து தப்பிக் கொள்வதற்குப் போராடியே தீர வேண்டும் என்ற ஆர்வம் உந்தித் தள்ளியது. அதாவது தமிழர்களை தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கித் தள்ளிவிட்டதில் கொழும்பில் பதவியிலிருந்த அரசாங்கங்களுக்கே பெரும் பொறுப்பு உள்ளது என்பது கவனத்தில் கொள்ளப்பட்டாக வேண்டும்.

சர்வதேச அரங்கில் தமிழீழம்

1970 தொடக்கம் 1980 வரையிலான காலப்பகுதியில் சர்வதேச அரங்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் தமிழ் மக்களின் போராட்டம் முன்னிலைக்கு வருவதற்குப் பெரும் உந்துதலைக் கொடுத்தது எனலாம். 1976இல் கொழும்பில் உச்சி மாநாட்டை நடத்திய அணிசேரா நாடுகள் இந்துமா கடல் பிராந்தியம் அமைதி மண்டலமாக பிரகடனம் செய்ய வேண்டுமெனக் கோரி நின்றன. 1974ல் தமிழாராச்சி மாநாட்டின் சோகமான முடிவையடுத்து இலங்கைத் தமிழர்களின் துயரவாழ்வு வெளிச்சத்திற்கு வந்தது. சிறுபான்மையினர் உரிமைக்குழு (Minority Rights Group),சர்வதேச ஜுரர்கள் சபை (International Jurors Commission) சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty International) என்பன போன்ற சர்வதேச அமைப்புக்கள் பலவும் இலங்கைத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாகச் செவிசாய்க்கத் தொடங்கின.

இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட போக்கினால் ஒரு சாரார் தொடர்ந்து ஒடுக்கப்படுவதனை ஊர்ஜிதம் செய்த சர்வதேச அரசியல் நிலமைகள் போராட்டம் தொடர்வதற்கு வாய்ப்பளித்தன. 1978இல் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலம் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கியமையைக் காணலாம். இதனால் ஈழத் தமிழர் பலரும் நாட்டை விட்டு வெளியேறவும், அரசியல் காரணங்களுக்காக அடைக்கலம் கோரவும் வாய்ப்பான சூழ் நிலைகள் தோன்றின.

இதற்கு முன்பாக 1976 களிலேயே பாலத்தீன விடுதலை இயக்கம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான ஒரு நிலையை எடுத்ததுடன், ஈழத்து இளைஞர்களுக்கு பயிற்சி வசதியும், ஆயுத உதவியும் வழங்க முன்வந்திருந்தது. எனினும் 1983ன் பின்னர் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் பிரசன்னம் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. 1983ன் ஜூலை கலவரத்தையடுத்து இந்திய அரசின் விசேட தூதுவராக வந்த ஜி. பார்த்தசாரதியின் முயற்சி தொடக்கம் 1987ன் இந்திய இலங்கை ஒப்பந்தம் வரையிலான இந்திய அரசின் எத்தனங்கள் அனைத்தும் இலங்கைத்தீவின் ஒருமைப்பாட்டைப் பேணும் அதேசமயம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணப்படுவதையே இலக்காகக் கொண்டிருந்தது தெளிவு.

தற்போதைய நிலமைகளின் பின்னணி

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான இந்திய அரசின் முயற்சிகள் தோல்வி கண்டமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். எனினும் இந்தியாவின் முயற்சிகளை சந்தேகக் கண்களுடன் நோக்கிய கொழும்பு அரசாங்கத்தின் போக்கு, எதிர்க்கட்சிகளின் ஒத்துழையாமை என்பவற்றுடன். விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையிலான மோதலும் பிரதான காரணமாகும்.

விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தை மட்டு மன்றி, மாற்றுத் தமிழ்த் தலமைகள் உருவாகி வளர்வதையும் எதிர்ப்பது பிரதான இலக்காக இருந்துள்ளது. அதாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படவேண்டும் என்பதை விடவும் தமது தலமைத்துவம் நிலை நிறுத்தபட வேண்டும் என்பதிலேயே அவர்கள் குறியாக இருந்துள்ளனர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழான இடைக்கால நிர்வாக சபையைப் பொறுப் பேற்க முன்வராதது மட்டு மன்றி, வடகிழக்கு மாகாண சபை நிறுவப்பட்டு நிலை நிறுத்தப்படுவதையும் சீர்குலைக்கும் வகையில் தான் அவர்கள் செயற்பட்டுள்ளனர் என்பது காலம் கற்றுத்தரும் பாடம்.

பிரேமதாசா அரசாங்கத்துடன் இணைந்து இந்திய இராணுவத்தை வெளியேற்று வதில் அக்கறை காட்டிய அதே அளவுக்கு இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவும் சிந்திக்கப்பட்டிருக்குமேயானால் 1990ன் பின்னர் இரண்டாவது ஈழயுத்தம் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்காது. அரசாங்கம் பொருத்தமான மாற்றுத் தீர்வை முன்வைக்க வில்லை எனக்கருதுப வர்களும், விடுதலைப் புலிகளின் பேரம் பேசும் ஆற்றல் பலவீனப் பட்டு விட்டால் தமிழ் மக்களது உரிமைகள் நிலை நாட்டப் படாமல் போகலாம் என்று எண்ணுபவர்களும், கடந்த கால அரசியலில் ஏமாந்து போன அனுபவங்களைக் கொண்டிருப்பவர்களும் புலிகள் பலமடைவதை விரும்புகின்றனர். எனினும் இத்தகையவர்கள் கூட புலிகளின் தாகமான தமிழீழக் கோரிக்கையை ஆதரிப்பவர்களாக இல்லை என்பது உன்னிப்பாக நோக்கப்பட வேண்டியதாகும்.

தொடர்ச்சி 10ம் பக்கம் ☞

படிப்பகம்

www.padippakam.com

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகமா?"

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் தாரக மந்திரம் புலிகள் மாத்திரமல்லாமல் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ போன்ற இயக்கங்களும் தனி நாட்டுக்காகவே சிறீலங்கா அரசுக்கு எதிராக போராடப் புறப்பட்டன. ஆனால் 1986ம் ஆண்டில் ஈரோஸ் தவிர்ந்த சகல இயக்கங்களும்,. புலிகளால் தடை செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து வடமராட்சியில் நடைபெற்ற ஒப்பரேசன் லிபரேசனில், சிறீலங்கா இராணுவம், பாரிய பிரதேசத்தைக் கைப்பற்ற அதனை எதிர்கொள்ள முடியாத புலிகள் வடமராட்சியில் இருந்து பின் வாங்கினர்.

இந்திய தலையீடு

யாழ்குடா நாட்டையும் இழந்தால் பேரம் பேசமுடியாமல் போய்விடும் எனக்கருதிய இந்தியா, தனது யுத்த விமானங்களை யாழ்ப்பாணம் மீது பறக்க விட்டு உணவுப் பொட்டலங்களைப் போட்டதன் மூலம் இலங்கை அரசை பணியவைத்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கியது.

இவ் ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருந்த பொழுதும், புலிகள் உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் இதனை ஏற்றுக் கொண்டன. ஆனால் பின்னர் புலிகள் தமது ஆதரவில் இருந்து பின்வாங்கி இந்திய அமைதி காக்கும் படையுடன் ஓர் யுத்தத்தை ஆரம்பித்தனர். 1987கடைசிப் பகுதியில் ஆரம்பித்த இவ் யுத்தம், 1990இல் இந்திய அமைதிகாக்கும் படை மீண்டும் இந்தியா செல்லும் வரை நீடித்தது. இவ்யுத்தத்தில் 1200க்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 4000பேர் வரையில் காயமடைந்தார்கள்.

இந்திய இராணுவத்தை வடகிழக்கில் இருந்து விரட்ட புலிகள் பிரேமதாசா அரசுடனும் ஓர் இரகசிய ஒப்பந்தத்திற்கு வந்திருந்தார்கள். இதனால் பிரேமதாசா அரசும் இவர்களுக்கு பல மில்லியன்கள் பெறுமதியான ஆயுத்தளவாடங்களைக் கொடுத்தார்கள்.

ராஜீவ் கொலை

இதனால் புலிகளுக்கும் இந்திய அரசுக்குமிடையிலான நட்பு என்பது சீரழிந்தது. இதன் பின்னர் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அவர்கள், புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலால், சென்னை சிறீபெரும்புத்தூரில் கொல்லப்பட்டார்.

புலிகள் இதனை மறுத்த போதும், இக்கொலையுடன் சம்பந்தமான இலங்கை, இந்தியா வைச் சார்த்த பல புலி முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட, இன்னும் பல புலிகள் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்கள். இன்று கைது செய்யப்பட்ட புலிகளுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும், மரணதண்டனை விதித்து சென்னைத் தனி நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. ராஜீவ்காந்தியின் கொலை தமிழ் நாடு உட்பட முழு இந்தியாவிலும், புலிகளின் மேல் மாத்திர மல்லாமல், ஈழத்தமிழர் மீதே ஆத்திர உணர்வைக் கிளப்பியது.

இதன்பின்னர் இலங்கையில் நடக்கும், இன அழிவுகளையோ, மனித உரிமை மீறல்களையோ இந்தியா கண்டுகொள்வதாக இல்லை. இப்படியான இன அழிவுகளைக் கண்டித்தால், அது புலிகளுக்கு ஆதரவாக இருந்து விடும் என்ற நோக்கிலேயே இவை கண்டு கொள்ளாமல் விடப்படுகின்றன. அது மாத்திர மல்லாமல் ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர், விடுதலைப்புலிகள் இந்திய அரசால் பயங்காரவாத இயககமாகப பிரகடனப்படுத்தபட்டார்கள்.

புலிகள் பயங்கரவாத அமைப்பாக பிரகடணம்

மொத்தத்தில் ஈழத்தமிழரின் ஆத்மார்த்த நட்பு சக்தியொன்றை புலிகளின் செயற்பாடுகளால் தமிழ் மக்கள் இழந்தார்கள். இது பாரியளவில் யுத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு ஓர் உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின்னர் எந்தவித காரணமுமின்றி வடமாகாணத்தில் இருந்த 75000 க்கு மேற்பட்ட முஸ்லீம் மக்கள் உடுத்த உடுப்புடன், தென் பகுதிக்கு விரட்டப்பட்டார்கள். இதனால் புலிகள் இனச்சுத்திகரிப்பில் ஈடுபட்டுள்ளார்கள், என்ற செய்தியே உலகெங்கும் பர வியது. இது புலிகள் உண்மையாக ஓர் பயங்கரவாத அமைப்புத்தான் என்று உலகத்தை நம்பவைத்தது. இறுதியாக கொழும்பில் நடந்த பாரிய குண்டு வெடிப்புகளால் பல நூறு பொது மக்கள் கொல்லப்பட, அமெரிக்காவும் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப் படுத்தியது.

இவையெல்லாம் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தியதுடன் நில்லாமல் முழுப் போராட்டத்தையுமே பயங்கரவாதப் போராட்டம் என்றே பார்க்கச் செய்தது. இதனால், தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்த சகல சக்திகளும் மௌனித்துப்போயினர். இவற்றுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளான சுவிற்ஸ்லாந்து, பிரான்சு, ஜேர்மனி, லண்டன் போன்ற நாடுகளிலும், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும், புலிகளின் உறுப்பினர்களில் பலர் போதைவஸ்து கடத்தலில் பிடிபட்டு சிறையிலடைக்கப் பட்டனர். இதுவும் கூட புலிகள் தொடர்பான பிழையான பார்வை ஏற்படக் காரணமாக இருந்தது. எனவே முதலாவதாக சர்வதேச ரீதியில் ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவை சீர்குலைத்த விடயத்திற்கு புலிகள் பொறுப்பேற்க்க வேண்டும்.

இரண்டாம் கட்ட ஈழப்போர்

மறுபுறத்தில் இந்திய இராணுவம் வெளியேறியதும்,வடக்கு கிழக்கில் பெரும் பிரதேசத்தை புலிகள் தம்வசம் வைத்திருந்தார்கள். ஆனால் பிரேமதாசா அரசுடனான இரண்டாம் கட்ட ஈழப்போரில் கிழக்கில் இருந்து புலிகள் விரட்டப்பட்டு கிழக்கு மாகாணத்தில் மிகப் பெரும்பகுதி முழு இராணுவக் கட்டுப் பாட்டிற்குள் வந்தது. பின்னர் வடக்கு மாகாணமே புலிகளின் பெரும்கோட்டையாக கருதப்பட்டது. இங்கு இலங்கை அரசுக்கு சமாந்திரமாக ஓர் நிர்வாகம் இவர்களால் நடாத்தப்பட்டது. தமக்கான பொலீஸ்படை, நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதுடன், சிவில் நிர்வாகமும், இவர்களின் ஒப்புதலுடனேயே எக்கருமத்தையும் ஆற்ற முடிந்தது.

ஆனால், சந்திரிகா அரசுடன் ஏற்பட்ட மூன்றாம் கட்ட ஈழப்போரில் அது யாழ்குடா நாட்டை இழந்ததுடன், பின்னர் வவுனியா, மன்னாருக்கான ஓர் தரை வழிப்பாதையும் இராணுவத்தால் திறக்கப்பட்டது. இன்று "ஜெயசிக்குறு" என்ற இராணுவத்தாக்குதல் மூலம் யாழ்ப்பாணத்திற்கான வீதி திறக்கும் யுத்தத்தையும் சிறீலங்கா அரசு நடாத்திவருகின்றது. இதனால் வன்னியின் பெருநிலப்பரப்பில் பல இடங்கள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு வருகின்றது. மொத்தத்தில் வடமாகாணத்தின் முக்கியமான பல பிரதேசங்கள் புலிகளின் கையைவிட்டுச் செல்வதையே துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

இது இராணுவரீதியில் புலிகள் மிக வேகமாக வீழ்ச்சி அடைந்து வருவதையே காட்டுகின்றது. மொத்தத்தில் அரசியல் ரீதியிலும். இராணுவ ரீதியிலும் பலவீனப்பட்டு போகின்றனர். ஏனைய இயக்கங்களுக்கெதிரான புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கையானது ஏனைய இயக்கங்கள் அரசுக்கெதிரான ஜனநாயகப் போராட்டங்கள் நடாத்துவதையும் இயலாமலா க்கியுள்ளது. மிகமோசமான பலவீனமான சூழ்நிலையில் கூட, ஜனநாயகத்தை மறுப்பதும், ஐக்கியத்தை மறுப்பதும், முழுத்தமிழ் மக்களின் தியாகங்களையும் கூட அர்த்தமற்ற தாக்கிவருகின்றது.

மொத்தத்தில் புலிகளின் முழு நடவடிக்கைகளுமே தனி நாட்டுக்கெதிரானதாக மாத்திர மல்ல, தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும் எதிராகவே உள்ளது.

சிறீலங்கா அரசின் சதி

இதே சமயம் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட சதிவலைகளுக்கும் இவர்கள் அடிக்கடி அகப்பட்டுவிடு கின்றார்கள். இந்தியா இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் ஜே.ஆர். ஜெவர்த்தனாவும், முக்கியமாக அத்துலத்முதலியும், இந்தியப்படையுடன் புலிகளை மோதவைப்பதற்கான சூழ்ச்சிகளைச் செய்தார்கள்.

அச் சமயத்தில் இந்திய அரசு தனிநாட்டை ஆதரிக்கா விட்டாலும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்தது. அதற்காகவே இந்தியப் படையையும் இங்கனுப்பியது. இந்திய அரசு தமிழ் மக்களுக்கு சாதகமாக நடந்து கொள்வதை மாற்றி தமிழ் மக்களுக்கு எதிராக திசை திருப்புவதே இலங்கை அரசின் திட்டம்.

புலிகளின் குறுகிய பார்வையால், அவர்களும் இந்திய இராணுவத்துடன் மோதலில் இறங்கினார்கள். அம்மோதலாலுதும் அதைத் தொடர்ந்து இடம் பெற்ற ராஜீவ்காந்தியின் கொலையாலும் இன்று முழு இந்தியாவுமே ஈழத்தமிழர் மீது பகைமை பாராட்டும் சூழலை ஏற்படுத்தி யுள்ளது.

முன்னைய அரசுகள் ஒழுங்காக யுத்தம் புரியவில்லை என்ற காரணத்தைக் கூறி இன்றைய அரசு பாரிய அளவிலான யுத்தம் ஒன்றைக்கட்டவிழ்த்து விட்டுள்ளது. இது புலிகளுக்கெதிரான யுத்தம், தமிழ் மக்களுக்கெதிரானது அல்ல என்றும், சமாதானத்திற்கான யுத்தம் என்றும் பிரச்சாரப் படுத்தப்படுகின்றது. ஒன்றரை வருடமாக இராணுவத்தால் மாங்குளத்தை பிடிக்க முடியவில்லை, இதற்கு புலிகளின் வீரம் செறிந்த எதிர்த்தாக்குதல் தான் காரணம், அவர்கள் விட்டு விடமாட்டார்கள், மீண்டும் வடகிழக்கை இராணுவத்திடம் இருந்து மீட்பார்கள், என புலிகளும் அவர்களுக்காதரவான பத்திரிகைகளும் பிரச்சாரப் படுத்துகின்றன.

ஆனால் இவ் யுத்தத்தின் பின்னால் உள்ள அரசின் சதிவலையை இவர்கள் உணராததுதான் வேடிக்கைக்குரியது. இவ்யுத்தம் நீடித்துக் கொண்டு போவதானது புலிகளை பலவீனப்படுத்துவதுடன், தமிழ் மக்களில் பாரிய அளவினை இல்லாதொழிப்பதுமே இவர்களது நோக்கம்.

ஏற்கனவே 60,000மேற்பட்ட தமிழ் மக்கள் தமது இன்னுயிரை இழந்துள்ளதுடன், 8 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக வெளி நாடுகளில் குடியேறியுள்ளனர். இவர்களில் 90வீதம் திரும்பி வரும் என்றே எதிர்பார்க்க முடியாது. தொடரும் யுத்தத்தால், இன்னும் ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேறிய வண்ணமே உள்ளனர். இந்நிலையில் இவ் யுத்தம் இன்னும் 5வருடம் தொடர்ந்தால் எமது அழிவுகளும், அகதிகளாவதும், எவ்வளவு தொடரும் என்று யாரும் சிந்தித்துப் பார்க்கலாம். சிறீலங்கா அரசைப் பொறுத்தவரையும் சிங்கள வெறியர்களைப் பொறுத்தவரையும் இவ்யுத்தம் தொடர்வதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களை மிகக்குறுகிய ஓர் சிறுபா ன்மை இனமாக்கி விடலாம். இதனால் நாம் கோரும், தனிநாடு மாத்திரமல்ல மாகாண சுயாட்சியைக் கூட பின்னர் கொடுக்க வேண்டி ஏற்படாது.

எனவே, புலிகளின் ஒவ்வொரு நடவடிக்கையும், எதிரிக்கு சாதகமாக அமைகின்றதே தவிர, தமிழ் மக்களுக்கோ அல்லது தனிநாட்டுக்கோ அல்ல என்பது தான் உண்மை.

எந்த ஒரு சிறீலங்கா அரசு இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கு சுய அதிகாரங்கள் கொடுக்க விரும்பாது என்பது யதார்த்தமானது. இந்நிலையில் இந்தியாவின் நட்பை புலிகள் விரோதிக்காமல் இருந்திருந்தால் இந்தியாவின் விருப்பமின்மை யையும் மீறி இந்தியாவே தனி நாடொன்றை அமைக்கும் எமது பணிக்கு உதவி செய்ய நிர்ப்பந்தப் படுத்தப்பட்டிருக்கும். அதற்கான களத்தை இலங்கை அரசே உருவாக்கிகொடுத்து வந்தது. அதையும் புலிகள் தங்கள் நடவடிக்கையால் சீரழித்தார்கள்.

எனவே இந்த நிதர்சனமான யதார்த்தங்களை புலிகள் மாத்திரமல்ல, தமிழ் பத்திரிகைகளும், தமிழ் மக்களும் புரிந்து கொள்வதன் மூலமே நாம் சரியான தடத்தில் செல்ல முடி

செல்

படிப்பகம்

www.padippakam.com

தினமுரசு ஆசிரியர் ரமேஷ் எம்.பிக்கு, ஆவரங்கால் சிவலிங்கத்தின் பகிரங்க மடல்

கடந்த ஒரு வருடமாக உங்களது பத்திரிகையை தவறாமல் படித்துவரும் வாசகர்களில் நானும் ஒருவன். முன்னர் உங்களது பத்திரிகை யாழ்ப்பாணத்திற்கு வராததால் என்னால் தொடர்ச்சியாக அதனைப் படிக்க முடியவில்லை எங்காவது கிடைத்தால் வாசிப்பது என்பதுடன் சரி. மிகவும் ஜனரஞ்சகமான உங்கள் பத்திரிகையில் ஆரம்பம் முதல் இறுதிவரை நான் எதனையும் விடுவதில்லை முன்னர் இங்கு ஈழநாதம், உதயன் போன்ற தினசரிகள் வந்தபோதும் அவை ஏறத்தாழ ஒரே செய்திகளைத்தான் கொண்டிருக்கும்.

இப்பொழுது கொழும்பில் இருந்து வரும் சகல பத்திரிகைகளும் இங்கு கிடைக்கின்றன. என்னை ப்பற்றியும் ஓரிருவரிகள் குறிப்பிட்டுச் சொல்வது நல்லதென எண்ணுகின்றேன்.

கல்விப்பொதுத்தராதர வகுப்பில் உயர்தரம் வரையில் படித்துவிட்டு எமது தோட்டம் துரவுடன் வாழ்க்கை போகின்றது. ஆனாலும், பலதையும் வாசிக்கவும், அறிந்துகொள்ளவுமான ஆர்வமுள்ளவன் என்பதுடன், 1980 நடுப்பகுதியில் இருந்து எமது அரசியலையும் போராட்டத்தையும் அவதானித்தும் வருபவன்.

இதனால் சகல இயக்கங்களின் வெளியீடுகளையும் இயன்றவரை அல்லது கிடைப்பவற்றையாவது வாசித்து வருபவன். இந்த அடிப்படையில்தான் எனது மனதில் பட்ட சில கருத்துக்களை உங்களுக்கு எழுதலாம் என நினைத்தேன். இவற்றை எழுதுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

நீங்கள் தினமுரசு ஆசிரியர் என்பதுடன் எமது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும், ஈ.பி.டி.பியின் அரசியல் குழுச் செயலாளராகவும் பதவி வகித்து வருவதாகவும் அறிந்தேன். உங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, சிவதாசன் போன்றவர்களையும் உங்களில் இருந்து பிரிந்து சென்ற இராமேஸ்வரன், இராமமூர்த்தி போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கும் வாய்ப்பு யாழ்ப்பாணத்தில் எனக்கு கிடைத்த போதும் உங்களையோ அல்லது உங்கள் இயக்கத்தின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையோ சந்திக்கும் வாய்ப்புகிடைக்கவில்லை. இவையும்கூட உங்களுக்கு ஓர் மடலை வரையவேண்டும் என்ற ஆர்வத்தை எனக்குள் தூண்டியது.

உங்கள் பத்திரிகை மிகவும் ஜனரஞ்சகமானது. சினிமாப்பக்கம், இடி அமீன் தொடர், பெண்கள் பக்கம், சிறுவர் பக்கம், சிறுகதைகள், இலக்கிய நயம் போன்றவற்றை தவிர்த்தால், நாரதர் எழுதும் எக்ஸ்ரே ரிப்போட், ராஜேந்திரியின் அலசல், அதிரடி யாத்துரை, காதிலை பூ கந்தசாமி போன்றவை சமகால அரசியலை அலசுவதாகவும், அவற்றை கலை கிண்டல் செய்வதாகவும் அமைந்து வருகின்றது. இது விர துரையப்பா முதல் காமினி ரை என்ற உங்கள் வரலாற்றுத் தொடரும் வெளிவருகின்று.

அரசியல் தொடர்பான உங்ர் அலசல்களிலும் சரி, இல்லையேல் உங்கள் வரலாற்றுத் தொடரிலும் சரி, பல பிழையான டயங்களை, உண்மை என்பதால் நீங்கள் எழுதுகின்றீர்கள். க்கியமாக ஈ.பி.ஆர்.எல்.எவ் லிருந்து பிரிந்து சென்று ஈ.பி.பி என்ற புது இயக்கத்தை தொடங்கிய நீங்கள் அதுவும் பிரேமதாசா பதவிக்கு வந்த னரே கொழும்பில் உங்கள் க்கத்தை தொடங்கிய நீங்கள் லாற்றுத் தொடர் ஒன்றை தும் பொழுது, தமிழீழ விடுதலைப்புலிகள் ஒவ்வொரு தாக்லையும் எவ்வாறு திட்டமிட் செய்தார்கள்,. என அக்கு று ஆணி வேறாக, களத்தில் நின்று எழுதுவது போல் எழுதுகின்றீர்கள். இது எப்படி என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமத்துவத்தை அவர்களுடன் இன்பத்திலும், துன்பத்திலும் ஒன்றாக இருந்த எம்மாலே யே சந்திக்க முடியாமல் இருக்கும் பொழுது, யாழ்ப்பாணத்தையே எட்டிப் பார்க்காத, புலிகளுக்கு விரோதமான ஓர் இயக்கத்தில் இருந்து கொண்டு, பிரபாகரன் இப்படித்தான் திட்டமிட்டார், இப்படித்தான் செய்தார் என அவருக்குப் பக்கத்தில் இருக்கும் ஒருவர் அவதானித்து எழுதுவது போல் உங்களால் எப்படி எழுத முடிகின்றது.

உங்களது வராற்றுத் தொடரானது வாசிப்பதற்கு சுவாரஸ்யமான ஓர் நாவ லைப்போல் தோன்றுகின்றதே அல்லாமல், எமக்கு நேரடியாகத் தெரிந்த பல செய்திகளை நீங்கள் திரிபுபடுத்தியும், பிழை யாகவும் கொடுப்பது அது ஓர் வரலாற்றுத்தொடர் என்பதையே கேள்விக்குள் ளாக்கும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? வரலாறு என்பது பக்கம் சாரமல் நின்று வரலாற்று நிகழ்வுகளை பதிவு செய்ய வேண்டும் என நான் கருதுகின்றேன்.

ஆனால் உங்கள் தொடரில் ஏனைய இயக்கங்கள் தொடர்பான காழ்ப்புணர்ச்சியும், தமிழீழ விடுதைப்புலிகளை ஹீரோக்களாக காட்டும் ஓர் போக்கும் தென்படவில்லையா? தமிழீழ அரசியலை ஆழமாக தெரியாதவர்களும், இன்றைய இளைஞர்களும் யுவதிகளும் உங்கள் நவீனத்தை உண்மையான அரசியல் வரலாறென்று எடுத்துக் கொள்ளும் ஓர் துர்ப்பாக்கிய போக்குண்டு.

இதனால் எத்த னை ஆயிரம் மக்களுக்கு பிழையான தகவல்களையும், திரிபு படுத்தப்பட்ட செய்திகளையும் சொல்கின்றீர்கள் இது ஓர் சமுதாயத்தையே தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் என்று நீங்கள் கருதவில்லையா? அல்லது குறைந்த பட்சம் உண்மையான வரலாறொன்று படைக்கப்படும் பொழுது உங்கள் வரலாறும் அதை எழுதும் நீங்களும் எள்ளிநகையாடப்படுவீர்கள் என்பதையாவது சிந்தித்தீர்களா?

இதனைப் போன்றே உங்கள் அரசியல் அலசல்களில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளைத் தவிர்ந்த அனைவரையும் மிகக் காரசாரமாக விமர்சிக்கின்றீர்கள். பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவளிப்பதிலிருந்து, ஏனைய இயக்கங்களின் ஒவ்வொரு செயற்பாட்டையும்விமர்சிக்கின்றீர்கள்.ஆனால் இன்றைய தமிழ் அரசியல்களத்தினாலும் சரி, தேசிய அரசியலிலானாலும் சரி ஈ.பி.டி.பி ஓர் பாரியபங்களிப்பைச் செலுத்த முடியும்.

ஆனால் அதனை ஈ.பி.டி.பி. செய்கின்றதா என்பதனை நீங்கள்தான் கூறவேண்டும். பாராளுமன்றத்தில் அவசரசாலச்சட்டத்திற்கு கை உயர்த்தும் ஒரேயொரு தமிழ்க்கட்சி நீங்களதானே. ஈ.பி.டி.பியின் அரசியல் செயலாளராக இருக்கும் நீங்கள் இதையேன் நிறுத்த முடியாது. அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவளிப்பதால் உங்கள் கட்சிக்கு, அல்லது தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் கிட்டுகின்றது? இவ் அவசரகாலச்சட்டத்தின் கீழே அரசால் யுத்தத்தை நடாத்த முடிகின்றது.

மனித உரிமை மீறல்களைச் செய்ய முடிகின்றது. தமிழ் மக்களை வகைதொகையின்றி கைது செய்யமுடிகின்றது. இவை எல்லாம் பிழையென எழுதும் நீங்கள்ஏன் மாதாந்தம் அதற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் கை உயர்த்துகின்றீர்கள்? முதலில் நீங்களும் உங்கள் கட்சியும், உங்களுக்குள் இன்றும் உங்களை திருத்திக் கொள்ள வேண்டாமா வட-கிழக்கைச் சார்ந்த தமிழ்க் கட்சிகளுக்குள் இன்றும் நீங்கள் தானே பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளீர்கள். அப்படியாயின் நீங்கள்தானே முன்மாதிரியாக நடக்க வேண்டும்.

ஆனால் உங்கள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றார்கள்? யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு சமயாசமய ஊழியர்களை, வைத்திய அதிகாரி நியமித்தால், அவை எல்லாவற்றையும் நிறுத்தி நீங்கள் கொடுக்கும் நபர்களை நியமிக்கும்படி கேட்கின்றீர்கள். இல்லையேல் சமூர்த்தி வேலைக்கு நீங்கள் கொடுக்கும் பெயர்களை நியமிக் கும்படி கேட்கின்றீர்கள். இல் லையேல் மக்கள் காணாமல் போனால் கண்டன அறிக்கை விடு கின்றீர்கள். இவற்றுக்கு மேலாக வேலை வாய்ப்புத் தேடி பட்டதாரிகள் உண்ணாவிரமிருந்தால், ஆளும் கட்சி அமைச்சரைப் போன்று ஒருவாரத்திலோ, ஒரு மாதத்திலே வேலை பெற்றுத்தருவதாக உத்தரவாதம் கொடுத்து அவர்களது போராட்டத்தையே திசை திருப்புகின்றீர்கள்.

யாழ்ப்பாணத்தில் உங்கள் பிரதிநிதியாகச் செயற்படும் ஜெகன் மூலம் நாளாந்தம் பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுகின்றீர்கள். எனவே தான் ஏனைய இயக்கங்களைக் கண்டிக்குமுன் உங்களைத் திருத்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். இவ்விடத்தில் இன்னொருவிடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும்.

பிரேமதாசா அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் நீங்கள் மக்கள் குரல் என்ற நிகழ்ச்சியை இலங்கை வானொலியில் நடத்தி வந்தீர்கள். எம்மிடம் பற்றறி இல்லாத போதும், சைக்கில் டைனமோவில் இருந்து மின்சாரம் பெற்று அந்நி கழ்ச்சியைக் கேட்டு வந்தோம். அதனைக் கேட்பதே குற்றமாகருதப்பட்ட காலத்தில் நாம் மிகவும் இரகசியமாகவே அதனைக்கேட்க்க வேண்டி இருந்தது. அன்று எவ்வாறு அதீதமான முறை யில் புலிகள் விமர்சிக்கப் பட்டார்களோ இன்று அதேய எவு அதீகமான முறையில் அவர்களின் புகழ் பாடுகின் றீர்கள்.

இவை ஒரு புறமிருக்க, அரசாங்கம் முன்வைத்த தீர்வுத்திட்டம் நீங்கள் விரும்பியவாறு திருத்தப்படவில்லை. காணாமல் போனோருக்கு பதில்லை, யுத்தம் நிறுத்தப்படவில்லை, உலர் உணவுகள் வெட்டப்பட்டுள்ளது, இப்படி பல விடயங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றுக்கெதிராக பாராளுமன்ற உறுப்பினராகிய நீங்கள் எவ்வாறு செயற்படுகின்றீர்கள்? எப்பொழுதாவது எங்கள் முன் வந்து இப்பிரச்சினைகளுக்கெதிராகப் போராட வேண்டுமென நீங்கள் கேட்டதுண்டா? நீங்கள் வெறும் பத்திரிகை ஆசிரியர் மாத்திர மல்ல பாராளுமன்ற உறுப்பினரும் உங்கள் கட்சியின் அரசியல் செயலாளரும் கூட. அப்படியாயின் நீங்கள்தானே எங்களுக்கு தலைமைத்துவம் தரவேண்டும்.

ஆனால் அதனை விடுத்து, மூன்றாம் நபர் ஒருவர் விமர்சிப்பது போல் எல்லோரையும் கண்டிக்கின்றீர்களே அதுதான் விந்தையாக உள்ளது. அது மாத்திரமல்ல சரி பிழைகளுக்கப்பால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ போன்ற இயக்கங்கள் சில விடயங்களைக் கூட்டாக செய்ய முயற்சிப்பது போல் தோன்றுகின்றது.

அதனைப்போல் ஏனைய மாவட்டங்களிலும் சில இயக்கங்கள் கூட்டான சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது அப்படியாயின் உங்கள் கட்சியும் இவர்களுடன் இணைந்து கூட்டாக ஏன் செயற்படக்கூடாது.

அண்மையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கொழும்புக்கு வந்த போது ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரார்த்தனைக் கூட்டங்களை வட-கிழக்கில் ஏற்பாடு செய்தது. இது தொடர்பாக ஓர் துண்டுப்பிரசுரத்தையும் அவர்கள் வெளியிட்டிருந்தார்கள். அதில் ஏன் இப்பிரார்த்தனைக் கூட்டம் என்பதனையும் விளக்கி இருந்தார்கள். குறிப்பாக தமிழ் மக்களின் மன உணர்வுகளைத் தெரிவிப்பதற்காகவே இவ்வகையான நடவடிக்கை ஒன்று தேவை என்பதை விளக்கி இருந்தார்கள். ஒருபக்கம் சிறீலங்கா இராணுவம் மறுபக்கம் புலிகள் இவற்றின் மத்தியில் மக்கள் போராட் டங்களை நடாத்துவது சுலபமானதல்ல.

ஆனால் அப்படி வரக்கூடிய எந்த ஒரு போராட்டத்தையும் நாம் ஆதரிக்க வேண்டுமே தவிர அதனைக் கிண்டல் பண்ணி அதனை நிராகரிப்பது ஆரோக்கியமானதல்ல. ஆனால் உங்கள் பத்திரிகை அளவுக்கதிகமாகவே அதனைக்கிண்டல் பண்ணியது. பிரார்த்தனைக் கூட்டம் என்றாலே பிழை என்ற சாரப்பட நீங்கள் எழுதியிருந்தீர்கள்.

ஆனால் பயக்கெடுதியில் வாழும் மக்களை தெருவுக்கு கொண்டுவர இப்படியான செயற்பாடுகள் தேவை என்பதை ஏனோ மறந்து விடுகின்றீர்கள். அதே சமயம் உங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா குணமடைய உங்கள் தோழர்களே இங்கு பல கோயில்களில் பூசையில் ஈடுபட்டார்கள். அதனை நீங்கள் கண்டுகொள்ளவில்லை. இவை பிழையென எடுத்துக்கொண்டால், இதிலும் விட சரியான வழியை நீங்கள் காட்ட வேண்டும். ஆனால் எம்மால் தான் உங்கள் முகத்தையே பார்க்க முடியாமல் உள்ளது. இந்நிலையில் எப்படி உங்களால் தலைமைத்துவம் கொடுக்க முடியும்.

இன்றுள்ள சூழ்நிலையில் சராசரித் தமிழனைப் போல் அங்கு மிங்கும் மாறி மாறிப் பாட்டுப் பாடுவதல்ல முக்கியம். வட-கிழக்கில் தமிழ் மக்களுக்கென சகல அதிகாரங்களும் அடங்கிய ஓர் மாகாண அரசை நிறுவுவதே முக்கியம். அதனை இலக்காகக் கொண்டு செயற்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும். இதற்கு உங்கள் பத்திரிகையும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பயன்படவேண்டும் என்பதே எனது விருப்பம்.

இறுதியாக ஓர் விடயத்தை சொல்லி முடிக்கலாம் என நினைக்கின்றேன். தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்றுப் போனால், தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்காமல் போய்விடும் என்ற சிந்தனையில், நீங்கள் அவர்களைப் போற்றி எழுதக்கூடும். மக்களின் மனதை வெல்லாதவர்கள் எவரும் தோற்றுத்தான் போவார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளும் மக்களை உருட்டி மிரட்டி, வாய்பொத்தி ஊமையாக்கி பார்வையாளர்களாகவே வைத்திருந்தார்கள்.

அவர்கள் எப்பொழுதும் எமது மனதை வெல்ல வேண்டுமென செயற்பட்டதில்லை. இன்று தமிழ் மக்கள் இழக்க வேண்டிய அத்தனையும் இழந்துகளைத்து விட்டார்கள். இனியும் யாழ் மண் ணில் புலிகள் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பார்கள் என்று எதிர்பாற்ப்பதற்கில்லை. எனவே மாற்றீடான ஓர் தலைமைத்துவம் தேவை. மக்களைக்கவரக் கூடிய, மக்களை அரவணைக்கக்கூடிய, மக்களுக்கு வழிகாட்டக்கூடிய ஓர் தலைமைத்துவம் தேவை அதற்கு உங்கள் பத்திரி கை உதவினால் தமிழ் மக்கள் நன்மையடைவார்கள்.

மு. சிவலிங்கம்
ஆவரங்கால்.

பிற்குறிப்பு

இது தினமுரசு பத்திரிகைக்காக எழுதப்பட்டமடல். ஆனால் அப்பத்திரிகையின் வாசகர் கடிதங்கள், ஒரிரு வரியிலேயே பிரசுரிக்கப்படுகின்றன. எனவே இந்த நீண்ட மடலை பிரசுரிக்க அவர்களது பத்திரிகை இடம் கொடுக்கும் என்பது சந்தேகமே என்பதால், இம்மடலை தங்கள் பத்திரிகைக்கு அனுப்புகின்றேன். இயலுமானால் பிரசுரிக்கவும்.

படிப்பகம்

www.padippakam.com

நடந்து முடிந்த பேச்சுவார்த்தையில் நழுவிப் போன வாய்ப்பு.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும். பேர் நிறுத்தப்படவேண்டும். என்பவற்றில் எவருக்கும் இருவேறு கருத்துக்கள் இருக்காது. எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வுகாண்பதில் விடுதலைப்புலிகளை அரசியல் பேச்சுவார்த்தை அரங்கிற்கு கொண்டுவர வேண்டும் எனவும் கூறப் படுகிறது. இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா மீண்டும் திரும்பிப்பார்க்க வேண்டும் என தமிழ் மக்களின் பலதரப்பட்டவர்களும் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வரும் இத்தருணத் தில் இந்திய அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகள் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதை மீட்டுப்பார்ப்பது பயன்பொருத்தமானதாகலாம்.

எனவேதான் கொழும்புப்பணி (Assignment Colombo) என்ற தலைப்பில் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜி.எச். தெக்சித் எழுதி வெளியிட்டுள்ள புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை மறு பிரசுரம் செய்கின்றோம். இதன் மூலம் எத்தகையதொரு வாய்ப்பு தவறவிடப்பட்டு தமிழ் மக்களுக்கு துன்பமும் துயரமும் தொடர்கதையாக வாய்த்தது என்பதை மக்கள் புரிந்துகொள்ளக் கூடும்.

இதேவேளை 1986 டிசம்பர் முதல் 1994 ஏப்ரல் வரையிலான சுமார் 8ஆண்டுகளுக்கு இடைப் பட்ட காலத்தில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் பல்வேறு பேச்சுக்களிலும் கலந்து கொண்டது தெரிந்ததே. ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசாங்கத்துடனும் விடு தலைப்புலிகள் மேற்கொண்டிருந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து போனவரலாறு எண்ணிப் பார்க்கப்படவேண்டியதாகும். எனவேதான் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை அரங்குக்கு வந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது என்பதை எதிர்பார்ப்பது கடல் வத்தும் என்று காத்திருந்த கொக்கு குடல் வத்தி செத்த கதையையே நினைவுபடுத்துவதாகலாம்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வானது இந்திய சட்ட அமைப்பை ஒத்ததாக மத்திய பட்டியல், பிராந்தியப் பட்டியல், பொதுப் பட்டியல் என்னும் வகையில் வகுக்கப் படவேண்டும் என்பதுவே எமது பொது ஆலோசனையாக இருந்தது. ஆனால், இந்த விடயங்கள் குறித்த விசேட பிரிவுகளைப்பற்றி பேச்சு நடத்துகையில் அதிகாரப் பகிர்வு குறித்த விடயங்களில் பாரிய மயக்கங்களும், தயக்கங்களும் காணப் பட்டன.

சிங்களவர்களுக்கு சமமான அந்தஸ்த்தை தமிழர்களுக்கும் வழங்கும் வகையில் சட்ட அமைப்பை திருத்துவதில் சிக்கல்கள் உள்ளதாக சிறிலங்கா தரப்பு குறிப்பிட்டது. அத்துடன் இது ஒரு நீண்ட நடவடிக்கையும் ஆகும். எனினும் சிறீலங்காவின் நிர்வாகத்திற்கும், பாதுகாப்பு படைக்கும் தமிழ் இளைஞர்களை உள்வாங்குவதற்கு ஒரு சிறு ஆர்வம் இருந்தது. தமிழ் அகதிகளின் விரைவான மீள் குடியமர்வு பற்றியோ, அவர்களது வீடுகள் வாழ்வு என்பவற்றின் புனர் நிர்மாணம் பற்றியோ சிறீலங்கா அரசு எவ்விதமான முன் முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

விசேடமாக திருகோணமலையிலிருந்தும் வவுனியாவிலிருந்தும் மிக அண்மையில் வெளியேற்றப்பட்ட மக்கள் குறித்தும் அக்கறை காட்டப்படவில்லை. விடுதலைப்புலிகள் ஏறத்தாள ஒவ்வொருநாளும் அமைதிப் படையின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலமைச்செயலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

பிரபாகரன் அமைதிப்படையின் தலைமச்செயலக அதிகாரிகளின் போசன அறைக்கு அடிக்கடி வந்து போகின்ற விருந்தாளியாக இருந்தார். இருப்பினும் விடுதலைப்புலிகள் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் இந்திய சிறீலங்கா உடன் படிக்கை மீதான தங்களது வரையறுக்கப்பட்ட ஆதரவை பின்நோக்கி இழுக்க முடிவெடுத்திருந்தனர்.

இந்திய இராணுவம், சிறீலங்கா அரசாங்கம் மற்றும் இந்தியக் கொள்கைகள் என்பவற்றிற்கெதிராக புலிகள் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கியமான ஆலயம் ஒன்றில் அர்ப்பணிப்புள்ள, சிறந்த புலிகளின் தலைவர்களில் ஒருவரான திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்திய சிறீலங்கா ஒப்பந்தம் தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை எனவும், உடன் படிக்கையில் ஒப்புக்கொள்ளப் பட்ட விடயங்களைத் தானும் செயல்பூர்வமாக்கும் அளவிற்கு இந்தியா போதியளவு எதுவும் செய்யவில்லை எனவும், விடுதலைப் புலிகள் நிலை எடுத்துக் கொண்டனர். உடன்படிக்கை கையெழுத்தாகி ஏறத்தாழ ஐந்து கிழமைகளின் பின்னர் சூழ்நிலை மிகவும் இக்கட்டானதாக மாறிக் கொண்டிருந்தது.

இந்நிலையில் பிரேரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குமாறு யாழ்ப்பாணத்தில் உள்ள பொது மக்களின் தலைவர்களினால் உயர்ஸ்தானிகர் மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இதே வேளை இடைக்கால நிர்வாகத்தை எல்லாத்தரப்பினரதும் ஆலோசனையுடன் மிக விரைவில் உருவாக்குமாறு ஜெயவர்த்தனாவை தூண்டும் படி டெல்லியிலிருந்து எனக்கு செய்திகள் வந்தன.

இதனிடையில் சிறீலங்கா அரசின் அதிகாரிகளுடனோ, யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த இந்தியப்படையின் அதிகாரிகளுடனோ இடைக்கால நிர்வாகம் பற்றி கலந்துரையாட பிரபாகரன் மறுத்துவிட்டிருந்தார்.

அடையாள ஆயுத ஒப்படைப்புக்குப்பின்னர் பிரபாகரன் தனது நெருங்கிய ஆலோசகர்களுடனும், இராணுவத்தலைவர்களுடனும் தொடர்ந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுற்று வட்டாரத்திலும் குடாநாட்டிலுள்ள தந்திரோ பாயமாக தெரிவு செய்யப்பட்ட இடங்களிலும் மிக்க பாதுகாப்புடன் இருந்தார்.

இடைக்கால நிர்வாகசபைக்கு தேவையான அதிகாரங்களை உடனடியாக ஜெயவர்த்தனா பகிர்வு செய்து விட வேண்டும் என்பதை பிடிவாதமாக வற்புறுத்திகொண்டிருந்தார். அவசியமான சட்ட அமைப்புத் திருத்தங்களும், முறைப்படியான தேவைகளும் முடியும் வரை அவர் காத்திருக்க விரும்பவில்லை. காலந்தாழ்த்தப் படுவதை உண்மையில் அவர் ஆழமான சந்தேகத்துடனேயே பார்த்தார். பிரேமதாசாவும், அத்துலத் முதலியும் சேர்ந்து உடன்படிக்கையை சீரழிக்க முயல்வது ஜெயவர்த்தனாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக் கையை மேற்கொள்ளப்படலாம் என்பன போன்ற ஓரளவுக்கு சரியான ரகசியத்தகவல்கள் புலனாய்வுப் பிரிவினரால் பிரபாகரனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அமைதிப்படைக்கு எதிராக விடுதலைப்பு லிகளால் தூண்டப்பட்ட ஆர்ப்பாட்டங் களாலும், இந்திய இராணுவ அதிகாரிகள் புலிகளின் தலைமைப்பீடத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது தெரிவிக்கப்பட்டிருந்த அரசியல் கருத்துக்களாலும், கிளர்ச்சி ஊட்டப்பட்ட நிலமைக்கு ஜெனரல் ஹர்கிரத் சிங் படிப்படியாக தள்ளப்பட்டார். அமைதிகுலையத் தொடங்கினார். நிலைமையை தணிக்கும் வகையில் என்னைஉடனடியாக யாழ்ப்பாணம் வருவிக்கும் நோக்கில் அவர் இராணுவத் தலமையகத்திற்கு செய்தி அனுப்பினார்.

பிரபாகரனின் நடத்தைகளையும், மனத்தையும் உள்ளூர அறிந்துகொண்டதிலிருந்து அவருடன் எந்தவிதக் கலந்துரையாடல்களையும் வைத்துக்கொள்ள நான் தயங்கினேன். பல வருடங்களாக இந்தியப்பிரதிநிதிகளுடனான அவரது தொடர்பு இந்தியப் புலனாய்வுப்பிரிவினருக்கூடாகவே இருந்தது.

எனவே இத்தகைய கலந்துரையாடல்களை பழைய தாபிக்கப்பட்ட தொடர்புகளுக்கூடாக ஆரம்பிக்குமாறு நான் ஆரம்பித்தில் டெல்லியை கேட்டுக் கொண்டேன். ஆனால், ஜெனரல் ஹர்கிரத் விடயத்தை வேறுவிதமாக பார்த்தார். உயர்ஸ்தானிகரால்யம் தனது அரசியல் பொறுப்புணர்வை எடுக்க ஆர்வமில்லாமல் இருப்பதாக ஜெனரல் ஹர்கிரத் சிங் ஒரு கட்டத்தில் குற்றம் சாட்டினார்.

பிரமரின் இணைச்செயலாளர் குல்தீப் சகாதேவிடம் இருந்து நான் ஒரு செய்தியை பெற்றுக் கொண்டேன். பிரேரிக்கப்பட்டுள்ள இடைக்கால சபைக்கான அதிகாரங்களை வரையறுப்பதற்கு ஜெயவர்த்தனாவை இணங்கச் செய்ய வேண்டியிருந்தது. இடைக்காலசபையின் அமைப்பு ருவாக்கம் பற்றி பிரபாகரனுடன் கலந்துரையாட வேண்டியிருந்தது. இதேவேளை வெளியுறவுச் செயலர் கே.பி.எஸ். மேனன் இடைகால நிர்வாகசபை பற்றி கலந்துரையாட யாழ்ப்பாணம் செல்லும்படி எனக்கு கட்டளை பிறப்பித்தார்.

பிரதமரின் அலுவலகஇணைச்செயலாளர் றொனான்சென் இது பிரதமரின் நேரடி உத்தரவு என்பதை தெரியப்படுத்தியதுடன் விவாதங்களுக்கோ, வேறு விளக்கங்களுக்கோ இடமளிக்காமல் உடனடியாக செயற்படுமாறு என்னைத்தூண்டினார். 1987 செம்டெம்பர் 10ஆம், 17ஆம் திகதிகளுக்கிடையில் ஏற்பட்ட இந்நிலையையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள அமைதிப் படைத் தலைமையத்துக்கு பிரபாகரனுக்கு கவலை ஏற்படுத்தியுள்ள விடயங்கள் தொடர்பாக பேசுவதற்கு யாழ்ப்பாணம் வருவதாக செய்தி அனுப்பினேன்.

செப்டம்பர் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்று கலந்துரையாட ஆயத்தமாகிய வேளையில், 19ஆம் திகதியன்று எனக்கு கிடைத்த செய்தியில் இந்தப் பேச்சுக்களில் பாலசிங்கம், யோகி, மாத்தையா போன்றவர்களே பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து நான் புறப்படுவதற்கு முன்பாக, பிரபாகரன் நேரடியாக பேச்சு வார்த்தையில் பங்கு பற்றுவார் என்பதும், இந்திய அமைதிப் படையின் முகாமிலேயே பேச்சுக்கள் நடத்தப்படும் என்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக்கு செய்தி அனுப்பினேன். பிரபாகரன் சிறிது தயக்கத்திற்கு பின்னர் ஒப்புக்கொண்டார். செம்டெம்பர் மாத இறுதிப் பகுதியில் நான் பிரபாகரனை மூன்று தடவை சந்தித்துப் பேசினேன்.

பாலசிங்கம், யோகி, லோரன்ஸ் திலகர், மகேஸ்வரன், சிவானந்த சுந்தரம் ஆகியோருடன் பிரபாகரன் பேச்சுக்களில் பங்கேற்றார். இந்தியத்தரப்பில் சேவைக்கால ஆலோசகர் கப்டன் பி.கே. குப்தா, தூதரக முதல்மைச் செயலாளர் ஹர்திப் பூரி,கே.பி.எனஸ்ட் ஆகியோருடன் நானும் பேச்சுகளில் பங்கேற்றேன். அத்துடன் அமைதிப்படையின் சார்பாக

தொடர்ச்சி 8ம் பக்கம் ☞

www.padippakam.com

நடந்து முடிந்த பேச்சு.....

7ம் பக்கம் தொடர்ச்சி

லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர்சிங் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங், இராணுவத் தலைமையகத்தை சேர்ந்த பிரிகேடியர் ராகவன்,பிரிகேடியர் ஈ.டபிள்யூ.பெர்னாண்டசு ஆகியோரும் பங்குபற்றினர். பேச்சுக்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக குல்திப் சகாதேவ் எனக்கு தகவல் வழங்கியிருந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் பிரபாகரன் எதிர் நோக்கும் சிக்கல்கள் குறித்து அவரது கருத்துக்களை கேட்டறிவது முதலாலதாக இருந்தது. இந்திய இராணுவத்திற்கெதிரான மக்கள் செயற்பாடுகளையும், திலீபனது உண்ணாவிரதத்தை இடைநிறுத்துவது தொடர்பாகவும் அவரை இணங்கச் செய்வது இரண்டாவதாக இருந்தது.

இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்துவது தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்வது மூன்றாவதாக இருந்தது. இடைக்கால நிர்வாக சபைக்கு சிறீலங்கா அரசாங்கம் வழங்கவுள்ள அதிகாரங்கள் பற்றி விளக்குவது நான்காவதாக இருந்தது.

தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை நிறைவு செய்யும் வகையில்,கொழும்பு எடுக்கவுள்ள நடவடிக்கை பற்றியும், இது நடைமுறைக்கு வருவதற்கான அட்டவணை பற்றியும் பொதுவாகவும் சுருக்கமாகவும் விளக்கத் தீர்மானித்திருந்தேன். செப்டம்பர் 21ந் திகதியன்று ஜெயவர்த்தனாவை சந்தித்து பிரபாகரனுடன் பேசவுள்ள விடயங்கள் பற்றி அவரது கருத்துக்களைக் கேட்டேன்.

இடைக்கால நிர்வாக சபையின் தலைவராக பிரபாகரனை நியமிக்கவும், தேர்தல்கள் நடத்தப்படும் வரை இடைக்கால நிர்வாகத்தை நிலைநிறுத்த உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் ஜெயவர்த்தனா உறுதிப்படுத்தினார். நிர்வாக அதிகாரங்களில் சிலவற்றையும்,சட்டம் ஒழுங்கு பேணுவதில் ஓரளவிற்கும் பகிர்ந்தளிக்க தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். நிதி தொடர்பான

கொண்டு நான்செப்டெம்பர் 23ம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டேன். பேச்சுக்களின் போது நடந்தவை தொடர்பாக விபரிக்க முன்பாக பத்து தினங்களுக்கு முதல் விடுதலைப்புலிகள் அனுப்பிவைத்திருந்த ஒரு மகஜர் தொடர்பாக இங்கு குறிப்பிட வேண்டும்.

புலிகளுக்கு தெளிவான பெரும் பான்மையிருக்கக்கூடிய வகையில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படவேண்டும் இடைக்கால நிர்வாகத்தில் இடம் பெறும் ஏனையவர்கள் தொடர்பாக விடுதலைப்படலிகளின் ஆலோசனை பெறப்பட வேண்டும், வட கிழக்கு மாகாணப் பொலிஸ் படையில் விடுதலைப் புலிகள் உள்வாங்கப்பட வேண்டும், வெளி விவகாரம், பாதுகாப்பு, குடிவரவு,சுங்கம் போன்றவை தவிர்ந்த ஏனைய அதிகாரங்கள் இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கப்பட வேண்டும், பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இந்த விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரபாகரன் ராஜீவ் காந்தியிடம் இருந்து இவை பற்றிய உறுதிமொழி

விடயங்களிலும் ஓரளவுக்கு அதிகாரப்பகிர்வுக்கு ஜெயவர்த்தனா உறுதியளித்திருந்தார். பிரபாகரன் எதிர்நோக்கும் சிக்கலான ஏனைய விடயங்கள் தொடர்பாக பரஸ்பரம் கலந்துரையாடல்களுக்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். எனினும் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அவசரப்பட முடியாதுள்ள நிலமையை சுட்டிக்காட்டியபோதும் தன்னாலான வகையில் ஒத்துழைப்புடன் பாடுபட சித்தமாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பிரபாகரன் அமைதிப்படை முகாமுக்கு வந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்திக்

நிலையங்கள் மீளத்திறக்கப்படக் கூடாது எனவும் புலிகள்தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கும், கிழக்கு மாகாணத்திற்கும் ஏனைய தமிழ் குழுக்கள் திரும்ப அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து பிரபாகரன் எதிர்புத்தெரிவித்தார். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற அமைப்புக்களை சேர்ந்தவர்கள் இந்தியப்புலனாய்வுப் பிரிவினரால் ஆயுதபாணிகளாக்கப்பட்டு விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தும்படி பணிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மட்டும் தான் இலங்கைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக புதுடில்லியினால் அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதுவே பிரபாகரனின் கருத்தாக இருந்தது. இத்தகைய அந்தஸ்தை வழங்க புதுடில்லிக்கு தயக்கம் இருப்பதாக அவர் உணர்ந்து கொண்டிருந்தார். இதற்காகவே ஒப்பந்தம் அமுல்படுத்தப் படவில்லை என்பதை காட்டும் வகையிலான அமைதியான எதிர்புக்கள் கிளப்பிவிடப்பட்டிருந்தன.

வடமராட்சியில் சிறீலங்கா படையினர் ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கை மேற்கொண்டிருந்த போது இராணுவரீதியாக உதவி வழங்கும்படி சென்னைக்கும், புதுடில்லிக்கும் திரும்பத் திரும்பகோரிக்கை விடுக்கப் பட்ட போதும் கவனிக்கப்படாதமை குறித்த கவலை பிரபாகரனிடம் இருந்தது.

இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கு விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் பெயர் பட்டியல் இன்னமும் தரப்படாமையும் ஒரு காரணம் என்பதை சுட்டிக்காட்டினேன்.

இது தொடர்பாக நான் ஏற்கனவே அனு ப்பி இருந்த ஒரு செய்தி கவனிக்கப்படாமலேயே இருந்துள்ளது. தமது பிரதிநிதிளை அறியத்தராதமையே முழு நடவடிக்கைகளும் தாமதமாவதற்கு காரணமாக இருந்தது. எனினும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு புதுடில்லியிடம் இருந்து முடியுமான அளவிற்கு ஆதரவு பெற்றுத்தருவதற்கு உறுதி வழங்கிய அதேசமயம் சிறீலங்கா அரசாங்கமும் ஒப்பந்தம் தொடர்பாக பெருமளவிற்கு தயக்கம் காட்டி வருகின்றமையை சுட்டிக்காட்டினேன்.

எனவே இந்தியாவும் புலிகளும் ஒப்பந்தத்தின் கீழான கடமை

களை நிறைவேற்றுவதில் பின்னடிக்கின்றன, என்ற அபிப்பிராயம் கொழும்பில் உருவாக சிறிதளவு இடமளிக்கப்பட்டாலும் ஒப்பந்தம் கிடப்பில் போடப்படும் ஆபத்துள்ளது என்பதையும் தெரிவித்தேன்.

1940களிலும் 1950களிலும் குடியேறிய சிங்களவர்களை வெளியேறச் செய்வ தென்பது கொழும்பில் பதவிக்கு வரும் எந்த அரசுக்கும் கடினமாகவே இருக்கும் என்பதை தெரிவித்து யதார்த்தத்தை புரிந்து கொள்ளும்படி வேண்டினேன். எனினும் இடைக்கால நிர்வாகம் சீராக செயற்படத் தொடங்கியதும் எதிர்கால குடியேற்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதையும், 80க்கு பிந்திய குடியேற்றங்கள் அகற்றப்படலாம் என்பதையும் உறுதிப்படுத்தினேன்,

மேலும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் விடுதலைப்புலிகளுக்கு முக்கிய பங்குண்டு என்பதை உறுதிப்படுத்தும் அதே சமயத்தில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழான அம்சங்களை முழுஅளவில் நடைமுறைக்கு கொண்டுவர எல்லாத் தமிழர் தரப்புகளையும் உள்ளடக்கத்தக்க ஜக்கிய முன்னணியின் அவசியத்தை வலியுறுத்தினேன்,

புதிய மாகாண அரசாங்கத்தில் ஆக்கபூர்வமான பங்களிப்பை பெறும்வகையில் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடனும் குழுக்களுடனும் நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளும்படியும் ஆலோசனை தெரிவித்தேன், ஈரோஸ் மற்றும் த.வி.கூ, போன்றவற்றுடன் செயற்பட முடியும் எனக்குறிப் பிட்ட அவர் புளொட், ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் என்பவற்றுடன் நல்லெண்ணத்தை வளர்ப்பது சிரமம் எனத்தெரிவித்தார்.

கிழ க்கு மாகாணத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் ஈ.பி.ஆர்.எல்.எப்.பிற்கு கணிச மான செல்வாக்கு உண்டு என்பதை சுட்டிக்காட்டிய நான் அவர்களையும் இணைத்துச் செல்வது எதிர்காலத்தில் பயன்படக்கூடியதாக இருக்கலாம் எனக்குறிப்பிட்டபோது பிரபாகரனின் பதில் சந்தேக மானதாக இருந்தது, செப்டம்பர் 23ஆம் திகதி நடைபெற்ற பேச்சுக்கள் பூரண மாகாதநிலையில் நிறைவுற்றது.

12உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகத்தில் குறைந்தது ஏழு உறுப்பினர்களாவது புலிகளின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும் எனவும், முஸ்லிம் பிரதிநிதி ஒருவரையும், பிரதம நிர்வாகியையும் நியமிக்கும் உரிமை புலிகளுக்கு தரப்பட வேண்டும் எனவும், இவற்றிற்கு ஜெயவர்த்தனா முதலில் இணக்கம் தெரிவிக்க வேண்டும் எனவும், பிரபாகரன் கேட்டுக் கொண்டார். சட்டம், ஒழுங்கைப்

பேணும் வகையிலும் சிலவகையான வரி விதிப்புகள் மூலம் நிதி திரட்டவும் இடைக்கால நிர்வாகத்திற்கு அதிகாரம் தரப்படவேண்டும் எனவும் பிரபாகரன் வலியுறுத்தினார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவையின் பொறுப்புக்களில் பெரும்பகுதி விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் வசமாக வேண்டும் எனவும் கேட்டார்.

இந்தக் கோரிக்கைகளை ஜெயவர்த்தனாவிற்கு தெரியப்படுத்தியபோது சட்டம் ஒழுங்கைப் பேணும் நிறைவேற்று அதிகாரத்தையும் பொலிஸ் சேவையின் ஒரு பகுதியையும் அதிகாரப் பகிர்வுக்கு உட்படுத்துவதில் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டார். ஆனால் விடுதலைப்புலிகள் விரும்பும் அளவிற்கு வரி வசூலிக்கும் அதிகாரத்தை வழங்க அவர் ஒப்புக்கொள்ள வில்லை.

இடைக்கால நிர்வாகத்தின் பிரதம நிர்வாகி பதவிக்கான பெயர்ப்பட்டியல் ஒன்றை எதிர்பார்பதாகவும் அதிலிருந்து ஒருவரை நியமிக்க தம்மால் முடியுமெனவும் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத்தில் தெளிவான பெரும்பான்மை பெறுவதை அவர் ஏற்றுக் கொண்டார். எனினும், பிரபாகரன் தாமதப்படுத்தும் ஒரு போக்கையே கைக்கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் நல்லூர் கந்தசாமி கோவிலடியில் உண்ணாவிரதமிருந்த திலீபனின் உடல்நிலை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்தது. திலீபன் உண்ணாவிரதம் இருக்கும் இடத்திற்கு நான் நேரிற் சென்று திலீபனிடம் உண்ணாவிரதத்தை கைவிட என்னைக் கோரும் படிபிரபாகரன் முன்னதாக என்னைக் கேட்டிருந்தார்.எனது கோரிக்கை ஏற்கப்பட்டு உண்ணாவிரதம் கைவிடப்படும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுமானால் அவ்வாறு செய்ய விரும்புவதாக நான் குறிப்பிட்டிருந்தேன்.ஆனால் அத்தைகய உத்தரவாதத்தை தருவதற்கு பிரபாகரனால் முடியவில்லை.

ஒப்பந்தத்திற்கெதிராகவும் இந்திய அரசாங்கத்திற்கு எதிராகவும் உணர்வலைகள் கிளப்பிவிடப்பட்டிருந்த ஒரு சூழ்நிலையில், திலீபன் எனது கோரிக்கையை ஏற்று உண்ணா விரதத்தை கைவிட மறுத்தால் இந்தியத் தூதுவரின் முயற்சிகளுக்கு பலத்த பின்னடைவு ஏற்படும் என்று அமைதிப்படை வட்டாரங்களும் புலனாய்வுப் பிரிவினரும் எனக்கு சுட்டிக் காட்டியிருந்தனர்.

இந்திய அரசாங்கத்தை சங்கடத்திற்குள்ளாக்கும் வகையில் நான் நடந்துகொள்ளக்கூடாது என்பதில் நான் தெளிவாக இருந்தேன். எனவே, எனது கோரிக்கையை ஏற்று திலீபன் உண்ணாவிரதத்தை கைவிடுவார் என்பதை உத்தரவாதப்படுத்தினாலன்றி இம் முயற்சியில் ஈடுபட முடியாது என்று பிரபாகரனிடம் தெளிவுபடுத்தினேன். திலீபன் உண்ணாவிரதம் இருந்த போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கோபம் ஊட்டுபவையாக இருக்கவில்லை. விடுதலைப்புலிகளின் தலமை உண்ணாவிரதத்தை ஆதரித்த போதும் இவற்றில் இந்திய அரசாங்கமோ இந்திய மக்களோ எந்தவகையிலும் சம்பந்தப்படவில்லை.

செம்டம்பர் 23-28க்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தபோது திலீபன் உயிர்துறந்தார். இது தேவையற்றதும், தவிர்த்திருக்கக் கூடியதுமான அசாதாரண நிலையை தோற்றுவித்தது. திலீபனின் உயிரிழப்பானது ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் வகையிலான தமது ஒத்துழைப்பை பெருமளவுக்குபாதிப்பதாக உள்ளதுஎன்று

தொடர்ச்சி 12ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

புலிகள் ஜனநாயகத்தின் விரோதிகள் புலிகளால் தீர்வை ஏற்படுத்த முடியாது.

நோர்வே நாட்டைச் சேர்ந்த ஜ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் உப குழு உறுப்பினரான அப்சோன் எய்ட் விடு தலைப்புலிகள் மற்றும் ஈடு ஆதரவாளர் கள் மத்தியில் ஜெனீவாவில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

நன்றி சண்டேலீடர்ஸ்.

விடுதலைப்புலிகள் குறிப்பாக அவர்கள் தலைமைத்துவம் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக வருத்தப்படுவதில்லை. இவ்வாறு நோர்வே நாட்டைச் சேர்ந்த ஜ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் உபகுழு உறுப்பினரான Asbjorn Eide குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் சர்வதேச சமூகத்திற்கும் அனைத்துலக அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், அரசாங்கங்களுக்கும், அவர் அண்மையில் விடுத்த வேண்டு கோளில் தமிழர்கள் தொடர்ந்தும் வெளி நாடுகளில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

ஒரு காலத்தில் சிறிலங்கா அரசை கடுமையாக குற்றம்சாட்டி வந்தவரான Eide தற் போது தனது நிலைப்பாட்டிலிருந்து மாறியுள்ளார் என இராஜ தந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கையில் வாழும் தமிழர்கள் உட்பட இலங்கையில் வாழும் அனைத்து சமூகத்தவர்களையும் விடுதலைப்புலிகள் பயமுறுத்துவதாக அவர் குறிப்பிடுகிறார்.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதை அவர் கண்டித்துள்ளார். இவர்கள், எவ்வகையிலும் சமாதானத்தை கொண்டு வரமுடியாத ஜனநாயகமற்ற ஒரு அமைப்புக்கு ஆதரவு காட்டுகிறார்களே அல்லாமல் தமிழர்களின் கோரிக்கைகளுக்காக அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மற்றும் ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் சிறிலங்காவின் நிலமை தொடர்பாக பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகையில் இங்கிருப்பவர்களில் பலர் 1983 முதல் சிறிலங்கா அரசை கடுமையாக விமர்சித்தவர்களில் நான் முதன்மையானவன் என்பதை அறிவர். வெலிக்கடைச்சிறையில் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதற்கும், இன்னும் தமிழர்களுக்கெதிரான வதைகளுக்கு காரணமானவர்களுக்கு எதிராகவும் சிறீலங்கா அரசு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை சம்பந்தப் படுத்தி சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை மீளமைப்பது குற்றம் இழைத்தவர்களை தண்டிப்பது என்பது போன்ற, அப்போது என்னால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் செவிமடுக்கப் படாதமை குறித்து சிறீலங்காவில் பலரும் மனவருத்தம்கொண்டிருப்பதை அறிவேன்.

ஆனால், 83இன் பின்னர் தமிழர்கள் மத்தியிலான நிலமைகள் வெகுவாக மாறி விடுதலைப் புலிகள் என அழைக்கப்படும் அதிதீவிரவாதக் குழு மேலெழுந்துள்ளது. அதனுடைய தலைமைத்துவம் குறுகிய, சுயநலவாத தன்மையில் விருத்தி கண்டுள்ளது. அந்த அமைப்பும் அதன் தலைமைத்துவமும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதில்லை. பதட்டத்தையும், பயத்தையும் ஊட்டுவதற்காக ஆண்கள், பெண்கள், சிறுவர்களை கூட பயங்கரகுற்றச் செயல்களிலும் தற்கொலைக் குண்டுதாரிகளாகவும் பயன்படுத்தப்படுகிறார்கள். சிங்கள எதிரிகளை மட்டுமன்றி பொதுமக்கள், சமயத்தலங்கள் என்பவற்றையும் தாக்குவதுடன் மாற்றுக்கருத்துள்ள தமிழர்களையும் பெண்கள் என்றும் பாராமல் தாக்கிவருகிறார்கள்.

அண்மையில் யாழ்நகர மேயர் படுகொலை செய்யப் பட்டுள்ளார். பல தமிழர்கள் குறிப்பாக அதிகாரப் பரவலாக்கலுக்காக தொடர்ந்தும் போராடுபவர்கள் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்கள் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே வாழவேண்டியுள்ளது. சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சில தொடர்ந்தும் இவர்களுக்கு உதவுவது கவலை தருவதாக உள்ளது. எவ்வகையிலும் சமாதானத்தை கொண்டு வர முடியாத ஜனநாயகமற்ற அமைப்புக்கு இவர்கள் உதவுகிறார்களே தவிர தமிழர்களின் கோரிக்கைகளுக்கு அல்ல.

1994இல் புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு அரசாங்கத்திற்கு சாத்தியமான அளவிற்கு அதிகாரத்தை பரவலாக்கும் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதியின் நேர்மையில் எனக்கு சந்தேகமில்லை. பலர், குறிப்பாக பல தமிழர்களும் இந்த தீர்வுத்திட்டம் ஏற்கப்பட்டால் மகிழ்ச்சியடையக்கூடும். இதனை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை.

வெளி நாடுகளில் இருக்கும் தமிழ் சமூகத்தினரை திருப்திப் படுத்துவதற்காகவும், அவர்களின் பணத்திற்காகவும் விடுதலைப்புலிகள் போராடுகிறார்கள். முடிவற்ற பயனற்ற போரை தொடர்வதற்கு வெளிநாட்டில் உள்ளவர்களின் பொருளாதார ஆதரவிலேயே அவர்கள் தங்கியுள்ளனர். அவர்களிடமிருந்து பெறும் பணத்திலேயே ஆயுதங்களும் பிற வளங்களும் புலிகளுக்குகிட்டுகிறது.

சர்வதேச சமூகம், வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும், அரசாங்கங்களும் தத்தம் நாடுகளில் உள்ள தமிழர்களுக்கு சிறிலங்காவினது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கலாச்சாரங்களுக்கு மதிப்பளிக்க கூடியதும், அதிகாரப்பரவலாக்கல் செய்யக்கூடியதுமான சூழ்நிலை ஜனநாயக பூர்வமாகவே எட்டப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தியாக வேண்டும். இதன் மூலமே தமிழ் கலாச்சாரம் தொடர்ந்து வாழவும் செழுமைப்படுத்தப்படவும் முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறுக்கெழுத்துப் போட்டி–38



இடமிருந்து வலம்

1. கொலையுண்ட யாழ் மேயர்.
5. திரும்பத் திரும்ப நிகழும் ஒன்றால் சோர்வு.
7. பிரதேசம்.
9. முதல் பாட்டு.
10. மேடுபள்ளமற்ற பரப்பு.
12. தென்னை பனையிலும் உண்டு; கிரிக்கெட்டிலும் உண்டு.
13. 'தி' சேர்த்தால் வெற்றி; 'து' சேர்த்தால் மாய வித்தை. (தலைகீழ்)
15. பாரதத்தில் கண்ணன்.
17. பொருளானால் எறிந்திடலாம்; வினையானால் எறிந்திடலாம்.
18. அண்ணன் படைக்கு அஞ்சான்.
20. சும்மா இரு அல்லது சும்மா --.
21. உயிரின் ஆரம்பம்.
22. தாய்மாமன் தலைகீழாக.
24. வல்லவன் சுழற்றினால் வரம்பிலும் ஆடுவது, இங்கே தலைகீழாக.
26. நப்பாசை.
28. துடுப்பிருந்தால் இது போகும்; துணிவிருந்தால் உலகையும் சுற்றிவரலாம். (தலைகீழ்)
29. ஆறுவதுதான் இது சீறுவது அல்ல.
30. இதற்கு நாயகர் கே.பி.ரத்நாயக்கா.
32. தலைகீழ்த் தரை.
34. ஆமாம்! பிரணவம்.
35. அகராதி.
36. சிறையிலிருப்பவர், இவர் திரும்பினால் அதிர்ச்சியடைவீர்கள்.

மேலிருந்து கீழ்

1. புத்தரின் இளமை; புளொட்டின் தலைவர்.
2. மூலிகையாகவும் உதவும் ஒரு செடி.
3. திருப்பதியின் இனிப்பு.
4. இந்த ரஷ்ய நதி அமைதியாக ஓடுகிறது என்று ஒரு நாவல் உண்டு. இங்கே தலைகீழாக.
5. நெத்தியடி மட்டுமல்ல இதன் அடியும் வலுவான அடிதான்.
6. நெட்டை மரங்களென நிற்பவர்களைக் கணடித்தான் பாரதி; இது பிறர்க்குத் துணையாவதில்லை.
8. ஒரு பரப்பின் சமநிலையை அறிந்துகொள்ளப் பயன்படும் சாதனம்.
11. இடையூறு.
14. அரசிருக்கை.
16. நோயாளி.
17. கறுப்பாயிருக்கும் காகமல்ல; கல்விக்கு உதவும் புத்தகமல்ல; மரத்திலேதான் செய்தாலும் கதிரை மேசையல்ல.
19. பிரதிபலிக்கும் உருவம்.
21. வஞ்சகம்.
23. பறவையின் மூக்கு அல்லது அடிப்படை அளவுக்கு கடைசி எழுத்தில்லை.
25. இவன் வம்சமே ராமன்.
27. தலைகீழாக ஒரு நோய்.
29. இப்படிக் கிடைத்தால் யார்தான் வேண்டாமென் பார்கள். (தலைகீழ்)
31. வெள்ளைக்காரன் கொண்டுவந்தது; கல்லைக் கடிக்கிறார்கள் என்று நம்மவர் பயந்தது.
33. செல்வம்.

விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.

புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு

குறுக்கெழுத்துப் போட்டி–37 விடைகள்:

இடமிருந்து வலம்:

1. தெற்காசியா
5. நாவிதன்
8. கிரகம்
10. கழு
11. தங்கம்
13. கும்பல்
15. ராகுகாலம்
17. பட்டு
18. கந்தசஷ்டி
21. மக(ன்)
23. நாம்
24. வம்புச்சண்டை
26. மறுகு
27. சுரி
28. பருகு
29. வவுனியா
31. சண்டியர்
32. சக

மேலிருந்து கீழ்:

1. தென்றல்
2. காகிதம்
3. சிரங்கு
4. யாகம்
6. விழுக்காடு
7. தக(டு)
9. புஷ்பராகம்
12. தும்(பி)(பு)(பை)
14. பங்கம்
16. குட்டிச்சுவர்
19. தவறு
20. சம்மட்டி
21. மண்
22. கடைசியாக
23. நாம்பன்
25. சரிவு
26. சருகு
30. சனி

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

மா. செல்லத்துரை
474, மின்சாரநிலைய வீதி,
திருகோணமலை.

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. வி. ஜீவரூசன்
   28,முதலியார்குளம், வவுனியா.
2. அ. ஜெனிஸ் குருஸ்
   8ம், வட்டாரம், மன்னார்.
3. சி. பவதாரணி
   26/1,சமாது ஒழுங்கை, திருமலை.
4. த. ஜெயந்தினி
   7 டெம்பில் வீதி, யாழ்ப்பாணம்.
5. இ.சி. திருச்செல்வம்
   1ம் ஒழுங்கை, மட்டக்களப்பு.

மன்னார்.....

3ம் பக்கம் தொடர்ச்சி

சேகரிப்பதற்கான தொட்டிகளை மன்னாரின் பல பகுதிகளிலும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

பாஸ்

மூன்றுமாத பாஸ் பெறுவதானால் அதற்கு தரகர்கள் இருக்கிறார்கள் அவர்கள் 10ஆயிரம் ரூபாவிலிருந்து 15ஆயிரம் ரூபா வரை அறவிட்டு பாஸ் பெற்று கொடுக்கிறார்கள். இந்தப் பாஸ் உள்ளவர்கள் கொழும்பு செல்லலாம். அவசரமாக செல்ல வேண்டியவர்கள் பணத்தைக் கொட்டி இந்த வழியையே நாடுகிறார்கள்.

விடுதிகள்

மன்னாரில் 20விடுதிகள் இருக்கின்றன. விடுதிகள் என்றால் சாதாரண குடியிருப்பு வீடுகளில் ஒரு படுக்கை, கை, கால்கள் களுவிக்கொள்வதற்கான வசதி மட்டுமே உண்டு. ஒரு நாளுக்கு ஒருவர் தங்குவதற்கு 20ரூபா அறவிடப்படுகிறது. வீட்டு அறை வாடகைகளும் அதிகரித்துள்ளன. அறை வாடகை மாதம் 500ரூபா. வீடு ஒன்றிற்கு சராசரி முற்பணம் 25 ஆயிரம் ரூபாவிலிருந்து 50 ஆயிரம் ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளது.

சீமெந்து

ஒருவரின் கட்டுமான தேவைக்கு 5பைக்கட் சீமெந்து அனுமதிக்கப்படுகிறது. சீமெந்தின் விலை 380ரூபா.

மின்கலங்கள்

சிறிய மின்கலங்கள் (பற்றி) பெறுவதானால் வானொலி அனுமதிப்பத்திரத்தை காட்டியே கடைகளில் வாங்க முடியும் அதேவேளை கறுப்பு சந்தையில் 100 ரூபாவிற்கு விற்கப்படுகின்றன.

வைத்தியசாலை

மன்னார் வைத்தியசாலையைப் பொறுத்தவரை அங்கு அனுப்பி வைக்கப்படும் மருந்துப் பொருட்கள் அங்கு நிரந்தரமாக குடியிருப்பவர்களுக்கு அளவானதே. அல்லாமல் அங்கு இடம் பெயர்ந்து வந்திருப்பவர்களுக்கெல்லாம் போதியதல்ல. உதாரணமாக 1000 பேருக்குரிய மருந்து 3000பேருக்கு வழங்கப்படும் நிலை. 7–8 வைத்தியர்கள் அங்கு கடமையாற்றுகிறார்கள். எம்.எஸ்.எவ் வைத்தியர்களும் பணிபுரிகிறார்கள். ஆனால் மன்னாரின் தற்போதையசனத் தொகைக்கு இந்த வைத்திய வசதி போதியதன்று.

பாதுகாப்பற்ற நிலை

அச்சம் பீதிக்கும் குறை விலலை. கட்டைஅடம்பனை சேர்ந்த நான்கு இளைஞர்கள் முருங்கனுக்கு பொருட்கள் வாங்க வந்தவர்கள் வீடு திரும்பவில்லை. காட்டுப் பகுதியில் வெட்டிப்போடப் பட்டிருந்தார்கள். மொத்தத்தில் மன்னார் பத்திரிகைகளினதோ நவீன தகவல் தொடர்பு சாதனங்களினதோ கண்களுக்குள் அகப்படாத பிரதேசம். அதனை வெளிச்சத்திற்குகொண்டுவந்தாக வேண்டும்.

எல். திருநாவுக்கரசு

www.padippakam.com

சொலமன் பதில்கள்

யுத்தத்தின் மூலமே இனப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்று விடுதலைப்புலிகளும் சந்திரிகாவும் போரிட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் ஜனநாயகத்திற்கு திரும்பிய தமிழ்க்கட்சிகளால் என்ன செய்ய முடியும்?

மு. கிஷோக்குமார் பண்டாரிகுளம்.

முதலாவதாக இராணுவத் தீர்வொன்றை எட்டலாமென இரு பகுதியினரும் சிந்தித்தால், அவர்களின் சிந்தனை பிழையென்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புலிகள் வேறு நாடுகளின் ஆதரவின்றி தனித்து நின்று சிறீலங்கா இராணுவத்தை விரட்டிவிட முடியா தென்பதை வரலாறு உணர்த்தியுள்ளது. அதேபோல் சிறீலங்கா இராணுவம் வீதியைத்திறந்து புலிகளைப் பலவீனப் படுத்துமே தவிர முழுமையாகப் புலிகளை அழித்துவிட முடிவு செய்தால் அதற்கும் பல வருடங்கள் எடுக்கும். அது மாத்திரமல்லாமல் விடுதலைப்புலிகளின் இன்றைய போராட்டமும் கூட பயங்கரவாதப் போராட்டமாகவே சர்வதேச ரீதியில் பிரச்சாரப் படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்க்கட்சிகளின் தலையில் பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை. இவர்கள் ஒன்று பட்டு ஜனநாயக ரீதியில் அழுத்தங்களைஉருவாக்கலாம். மக்களை அணிதிரட்டி போராட்டத்தை சரியான திசை வழியில் கொண்டு செல்லலாம். இதனூடு நியாயமான எமது கோரிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவைத்திரட்டலாம். ஆனால் இவர்கள் மத்தியில் குறுகிய அரசியல் பார்வை இருக்கின்றதே தவிர, தமிழ் மக்களின் நலன்களில் அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை. இதனால் ஓர் கூட்டமைப்பை உருவாக்க ஈ.பி.ஆர்.எல்.எவ் எடுத்த முயற்சிகளும் பலனிக்கவில்லை.

தினமுரசு வாரப்பத்திரிகை ஈ.பி.ஆர்.எல்.எவ் - தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய கட்சிகளையே கடுமையாக தாக்கி எழுதுகிறது ஏன்?

பி. ரகுநாதன், கல்வியங்காடு.

தினமுரசு ஆசிரியர் ஈ.பி.டி.பியின் அரசியல் செயலாளராக இருந்த பொழுதும் கூட அவருக்கு திட்டவட்டமான கொள்கைகள் இருப்பதாகத் தெரியவில்லை. பிரேமதாசா அரசுடன் கூட்டு வைக்கக்கூடாது என ஈ.பி.டி.பியில் பலர் எதிர்த்தபொழுது, தான்மாத்திரம் தான் அதனை மிகக்கடுமையாக ஆதரித்ததாகவும், இதன் மூலம்தான் ஈ.பி.டி.பியை வளர்க்க முடிந்ததெனவும். தனது பத்திரிகையான தினமுரசிலேயே எழுதியுள்ளார். அன்று "மக்கள் குரல்" என்ற வானொலி நிகழ்ச்சியில் புலிகளை காரசாரமாகக் கண்டித்து நாடகங்களையும், கட்டுரைகளை யும் எழுதினார். இன்று அதே புலிகளை, தலை, கால் தெரியாமல் புகழந்து தள்ளுகின்றார். நாளைக்கு எப்படி மாறுவாரோ அவருக்குத் தான் வெளிச்சம். எந்த ஒரு அரசியல் கட்சியின் தவறுகளையும் யாரும் விமர்சிக்கலாம். ஆனால் ஓர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு ஒவ்வொரு அவசரகாலச்சட்டத்திற்கும் கை உயர்த்தி ஆதரிக்கும் ரமேஷ் போன்றோர் வேறெவரையும் விமர்ச்சிக்க யோக்கியதை அற்றவர்கள். கட்சி விரோதச் செயற்பாடுகள் காரணமாக ஈ.பி.ஆர். எல்.எவ் இலிருந்து விலத்தப்பட்ட இவருக்கு ஈ.பி.ஆர். எல்.எவ் ஐ குற்றம் சாட்டியே பழக்கப்பட்டு விட்டது. இவருடைய சந்தர்ப்பவாத எழுத்துக்களும் கொள்கை களும் இன்று மக்களுக்கு புரியத்தொடங்கிவிட்டது.

பாராளுமன்றத்தில் அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக வாக் களிக்கும் ஈ.பி.டி.பியினர் யாழ்ப்பாணத்தில் செம்மணி புதைக் குழியை தோண்டச் சொல்லி அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கின்றனர் எதற்காக இந்த இரட்டை வேடம்?

இரா. செல்வநாதன் சாவகச்சேரி

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு வாக்களிப்பதன் மூலம், யுத்தத்துக்கு ஆதரவளிப்போரும் இவர்கள் தான். யுத்தத்தால், தமிழ் மக்கள் கைதானால் அதற்காக நீலிக்கண்ணீர் வடிப்போரும் இவர்கள் தான். புலிகளின் யுத்தத்தை ஏற்றிப் போற்றி அவர்கள் எல்லோரும் தியாகச் செம்மல்கள் என தமது பத்திரிகையான தினமுரசில் எழுதுவோரும் இவர்கள்தான். அதனைப் போன்றே செம்மணிப் புதை குழிகளையும் தோண்டச் சொல்கின்றார்கள். மக்களுக்காக தாம் குரல் கொடுக்கின்றோம் என்ற போலித்தனத்தைக் காட்டத்தான் இக் கூக்குரல்கள் எல்லாம். இது இரட்டைவேடமல்ல இன்று பி.ஏ வேடம் என்றால் நாளைக்கு யு.என்.பி வேடம். இப்படி அவர்கள் பல வேடதாரிகள்.

தமிழ் ஈழத்திற்கான மூன்றாம் கட்டப் போர் வெற்றியில் முடியுமா தோல்வியில் முடியுமா?

கருணாகரன், திருகோணமலை.

தமிழீழத்துக்காக போர் நடக்கின்றது என உங்களுக்கு யார் சொன்னார்கள்? இது பிரபாகரன் தனது இருப்பையும் தன்னையும் தற்காத்துக் கொள்வதற்கான போர் மாத்திரமே. என்று அவர் ஜனநாயகத்தை மறுத்து ஏனைய இயக்கங்களை அழித்தாரோ, என்று அவர் முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து விரட்டினாரோ, என்று அவர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணகர்த்தாவாக ஆனாரோ, அன்றே தமிழீழத்தை அவர் மறந்துவிட்டார். சிலகாலம் அவரது கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணமும் இன்று அவரிடம் இல்லை பின்பு எங்கே தமிழீழம் கிடைக்கப்போகின்றது? வெறும் போராட்டம் மாத்திரம் தனிநாட்டைப் பெற்றுத்தந்துவிடாது. அதற்கு சர்வதேச ஆதரவு தேவை. புலிகளின் போராட்டத்தை ஏனைய நாடுகள் அங்கீகரிக்க வில்லை. அதுமாத்திரமல்ல புலிகளும் அவர்களது போராட்டமும் பயங்கரவாதப் போராட்டமாகவே சர்வதேச ரீதியில் முத்திரை குத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் 3ம் கட்டமென 6ம் கட்ட போராட்டம்நடந்தாலும், அதுஅவசியமற்றபோராட்டமே.

இந்தியாவின் தலையீட்டால் பெற்றுக்கொண்ட மாகாண சபையையே தூக்கி எறிந்த பிரபாகரன் சந்திரிகாவின் தீர்வுப் பொதியை எப்படி ஏற்றுக்கொள்வார்?

நா. ரவிக்குமார் மட்டுநகர்.

மாகாணசபையைத் தூக்கி எறிந்ததுதான் அவர் செய்த மாபெரும் தவறுகளில் முக்கியமானது. மாகாண சபையை ஏற்றிருந்தால், இந்தியாவின் உதவியுடன், வடகிழக்கில் பலமான தோர் சுயாட்சி அமைப்பை ஏற்படுத்தியிருக்கலாம் வடகிழக்கில் சுயாட்சி ஏற்படுவதை சிறீலங்கா அரசு தடுத்திருந்தால், அதற்கு ஒத்துழைக்காமல் இருந்திருந்தால், எமது போரா ட்டத்திற்கு இந்தியா தொடர்ந்து பக்கபலமாக இருந்திருக்கும். ஆனால் புலிகளின் தூரநோக்கின்மை யானது இந்தியாவுடன் ஓர் அநாவசிய யுத்தத்துக்கு வித்திட்டது. இந்தியாவுடன் யுத்தம் புரிவதற்காக தமது எதிரிகளான சிறீலங்கா அரசிடமே சரணாகதி அடைந்து அவர்களிடமிருந்து பெரும் தொகையான ஆயுதங்களையும் பணத்தையும் பெற்றுக் கொண்டார்கள். இன்று முடிவில்லாத ஓர் யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவ் யுத்தத்தால் தனிநாட்டை அமைக்க முடியாதென்னும்போது, அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதுதான் ஒரே ஒரு வழியாகும். அரசுடன் பேசுவதன் மூலம் இன்றுள்ள தீர்வுப் பொதியிலும்விட அதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது. காலம் தாழ்த்துவதென்பது புலிகளின் பேரம் பேசும் தன்மையை இன்னம் குறைத்துவிடும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாட்டுக்கான ஓர் யுத்தத்தை நடாத்தும் பொழுது, இந்தியத் தலையீடு கோரி நீங்கள் பிரார்த்தனை கூட்டம் நடாத்துவது தேவைதானா?

எம். சுந்தரமூர்த்தி, லண்டன்.

முதலாவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்தும் யுத்தம் தமிழீழத்துக்கோ தனிநாட்டுக்கோ ஆனயுத்தமல்ல. அப்படி அவர்கள் கூறுவதும் அல்லது அதை நம்புவதும் அரசியல் அறிவின் பாற்பட்டதல்ல. புலிகளின் அணியில் பலநூறு பேர் போராடி மடிகின்றார்கள் என்பது உண்மை. அப்படி மடிவதெல்லாமே தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் என்பது வேதனைக்குரியது. புலிகளே மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசத் தயாரென மீண்டும் மீண்டும் கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவது உண்மையெனில் அவர்கள் தமிழீழம் தவிர்ந்த ஒன்றையே பேச்சு வார்த்தைக்கெடுப்பார்கள். ஆனால் புலிகளோ அன்றி அரசோ, பேச்சுவார்த்தையில் அக்கறை கொள்ளாமல் யுத்தத்தில் தான் நாட்டம் கொண்டுள்ளார்கள் என்பதே யதார்த்தமானது. இந்நிலையில் அழிவுகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கவும், எமக்கு கௌரவமான தீர்வொன்றை உருவாக்கவும், எமது அண்டை நாடான இந்தியாவிடம் உதவி கேட்பதில் எந்தவிதத் தவறுமில்லை. இதனடிப்படையில் இந்தியப் பிரதமர் வாஜ்பேய் இலங்கைக்கு வரும் பொழுது தமிழ் மக்கள் தமது மன உணர்வைக் காட்டவே பிரார்த்தனைக்கூட்டங்களை ஏற்பாடு செய்தோம். அதுமாத்திரமல்லாமல், இராணுவ அச்சுறுத்தல், புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இருக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களைப் பேச வைக்க வேண்டியதும் இன்றைய தேவையாகும். இதற்கு ஓர் ஆரம்பமாகவும் இப் பிரார்த்தனைக்கூட்டங்களை எடுத்துக் கொள்ளலாம்.

சிங்களக் கட்சிகள் தமிழரது உரிமைகளைக் கொடுக்கும் என்பதில் நீங்கள் இன்னும் நம்பிக்கை கொண்டுள்ளீர்களா? இல்லை யெனில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்துக்கு உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்யாமலாவது இருக்கலாம் தானே?

சு. எழிலமுகன், மன்னார்.

சிங்களக் கட்சிகள் தமிழர்களது உரிமைகளை தாங்களாக முன்வந்து கொடுக்க மாட்டார்கள் என்பதுதான் வரலாறு. ஆனால் சிங்களக் கட்சிகளின் பாரிய சதிவலைக்குள் விழுந்து முழுத் தமிழினத்தையும் அழிக்கப் போகின்றோமா அல்லது எமது மக்களை பாதுகாக்க முயற்சிக்கப் போகின்றோமா? நடந்து கொண்டிருக்கின்ற யுத்தத்தில் குறைந்தபட்சம் 60-70ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் மிகப் பெரும்பான்மை எமது இளைஞர் சமுதாயமே இரண்டாவதாக குறைந்த பட்சம் ஏழு தொடக்கம் எட்டு இலட்சம் மக்கள் அகதிகளாகி வெளிநாடுகள் போயுள்ளார்கள். இவர்களில் எத்தனை வீதம் மீண்டும் வருவார்கள் என்பது கேள்விக்குரியது. இவை தவிர பல ஆயிரம் மில்லியன்கள் பெறுமதியான எமது சொத்துக்கள் அழிந்து போய் விட்டன. இந்த யுத்தம் நிறுத்தப்படாவிட்டால், அல்லது இன்னும் சில வருடங்களுக்கு தொடர்ந்தால் இன்னும் எத்தனை இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறுவார்கள். மிகுதியாக எவ்வளவு தொகை மக்கள் இலங்கையில் வாழ்வார்கள். சிறீலங்கா அரசின் திட்டமிட்ட இந் நடவடிக்கையால், ஒட்டுமொத்தமான தமிழ் மக்களே இங்கிருந்து விரட்டப்படுவது தெரியவில்லையா? இதை நிறுத்தவேண்டும் என்பதுதான் இன்று உடனடித் தேவை. எனவேதான் இந்த யுத்தம் பிழையானதென ஈ.பி.ஆர்.எல்.எவ் கூறுகின்றது. இதைப் புரிந்து கொள்ளாமல் யுத்தத்தை தொடருவதென்பது தமிழினத்தை இல்லாதொழிக்க அரசு கொண்டுள்ள சதிப் பின்னலுக்குள் புலிகள் வீழ்ந்து விட்டார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. முன்னர் ஜே.ஆரின் சதிவலைக்குள் அகப்பட்டு இந்தியாவுடன் யுத்தம் புரிந்து இந்தியாவை பகைத்துக்கொண்டார்கள். இன்று அனுரத்தயின் சதிவலைக்குள் விழுந்து முழுத்தமிழ் மக்களுமே இல்லாதொழியும் நிலையே உருவாகி வருகின்றது. எனவேதான் புலிகளின் யுத்தத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிர்க்கின்றது. ஆகவே இன்றைய அவசரத்தேவை பேச்சுவார்த்தைக்கான வழிகளைப் பார்ப்பதே தவிர, யுத்தத்தை தொடர்வதல்ல. இந்நிலையில் எவ்வாறு புலிகளின் யுத்தத்தை நியாயப்படுத்துவது? எவ்வாறு அவர்களுக்கு ஆதரவு கொடுப்பது?

தனிநாட்டு.. 4ம் பக்கம் தொடர்ச்சி

பாதுகாப்பு படையினருக்கு எதிராகவும், சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராகவும், விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தமிழீழம் என்ற தனியரசை நிறுவவதற்கான முயற்சிகள் என்ற நம்பிக்கை பரவலாகப் பலவீனம் அடையத் தொடங்கியுள்ளமை. வெளிப்படை. விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற எண்ணமே பலரிடமும் வலுப்பெற்று வருகிறது. பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு பெறப்பட வேண்டுமாயின் அது தமிழீழத் தனியரசாக இருக்க முடியாது. எனவே விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வரத்தூண்டும் முயற்சிகள் மறைமுகமாக தமிழீழக் கோரிக்கையைக் கைவிடும்படி அவர்களைக் கோரும் எத்தனங்களாகவே கருதப்பட முடியும்.

சர்வதேச அரசியலரங்கில் பனிப்போர் முடிவுக்கு வந்து துருவப்பட்ட நிலைமைகள் தணிந்து பகைமைப் போக்கு கைவிடப்பட்டுள்ளது. இந்துமா கடல் பிராந்தியத்தில் அணு ஆயுதங்களுடனான வல்லரசுகள் முளைவிட்டுள்ளன. நீண்ட காலப் போர் தந்த களைப்பினாலும் உயிர் உடமை இழப்புக்களின் சோகத்தினாலும், நாளாந்த வாழ்க்கைக் கெடுபிடிகளாலும் மக்கள் பெருமளவுக்கு துவண்டு போயுள்ளனர். இதனால் தொடர்ந்து கொண்டிருக்கும் போருக்கு தேவையான ஆர்வத்தை வழங்குவதும், பொருளாதார தார்மீக ஆதரவை வழங்குவதிலும் பெரும் தேக்க நிலமை காணப்படுகிறது. வன்னிப் பகுதியிலிருந்து வெளியேறும் மக்களின் தொகை அதிகரித்துச் செல்வதும், குடாநாட்டில் இனங்காணப்படாமல் அடக்கம் செய்யப்படும் சடலங்களின் எண்ணிக்கை பெருகுவதும் இந்தப் போக்கை வெளிப்படுத்தும் குறிகாட்டிகளாகவே கொள்ளப்படலாம். அத்துடன் பிரதேச அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றிற்காக கொழும்பு அரசை நாடி நிற்கும் தன்மை பெருகிவருவதும் மக்கள் யுத்தத்தினால் சலித்துள்ளனர் என்பதை மட்டுமன்றி கொள்கையளவில் தமிழீழத் தனியரசுக் கோரிக்கையிலிருந்து விடுபட்டு விலகிவருகின்றனர் என்பதைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

முடிவுரை

இவற்றை மனங்கொண்டு பார்க்குமிடத்து, தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு வந்தால் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராக இருப்பதாக அரசாங்கம் வெளிப்படுத்தும் உணர்வு பலவித ஊகங்களைத் தோற்றுவிக்கின்றது. தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் இல்லாத வகையில் இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வைப் பெறத்தயார் எனக் கூறும் சக்திகளின் குரலை அரசாங்கம் கண்டு கொள்வதாக இல்லை. அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுப் பொதியை செழுமைப் படுத்தும் வகையில் ஐந்து தமிழ்க்கட்சிகளும் இணைந்து முன் வைத்த ஆலோசனைகள் கவனத்திற்கு கூட எடுக்கப்படவில்லை என்பதை இதற்கு ஒரு உதாரணமாக காட்டலாம்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்காக இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிப்பதை விடவும் அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்ளப்படுவதே பொருத்தமான விளைவுகளைத் தரக்கூடும். அதே சமயம் தமிழீழம் தவிர்ந்த ஒரு தீர்வுக்கு தயாராக இருப்பதை வெளிப் படுத்தும் வகையிலேனும் ஏனைய சக்திகளின் அரசியல் இருப்புக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்பதும் முக்கியமாகும். விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகளுக்கு இருக்கும் பேரம் பேசும் ஆற்றல் பலவீனப் படுத்தப் படுவதற்கு முன்பாக விடுதலைப் புலிகள் இத்தகைய இணக்கமான போக்கைக்கடைப்பிடிக்க முன்வராதுவிட்டால் இது வரையிலான முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகப் போய் விடுவதை தடுப்பது எவருக்கும் கடினமானதாகவே இருக்கலாம்.

விதுரன்

படிப்பகம்

www.padippakam.com

யாழ் குடாநாட்டின் உண்மை நிலவரங்கள்

"தலைகுப்புற தரையில் வீழ்ந்தாலும் மீசையில் மண்படவில்லை" என்ற பழங்கால பொதுமொழி இந்தக் காலத்தின் புதுமொழியாக புலிகளுக்கு பொருந்தும் என்று சொன்னால் அது மிகையாகாது. யாழ் குடாநாட்டை படையினரிடம் பறிகொடுத்த பின் புலிகள் பதுங்கியிருந்து பயமுறுத்தி சிவில் நிர்வாகத்தை நடாத்த முற்படுவது கேலிக் கூத்தானது. மக்களின் தேவைகளுக்காக இயங்கும் சிவில் நிர்வாகத்தை பயமுறுத்தல் மூலம் ஸ்தம்பிக்கச் செய்வது ஒரு மக்கள் விரோத நடவடிக்கையாகும். புலிகள் தங்களால் இயலாவிட்டாலும் இப்படி

ஒரு மாயையை வெளிஉலகுக்கு வெளிப்படுத்தவும் தமது இருப்பைதக்க வைத்துக் கொள்ளுவதற்கும் இப்படியான செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள், என்பதுதான் உண்மை.

யாழ். குடாநாட்டு உண்மை நிலைமைகளை மறைத்து, மறுதலிக்கும் இந்தப் போக்கு நீண்ட காலத்திற்கு தொடரமுடியாது. வன்னியில் புலிகளுடன் வாழும் மக்கள் அங்கு இருக்கப்பிடிக்காது சிறுபடகுகள் மூலம் யாழ், குருநகரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு விதத்தில் புலிகளிடமிருந்து தப்பித்தால் போதும் என்ற போக்கையே காட்டிநிற்கிறது. புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்வதைவிட படையினரின் கட்டுப்பாட்டில் வாழலாம் என்ற ஒரு நம்பிக்கை மக்களிடத்தில் ஏற்பட்டிருப்பதே இதற்கு காரணம். மக்களின் இந்தமன மாற்றம் தவிர்க்கமுடியாது. தனது கட்டுப்பாட்டில் வாழ்ந்த மக்களை ஒழுங்காக வைத்திருக்க முடியாத புலிகள் யாழ்சிவில் நிர்வாகத்தில் மூக்கை நுழைப்பது தான் வேடிக்கை.

யாழ். குடாநாட்டு இயல்பு நிலைமைகளைக் குறிப்பிடும் போது பாடசாலை, கல்லூரிகள், பல்கலைக்கழகம் இயங்குவதும் மாணவர்களின் வரவையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். மாணவர்களின் கல்வித்தரம் இந்த யுத்தத்தால் பின் தள்ளப்பட்டாலும் இயல்பு நிலை திரும்பிய இன்றய கால கட்டத்தில் காலையில் தேனீக்களாக மாணவர்கள் பாடசாலைகள், கல்லூரிகள் செல்வது கண்கொள்ளாக்காட்சி.

பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கட் போட்டிகள் வழமை போல் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. வியாபாரம், விவசாயம், மட்டுப்படுத்தப்பட்ட மீன் பிடித்தொழில், மற்றும் சிறுதொழில்கள், போக்குவத்து, மின் சாரம் முழு அளவில் இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது மக்களின் குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு செயல்படத்தொடங்கியிருக்கின்றன.

தொலைத்தொடர்பு வசதிகளும் ஓரளவு மேம்பட்ட நிலைக்கு வந்திருக்கின்றன. வெளி நாட்டில் வாழும் தமது பிள்ளைகள் உறவினர்களுடன் பேசுவதற்கு வாய்ப்புகள் இன்று ஏற்பட்டிருக்கின்றது. புலிகள் காலத்தில் கிளாலி கடல் தாண்டி வன்னிக் காடு தாண்டி பல சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பு சென்று பேச வேண்டிய நிலைமை இன்று மாறியிருக்கிறது.

இவற்றை எல்லாம் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் இந்த குறைந்தபட்ச தேவைகளையும் வசதிகளையும் பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவிக்கக்கூடாது என்று புலிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் நினைப்பது தான் வேதனை. யுத்தத்தால் பட்ட துன்பங்களில் இருந்து மீள்வது, மாணவர்கள்(STUDENTS) படிப்பது விளையாடுவது, போட்டிகளில் கலந்து கொள்வது, அப்பாடா என்று மக்கள் நிம்மதியாக இருப்பது போன்ற செயற்பாடுகள் பிழையான விடுதலைக்கு எதிரானவைகள் என்று புலிகள் கொள்கை முடிவெடுத்திருக்கிறார்கள் போலும்.

யாழ் குடாநாட்டில் மக்களை நிம்மதியாக வாழவிடக்கூடாது என்பதின் வெளிப்பாடே படையினர் மீதான சிறு தாக்குதல்களாகும். கடந்த மாதம் 27ம் திகதி கறுப்பு யூலையில் ஏதாவது தாக்குதல் செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் பூநகரி காட்டிலிருந்து கடல் வழியாக குருநகர் வந்த புலிகள் சின்னக் கடையில் முகாமிட்டிருந்த படையினரின் முகாமை தாக்கியிருக்கிறார்கள்.

இரவு 12மணிக்கு தொடங்கிய தாக்குதல் 3மணிவரை நீடித்திருந்தது. புலிகளின் தாக்குதலுக்கு படையினர் எதிர்த்தாக்குதல் தொடுத்திருக்கிறார்கள். ஏதோ நினைத்து வந்த புலிகள் தடுமாறிப் போனார்கள். பலத்த இழப்புக்களின் மத்தியில் சிதறுப்பட்டு ஓடினதுதான் மிச்சம். புலிகள் தரப்பில் தாக்குதல் படப்பிடிப்பாளர் சான்றோன் உட்பட நாலுபேர் பலி பலர் காயம். படையினர் தரப்பில் 2பேர் சாவு நாலுபேர் காயம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் புலிகளின் தரப்பில் தாக்குதலுக்கு வந்தவர்களில் பெரும் பகுதியினர் புதியவர்கள். அந்த இடத்திற்கு பழக்கப்படாதவர்கள். சிதறுப் பட்டு ஓடும்போது வீட்டுக் கதவுகளைத்தட்டி கடற்கரைக்கு பாதை கேட்டிருக்கிறார்கள். பொதுசனம் மூச். இத்தாக்குதல் நடந்த யூலை 27ம் திகதி குருநகர் கத்தோலிக்க மக்களின் புனிதமான தினம். சின்னக் கடை சந்தியோமை யோர் ஆலயத்தின் பெருநாள். அன்று இரவு பூசை (வேஸ்பர்) இருந்ததால் 11மணி வரை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது. இரவு பூசை முடிந்து அடுத்த நாள் காலை பெருநாள் பூசைக்கு போக வேண்டும் என்ற ஆவலுடன் நித்திரைக்கு போன ஜனங்களுக்கு அந்த இரவு சிவராத்திரியாகவே முடிந்தது.

தமிழ்மக்களின் விடுதலைக்காக போராடு கின்றோம் என்று சொல்லும் புலிகளின் இந்த மக்கள் விரோத நட வடிக்கையை கண்டிக்க அந்த ஆலய குருவானவர் கூட முன் வரவில்லை. காலையில் என்ன நடக்குமோ ஏதுநடக்குமோ என்று கலங்கியபடி வீட்டுக்குள்ளேயே முடங்கியிருந்த குருநகர் வாழ்மக்கள் அடுத்த நாள் பகல் 12மணிவரை வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டியிருந்தது.

மக்கள் பயந்தமாதிரி எந்த வித அசம்பாவித சம்பவங்களும் நடக்கவில்லை. படையினர் ஆத்திரம் கொள்ளாது கட்டுப் பாட்டுடன் இருந்தது புலிகளுக்கு கரிநாளாகவே இருந்திருக்கும். மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். மறுநாள் சந்தியோமையோர் ஆலயப் பெருநாள் சிறப்பாக நடைபெற்றது.

படையினருக்கும் புலிகளுக்குமிடையில் மோதல்கள் நடக்க வேண்டும் அதற்குள் சிக்கி அப்பாவி மக்கள் கொல்லப்பட வேண்டும். அந்தச் சம்பவங்களை சுடச்சுடச் செய்தியாக பத்திரிகைகளில் வெளியிட்டும் வானொலியில் ஒலிபரப்பவும் ஒரு எதிர்பார்ப்புடன் சிலர் காத்திருப்பதுதான் வேதனை. யாழ்ப்பாணத்தில் ஒரு சம் பவமும் நடக்கவில்லை யென்றால் பத்திரிகைகளுக்கும் புலிகளின் குரல், ஐ.பி.சி (லண்டன் ஒலிபரப்பு) வானொலிகளுக்கும் எல்லாம் சுருங்கிப் போய் விடும் செய்தித்தட்டுப்பாட்டால்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுவது ஒரு நம்பப் படமுடியாத சங்கதியாக இருக்கிறது. தவறான தகவல்களை புலிகளின் செய்தி ஊடகங்கள் கொடுப்பதும் ஒரு காரணம். இதற்கு மாற்றீடான பிரச்சாரசாதனங்கள் இல்லாமல் இருப்பதால் உண்மையான செய்திகள் மக்கள் சென்றடைவதில்லை.

புலிகலுக்கு ஓர் வேண்டுகோள்! இடம்பெயர்வால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் மக்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும் என்பதே பொதுவான கருத்தாகும்.

என்.ஆர். சோமு.

செம்மணி புதைகுழி தேர்தலுக்குத்தான் உதவுமா?

இது வரை வடகிழக்கிற்கும், வடகிழக்கின் எல்லை பிரதேசங்களான அனுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களுக்கும், கொழும்புக்குமென இருந்த அவசரகாலச் சட்டம், இப்பொழுது முழு இலங்கைக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. தென்பகுதியில் ஐந்து மாகாணசபைகளுக்கு நடாத்த இருந்த தேர்தலை பின்போடுவதற்காகவே, இவ் அவசரகாலச் சட்டம் முழுத்தீவிற்குமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகள் சட்டத்தின் பிரகாரம் மாகாணசபையொன்றின் காலஎல்லை முடிவடைந்த குறிப்பிட்ட காலத்திற்குள் (2 மாதம்) மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டு, புதிய மாகாண அரசு பதவி ஏற்கவேண்டும். அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலயே இதனைப் பின்போடலாம். இதனைப் பின்போட சட்டத்தில் வேறு வழி வகைகள் இடையாது. இதனடிப்படையில் தான் முழுத்தீவிற்கும் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. வட-கிழக்கு மாகாணத்திலும் இதனடிப்படையிலேயே கடந்த 8வருடமாக மாகாணசபைத் தேர்தல்பின் போடப்பட்டுவருகின்றது.

தென்பகுதியில் தேர்தல் நடாத்துவதானால், அதற்கான பாதுகாப்பிற்கு வட-கிழக்கில் இருந்து இராணுவத்தை அழைக்கவேண்டி இருக்கும், அப்படி அழைத்தால், யாழ் நோக்கிய பாதையை திறப்பதற்கான தமது முயற்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படும், எனவே தேர்தலை பின்போட வேண்டும் என பாதுகாப்பு மந்திரி அனுரத்தரத்வத்தையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார். மொத் தத்தில் அரசாங்கம் தனது இராணுவ இலக்குகளில் கவனமாகவே உள்ளது என்பதையே இது வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது.

அரசாங்கம் இவ்வாறு கூறினாலும் கூட, தென்பகுதியில் பொதுஜன முன்னணி அரசுக்கு ஆதரவு குறைந்து வருவதாலேயே இத் தேர்தல் பின் போடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. எதிர்க்கட்சிகளின் கூற்றிலும் ஓரளவு உண்மை இருப்பதாகவே தெரிகின்றது. இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த போது வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், வேலையில்லாத் திண்டாட்டத்தை இல்லாமல் செய்வோம். யுத்தத்தை நிறுத்தி சமாதானத் தீர்வொன்று காண்போம் எனப்பல வாக்குறுதிகள் அளித்திருந்தது. ஆனால் 4வருடங்கள் முடிந்து விட்டநிலையில் இவை எதுவுமே இன்னும் தீர்க்கப்படவில்லை. மாறாக பாண், பருப்பு தொடக்கம், சகல அத்தியாவசியப் பொருட்களுமே பல மடங்குவிலை அதிகரித்துள்ளன.

சமாதானம் என்பது கானல் நீராகிவிட்டது மாத்திரமல்ல, யுத்தத்தின் மூலம் சமாதானம் என யுத்தமும் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்நாட்டு வருமானத்தில் 25சதவீத செலவு செய்யப்படுகின்றது. இதனை சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்றில்லை. இதனால்தான் அரசு தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சுகின்றது. என்றும் கூறப்படுகின்றது.

அது மாத்திரமல்லாமல் மாகாண சபைகளில் மக்கள் மத்தியில் செல்வாக்குடைய தலைவர்களும் பொதுஜன முன்னணியில் இல்லை என்பதால், தமது கைவசம் இருந்த மாகாணசபைகளையே இழந்துவிடுவோமோ என்ற ஐயப்பாடும் ஆளும் கட்சிக்கு உள்ளது.

அதே சமயம் ஜனாதிபதிக்கு சிங்கள மக்கள் மத்தியில் இன்னும் ஆதரவு உள்ளதால், முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தி அதில் வென்றதன்பின்னர் சூட்டோடுசூடாக மாகாணசபைத் தேர்தலை வைத்தால், தாம் பெரும் பான்மையான சபைகளைக் கைப்பற்றலாம் என்றும் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதாம். ஆனால் ஜனாதிபதித்தேர்தல் நடாத்த இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா என்பதும் சந்தேகமே.

இவற்றின் பின்னணியில் பார்த்தால், அரசுக்கு ஓர் சாதகமான சூழல் தோன்றும் வரை மாகாணசபைத் தேர்தல்பின் போடப்படும் என நம்பலாம். யாழ்ப்பாணத்திற்கான வீதியைத் திறந்து, அதன் பின்னர் இராணுவத்தை வரவழைத்து தென்பகுதியில் தேர்தலை நடாத்துவோம், என்பதெல்லாம் வெறும் கண்கட்டு வித்தைதான். யாழ்ப்பாணத்திற்கான வீதியைத்திறந்ததும், தனது வீரச்செயலைக் காட்டி, சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற அடிப்படையில் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம் உண்டு.

அச்சமயத்தில் தமிழ் வாக்குகளும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, மனித உரிமைகள் குழு, துன்புறுத்தல்களுக்கு எதிரான குழு என பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்களால் ஏதாவது செய்ய முடியுமோ இல்லையோ, நிட்சயமாக ஜனாதிபதிக்கான பிரச்சாரத்திற்கு இவை உதவும், அதுமாத்திரமல்லாமல், செம்மணிப் படுகொலை விடயங்கள் கூட அப்பொழுது அரசாங்கத்தால் கிளறப்படலாம் என்பதுடன் தமிழ் வாக்குகளைக் கவர்தற்கான வேறு பல நாடகங்களும் அரங்கேற்றப்படலாம்.

எனவே இன்றுள்ள சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடக்கும் என்று எதர் பார்க்கப்பதற்கில்லை.

படிப்பகம்

www.padippakam.com

நடந்து முடிந்த பேச்சு.....

8ம் பக்கம் தொடர்ச்சி

பிரபாகரன் என்னிடம் தெரிவித்தார். அத்துடன்ஒப்பந்தத்தன் அமுலாக்கம் தொடர்பானதமது உடன்பாட்டை மீளப்பெற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான முடிவு முழுக்க உங்களிலேயே தங்கியுள்ளது என்ற நிலையை எடுத்த நான், இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கு வாய்ப்பளிக்கப்படாமல் முறியடிக்கப் படுமானால் எதிர்காலத்தில் தமது அபிலாசைகளை பூர்த்தி செய்ய இந்தியா உதவும் என்று எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்படலாம் என்பதை தெரிவித்தேன். தான்முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சிறிலங்கா காட்டிய ஆர்வம் போதுமானதாக இல்லை என்று செம்டம்பர் 26-28 திகதிய சந்திப்புக்களின் போது பிரபாகரன் எடுத்துக்கூறினார்.

அத்துடன் இந்திய அரசாங்கம் குறிப்பிட்ட சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் இந்தியாவின் செய்தி ஊடகங்கள் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் பிரச்சாரத்தை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மேலும் சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளிடம் விடப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட்டு அது தனது பொறுப்புக்களை ஏற்கும் வரை அமைதிப்படையின் ஈடுபாடு என்பது அமைதிகாப்புப்பணியின் முக்கியமானதொரு பகுதியாகும் என்பதை பிரபாகரனுக்கு நான் சுட்டிக்காட்டினேன். அத்துடன் அவர் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் பூர்த்தியாக்கப்படாமையே சிக்கல் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு, இந்திய அமைதி காப்புப்படைக்கும், அரசுக்கும் எதிராக பொதுமக்களைக் கிளர்ச்சியுறத் தூண்டிவிடுவது நிறுத்தப்படவேண்டும் எனவும் பிரபாகரனுக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

சகாக்களின் பராமரிப்புக்காக மேலதிக நிதி உதவி கேட்டு புதுடில்லியிடம் கோரிக்கை விடுத்திருந்த போதும் இதனை நிறைவேற்றும் வகையில் பிரபாகரன்எனது தலையீட்டை கோரியிருந்தார். இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டதும் இந்திய இராணுவத்தினருக்கும், உள்ளூர் நிர்வாகத்திற்கும் எதிரான எதிர்ப்புகள் மீளப்பெறப்படும் என்று பிரபாகரன் வாக்குறுதி தந்தார்.

செம்டம்பர் 26-28 திகதிகளில் எனக்கும் அவருக்கும் இடையில் நடந்த கலந்துரையாடல்களின்போது பெறப்பட்ட முடிவுகளுக்கு இசைவாக நடப்பதற்கு பிரபாகரன் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டார். இருப்பினும் அவர் இந்த உடன்பாட்டு அறிக்கையில் (Agreed minute) கையொப்பமிட மறுத்துவிட்டிருந்தார்.

இந்த உடன்பாட்டு அறிக்கை ஒரு அரசியல் ஆவணம் எனக் குறிப்பிட்ட அவர்தான் அடிப்படையில் இராணுவத் தலைவர் என்பதால் அதில் கைச்சாத்திடுவது பொருத்தமற்றது எனக் காரணம் கூறினார். ஏனவே இந்த ஆவணத்தில் கையெழுத்திட மாத்தையாவை அழைக்கட்டும் என பிரபாகரன் தெரிவித்தார்.

இதனால் இந்தியப் பிரதிநிதிகள் சார்பாக முதற் செயலாளர் ஹர்தீப்பூரிதான் இவ்வாவணத்தில் கையெழுத்திடுவார் என நான் பிரபாகரனிடம் தெரிவித்தேன். இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக பிரபாகரனால் கையெழுத்திட அதிகாரமளிக்கப்பட்ட ஒரேஒரு ஆவணமாக இது மட்டுமே உள்ளது.



இந்த ஆவணத்தை முழுமையாக இங்கு தருவது பயனுடையதாகும்.

உடன் பாட்டு ஆவணம்.

பின்வரும் அமைப்பு முறைப்படி வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக சபையை அமைக்க ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா இணங்கியுள்ளார் என்பதை உயர்ஸ்தானிகர் திரு.வே.பிரபாகரனிடம் தெரிவித்தார்.

முதன்மை நிர்வாகி - சபை நிர்வாகி.

புலிகள் சமர்ப்பிக்கும் பெயர்ப் பட்டியலில் உள்ள மூன்றுபேரிலிருந்து ஒருவர் நியமனம் செய்யப்படுவார்.

அ.புலிகள்	5 பிரதிநிதிகள்
ஆகூட்டணி	2 பிரதிநிதிகள்
இ. முஸ்லிம்கள்	2 பிரதிநிதிகள்
ஈ. சிங்களவர்	2 பிரதிநிதிகள்
மொத்தம்	12 பிரதிநிதிகள்

மேற்குறிப்பிட்டவாறு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதைப் பிரபாகரன் ஒப்புக்கொண்டார். மாகாணசபைக்குரிய தேர்தல்கள் நடத்தப்படும் வரை பெங்களூர் பேச்சுக்களின் போது உருவான உடன் படிக்கையின் பந்திகள் 10.1 மற்றும் 10.2க்கு ஒத்ததாக தனது பிரத்தியேக அதிகாரங்களை இடைக்காலத்திலுள்ள சபை நிர்வாகியிடம் வழங்க ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதை உயர்ஸ்தானிகர் ஜே.என். டிக்சித் புலிகள்தலைவர் வே.பிரபாகரனிடம்தெரிவித்தார்.

அந்தப் பந்திகளில் குறிப்பிட்டுள்ளபடி சபை நிர்வாகி, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் ஏனைய நிர்வாகப் பணிகளுக்குப் பொறுப்பாக இருப்பார்.

இந்திய உயர்ஸ்தானிகருக்கு 13செம்டெம்பர் 1987ம் புலிகளால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த மகஜரில் முன்வைக்கப்பட்டிருந்த ஐந்து கோரிக்கைகளும் இடைக்கால நிர்வாகம் உருவாகும் போது நிறைவேற்றப் படக்கூடியதாக இருக்குமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

யூலை 87இல் இந்தியப் பிரதமர் வழங்கியிருந்த வாக்குறுதியின் அடிப்படையில் இந்திய இலங்கை உடன்படிக்கையை அமுல்செய்ய முழு அளவில் ஒத்துழைப்பதாக பிரபாகரன் கூறினார்.

தமது சகாக்களுக்கும் தலைவர்களுக்குமான புதிய பாதுகாப்புச் சூழ்நிலை உருவாக்கப்பட்டால் தங்களுடைய பாதுகாப்புக்கான தனிப்பட்ட ஆயுதங்கள் தவிர்ந்த அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைப்போம் எனப் பிரபாகரன் குறிப்பிட்டார்.

பொலிஸ்படை உட்பட சகலபொதுமக்கள் நிர்வாகமும் அமைதியாக செயற்பட புலிகள் முழு ஒத்துழைப்பையும் தருவார்களென பிரபாகரன் ஒப்புக்கொண்டனர்.

மாகாணசபைக்குரிய நீதியான தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அதனை நடைமுறைப் படுத்த புலிகள் முழு ஒத்துழைப்பையும் நல்குவார்கள் எனவும் பிரபாரகன் ஒப்புக்கொண்டனர்.

புலிகளும், இந்தியாவின் அதிகார பூர்வ செய்தி ஊடகமும் பரஸ்பர விமர்சனங்களை நிறுத்திவிடுவதென உயர் ஸ்தானிகர் ஜே.என். டிச்சித்தும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் ஒப்புக்கொண்டார்.

மேற்குறிப்பிட்ட பந்திகள்2-11வரையிலான அம்சங்கள் அடையப்பட்டதும் உடன்பாட்டு அறிக்கை மீது கையெழுத்திடப்பட்ட 48மணிநேரத்திற்குள் சிறீலங்கா அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபையின் உருவாக்கத்தினை அறிவிக்கும்.

மேற் குறிப்பிட்ட உடன்படிக்கையின் முக்கியமான அம்சங்களை இந்தியாவும் சிறீலங்காவும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் எனவும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

இவை பூர்த்திசெய்யப் படுவதை அடுத்து புலிகள் கிளர்ச்சிகளிலிருந்து வாபஸ் பெறுவதையும், சாகும்வரையிலான உண்ணாவிரதங்களை கைவிடுவதெனவும் அறிவிப் பார்கள் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ் உடன் படிக்கையில் முக்கியமான ஒரு அம்சம் தீவிரமான அழுத்தத்தை வேண்டிநிற்

கின்றது.

இடைக்கால ஆட்சிச்சபையில் அங்கம் பெறும் பன்னிரண்டு பேரில் தலைமை நிர்வாகி உட்பட ஆறுபேர் விடுதலைப் புலிகளின் சிபார்சு பெற்றவர்களாக இருப்பார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் நியமனமாகும் இருவரில் ஒருவர் விடுதலைப் புலிகளின் சிபார்சு பெற்றவராக இருப்பார்.

இடைக்கால நிர்வாகத்தினுள் ஏனைய குழுக்களை சேர்ந்தவர் வரவிரும்பினால், விடுதலைப் புலிகளுடன் ஒத்திசைவாக இயங்கக் கூடிய ஒருவர் ஏனைய அனைத்து இயக்கங்களையும் பிரதி பலிப்பவராக நியமனம் செய்யப்படும் வாய்ப்பும் இருந்தது. தம்மால் நியமிக்கப்படும் ஐந்து பேரில் ஒருவர் ஈரோஸை சேர்ந்தவராக இருப்பார் என விடுதலைப் புலிகள் தெரியப்படுத்தினர். இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவர் விடுதலைப்புலிகளால் நியமிக்கப்படுபவராக இருப்பார். ஆக இடைக்கால நிர்வாகசபையின் மொத்தமுள்ள பன்னிரண்டுஉறுப்பினர்களில் எட்டு அல்லது ஒன்பது பேர் விடுதலைப்புலிகளின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாக இருப்பர். மேலும் அதிகாரம் வழங்குவது தொடர்பான கோரிக்கைகள் முழு அளவில் இல்லாவிடினும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தன.

பிரபாகரனை பிரதம நிர்வாகியாக பொறுப்பேற்க்கச் செய்யும் தமது விருப்பதை ஜே.ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் வெளிப்படுத்தினர். அத்துடன் பிரபாகரன் நிர்வாகப் பொறுப்பை ஏற்க முன்வருவாரேயானால் பிரதம நிர்வாகி தெரிவிற்கான பெயர் பட்டியல் தேவைப் படாது எனவும் குறிப்பிட்டிருந்தார். தான் நிர்வாகப் பொறுபபை ஏற்க பிரபாகரன் மறுத்துவிட்டார் என்ற செய்தியையே ஜெயவர்த்தனவுக்கு அனுப்ப வேண்டியிருந்தது.

திலீபனின் உயிர் பிரிந்தமையையிட்டு எனது துக்கத்தை வெளிப்படுத்துவதற்காக செப்டம்பர் 26இல் பிரபாகரனுடன் இடம் பெறவிருந்த பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டது. இடைக்கால நிர்வாகசபை உருவாகிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் பெறுமதி மிக்க உயிர் ஒன்று (திலீபன்) பறிக்கப் படுவது மிகவும் சிறுபிள்ளைத் தனமானது என்பதை ஏற்கனவே நான் கூறியிருந்தேன்.

உடன்படிக்கையின் நோக்கங்களை பகிர்ந்து கொள்கையில், நடைமுறைப் படுத்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக திலீபன் ஏற்கனவே மனமுடைந்திருந்தார். இவ்வகையில் தனது அரசியல் நம்பிக்கைகளுக்காக புலிகளின் கொள்கைக்கேற்ப திலீபன் சாவை அணைத்துக் கொண்டார் என பிரபாகரன் தெரிவித்தார். திலீபனிடம் செல்வதற்கு நான் பிரியப்படாமலிருந்தபோதும் எனது இரு மூத்த அலுவலர்களை அனுப்பி உண்ணாவிரதத்தை கைவிடும்படி கோரிக்கை விடுவதற்கு சம்மதித்திருந்தோம் என்பதை பிரபாகரனுக்கு ஞாபகப்படுத்தினேன்.

இந்தச் செயற்பாடு, நோக்கத்தை நிறைவேற்றியிருக்காது என்பதே பிரபாகரனின் அபிப்பிராயமாகவிருந்தது. நான் நேரில்போய் உண்ணாவிரத்தை கைவிடக் கோரவேண்டுமென எதிப்பார்க்கப்பட்டபோது இந்த விமர்சனத்திற்கு நான் பதிலளிக்கவில்லை. உடன்பாட்டு அறிக்கையில் கையெழுத்திடப் பட்டதும் பிரதம நிர்வாகி பதவிக்கு புலிகள் மூவரின் பெயர்களை பரிசீலனைக்கு கொடுத்தனர். இவர்களின் இருவரது பெயர்களையே என்னால் இப்போது ஞாபகப்படுத்த முடிகிறது.

மட்டக்களப்பு மாவட்ட முன்னைநாள் அரசாங்க அதிபர் என். பத்மநாதன் யாழ் மாநகர முன்னாள் ஆனையாளர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோரின் பெயர்கள் பட்டியலில் இருந்தது. மூன்றாவது நபரின் பெயர் எனக்கு நினைவில்லை. இந்தப்பெயர்களுடன், உடன்பாட்டு அறிக்கையின் திட்டங்கள் அமுலா வதைக்காண ஆசைப் படுவதாக பிரபாகரன் என்னிடம் கூறியிருந்தார்.

செம்டம்பர் 28இல் கொழும்பு திரும்பிய ஒரு சிலமணி நேரங்களுக்குள் ஜெயவர்த்தனாவை சந்தித்தேன் அப்போது பிரதம நிர்வாகியாக சி.வி.கே. சிவஞானம் அவர்களை ஜெயவர்த்தனா தெரிவு செய்தார். இடைக்கால நிர்வாக சபைக்கான ஏனையோரின் பெயர்ப்பட்டியலை பெற்றுக்கொள்ளும்படி ஜெயவர்த்தனா என்னைக் கேட்டுக் கொண்டார். இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக உத்தியோக பூர்வமாக கட்டளை பிறப்பிப்பதற்கு விரைவாக பெயர்ப் பட்டியல் பெறப்பட வேண்டிய தேவை இருந்தது.

நான் வீட்டுக்கு சென்றதும். யாழ்ப்பாணத்திலுள்ள அமைதிப் படையை சேர்ந்த தளபதி ஹர்கிரத்சிங்கிற்கு தொலைபேசியில் சிவஞானம் பிரதம நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளதை தெரிவித்தேன். அத்துடன் இடைக்கால நிர்வாக சபையில் பங்கேற்பவர்களின் பெயர்ப்பட்டியலைப் பெற்றுத்தரும்படியும் கோரினேன்.

நடு இரவில் யாழ்ப்பாணத்திலிருந்து பாலசிங்கம் என்னுடன் தொடர்புகொண்டார். சிவஞானம் பிரதம நிர்வாகியாக தெரிவு செய்யப்பட்டதை பிரபாகரன் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூறினார். பிரதம நிர்வாகியாக பத்மநாதன் நியமிக்கப்பட வேண்டும் என பிரபாகரன் விரும்புகிறார் எனவும் தெரிவித்தார். புலிகளின் ஒரேயொரு தெரிவாக பத்மநாதனே இருந்தார். பிரபாகரன் தந்திருந்த மூவரின் பெயர் கொண்ட பட்டியலில் இருந்தே சிவஞானம் தெரிவு செய்யப்பட்டார் எனவும் ஜெயவர்த்தனாவுடன் இந்த அடிப்படையிலேயே பேசினேன்எனவும்குறிபிட்டேன்

மூன்று பெயர்கள் தரப்பட்டிருந்தாலும், அவை முன்னுரிமை வரிசைப்படியே உள்ளது எனவும் பாலசிங்கம் சுட்டிக் காட்டினார். இத்தகைய விதண்டாவாதங்களை ஜெயவர்த்தனா ஏற்றுக் கொள்ளக் கூடியவரல்ல என்று எனது மனப்பதிவை பாலசிங்கத்திற்கு சுட்டிக்காட்டினேன்.

தொடர்ச்சி 13ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

நடந்து முடிந்த பேச்சு.....

12ம் பக்கம் தொடர்ச்சி

பிரதமநிர்வாகி நியமனம் பற்றிய புலிகளின் நிலைப் பாட்டை எடுத்துக்கூற நான் மீண்டும் ஜெயவர்த்தனாவிடம் சென்றேன். மட்டக்களப்பில் உதவிஅரசாங்க அதிபராக இருந்தபோது பத்மநாதன் பல தீவிரவாதிகள் சிறையிலிருந்து தப்புவதற்கு உதவியிருக்கிறார். எனவே எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவரை பிரதம நிர்வாகியாக நியமிக்க முடியாது என்பது ஜெயவர்த்தனாவின் நிலையாக இருந்தது. தனது அரசின் விசுவாச சத்தியத்திற்கு எதிராக செயற்பட்ட ஒருவரை வடக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதம நிர்வாகியாக நியமிப்பதற்கு அவரால் இயலவில்லை.

செம்டம்பர் 23-28க்கு இடையில் பிரபாகரன் மற்றும் தமிழ் போராளிகள் விடுதலைப் புலிகள் உட்பட பலருக்கும் பொது மன்னிப்பு வழங்கப் பட்டுள்ளது. என்பதையும், ஜெயவர்த்தனா எனது கவனத் திற்கு கொண்டு வந்தார். அத்துடன் தடுப்புக்காவலில் இருந்த கைதிகள் மற்றும் குற்றச் செயல்களுடன் சம்பந்தப் பட்டவர்கள் உட்பட பலரும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் எண்ணங்களும் நோக்கங்களும் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே இதனை செய்ததாக ஜெயவர்த்தனா குறிப்பிட்டார். ஆகையால் புலிகளின் மனமாற்றத்தால் பெரிதும் பதட்டமடைந்தவராக அவர் காணப்பட்டார் நாட்டின் பாரிய நலனுக்காக நான் விட்டுக்கொடுப்புக்களை செய்யத்தயாராயுள்ளேன். ஆனால் நான்தான் இப் போதும் ஜனாதிபதி. எனது நாட்டின் ஒரு பகுதியில் எப்படி நிர்வாகம் நடத்தப்படவேண்டும் என தீவிரவாதிகள் குழுவினரால் நான் வழி நடத்தப்பட முடியாது. என்பது ஜெயவர்த்தனாவின் கூற்றாக இருந்தது. அமைதியாக இருக்கும்படி நான்அவரிடம் வேண்டினேன். எனினும் பயன் இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள அமைதிப்படைத் தலைமையகத்திற்கு சிவஞானம் இடைக்கால நிர்வாகசபையின் பிரதம நிர்வாகியாக இருக்க வேண்டும் என்பதில் ஜெயவர்த்தனா பிடிவாதமாக இருப்பதையும், இதனை திரு.சிவஞானத்திற்கு தெரியப்படுத்துமாறும் தொலைபேசியில் அறிவித்தேன்.

பத்மநாதன் பிரதம நிர்வாகியாக நியமிக்கப்படும்வரை புலிகள் இடைக்கால நிர்வாகசபைக்கான ஏனைய பிரதிநிதிகளின் பெயரை அனுப்பவோ, சபையில் பங்கு கொள்ளவோ போவதில்லை என்னும் செய்தி எனக்கு செம்டம்பர் 30இல் அறிவிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையை உருவாக்கவும், ஒழுங்கான மாகாணசபையை தோற்று விக்கவும், தமிழ் அரசொன்றை நிறுவுவதற்கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் முளையிலேயே கருகிப்போயின. தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்ச்சிகள் யாவும் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று.

தோழர் நிக்கிலுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் இரங்கல்.

யூன் 27ஆம் திகதி இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரும். மெயின் ஸ்ரீம் பத்திரிகையின் ஸ்தாபகரும் மனித உரிமைப் போராளியும், நீண்டகாலமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தவருமான பத்திரிகையாளர் நிக்கில் சக்கரவர்த்தி அவர்கள் தனது 84வது வயதில் புதுடில்லியில் காலமானார். மூளையில் ஏற்பட்ட கட்டிக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு 38நாள் மயக்க நிலையிலிருந்தே அவர் மரணமானார். 1942ஆம் வருடம் ரேணுராய் அவர்களை திருமணம் செய்தார். தற்போது மெயின் ஸ்ரீம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சுமித் சக்கரவர்த்தி இவரது மகனாவார். நிகில் சக்கரவர்த்தி 1944 தொடக்கம் 1946வரை கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான மக்கள் யுத்தத்திற்கும் 1946 தொடக்கம் 1948வரை மக்கள் யுகம் பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்தார். 1962இல் அவர் மெயின் ஸ்ரீம் பத்திரிகையை ஆரம்பித்தார். 1967தொடக்கம் 1992 வரை அதன் ஆசிரியராக இருந்தார்.

1975-77 காலப்பகுதியில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டவேளை பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு ஜீவனுள்ள பங்களிப்பை வழங்கினார். அவர் பல இந்திய தேசிய பத்திரிகைகளிலும் பிராந்திய பத்திரிகைகளிலும் மிக முக்கியமான பத்தி எழுத்தாளராக இருந்திருக்கிறார். அவர் சிவில் உரிமைகள் விடயத்தில் சமரசமில்லாத போராளியாகவிருந்தார். பிராந்திய அரசியல் என்றளவில் பாகிஸ்தான் இந்திய மக்களிடையே அடிமட்டத்திலிருந்து உறவு பலப்படுத்தப்படவேண்டும் என்பதில் அவர் அவாவுற்றார். நிகில் உண்மையான தேசியவாதியாக, மதச்சார்பின்மையை வலியுறுத்துபவராக, ஜனநாயக வாதியாகத் திகழ்ந்தார். இடதுசாரிகள் முற்போக்கு முகாமில் நண்பர்கள் பலர் இருந்தார்கள். அவர் 1978வரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவராக இருந்தார். அவருடைய படிப்பறையில் நாஜிகளால் படுகொலை செய்யப்பட்ட செக்கோசிலவகிய பத்திரிகையாரும் போராளியுமான யூலியஸ் பூசிக்கின் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. "மகிழ்ச்சியான மனித வாழ்வுக்காகவே நாம் போராடுகின்றோம். அதற்காக மகிழ்ச்சியுடன் மரணத்தை சந்திக்கவும் தயாராயிருக்கின்றோம். எங்கள் பெயருடன் துயரத்தை இணைக்க அனுமதியோம்." காலஞ்சென்ற நிகில் சக்கரவர்த்தி அவர்களுக்கு எங்கள் அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கில்லாடித் தமிழர்கள்

புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கவென வெளிநாடுகளில் நிதி திரட்டத் தொடங்கியுள்ளனராம். இலண்டனின் 1000 பவுணும், ஏனைய நாடுகளில் 2000 டொலரும் தருமாறு வற்புறுத்தப்படுகின்றனராம். ஏற்கனவே நிதி தொடர்பான கையாடலில்தான் தலைகர் பிரான்சிலிருந்து வன்னிக் காட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளாராம். இதனைப்போன்றே சுவிஸ் முரளியின் முகவரியும் தெரியவில்லையாம். இந்த நிதி திரட்டுதலுடன் யார் யார் முகமிழந்து போகின்றார்களோ.

கடல்கடக்கத் தயாராகும் புலிகள்

யுத்த முனையில் கை, கால் இழந்து ஊனமடைந்தவர்களை இதுவரை புலிகளே பராமரித்து வந்தார்கள். இப்பொழுது அவர்களில் பலரை தத்தமது வீடுகளுக்கு போகும் படி கூறப்பட்டுள்ளதாம். இதனால் வன்னியின் பல இடங்களிலும் இவ்வாறு ஊனமடைந்தோரைப் பார்க்கக் கூடியதாக உள்ளதாம். அதே சமயம், யாழ்ப்பாணத்திற்கான வீதியை விரைவில் இராணுவம் கைப்பற்றி விடும் எனவும் புலிகள் மத்தியில் பேசப்படுகின்றதாம். இதனால் ஏதாவதொரு வகையில் பணத்தைச் சேர்த்து இந்தியாவிற்கு போகும் வழியை பார்ப்பதிலே பல புலி உறுப்பினர்கள் மும்முரமாக உள்ளனராம்.

தவமிருந்த சிவா

இந்தியப் பிரதமர் கொழும்புக்கு வந்திருந்த பொழுது தமிழ் கட்சிகள் கூட்டாகச் சந்தித்தால் அது பெறுமதியானதாக இருக்கும் என நினைத்து இன்னொரு தமிழ்க்கட்சித் தலைவர் கூட்டணியின் சிவப்பழத்தை சந்தித்தாராம். அவரோ தம்பி அவரைப்பார்ப்பதற்கே நேரம் கிடைக்குமோ தெரியவில்லை. பிறகேன் இதைப்பற்றி பேசுவான் என்றாராம். ஆனால் நடக்க முடியாத நிலையில் இருந்த சிவமானவர் 6.30மணியில் இருந்து கதவருகே கதிரை போட்டு காவலிருந்து இந்தியப் பிரதமரைச் சந்தித்தாராம். கூட்டாகப் போய்ச் சந்திப்பதில் கூட்டணிக்கேன் இந்தக் தயக்கம்.

அண்ணை எப்ப சாவான் தின்னை எப்ப காலியாகும்?

ஈ.பி.டி.பி தலைவருக்கு களுத்துறைச் சிறையில் நடந்த தாக்குதலால் அபாயகரமான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்திருந்த போது, அடுத்தது யாரென்ற இழுபறியாம். தலைவரைக் காப்பாற்றுவதிலும் விட கதிரையை பிடிக்க போட்டியாம். அதில் வாராந்தம் முரசறையும் ஆசிரியரும் களத்தில் முன்னின்றாராம். இவர்களது எரிச்சலூட்டும் நடவடிக்கையால் தலைவருக்கு பாதுகாப்பாக இறுதிவரை நின்றவர்கள் கூட ஆளை விட்டால் போதும் சாமியென போய்விட்டார்களாம்.

கடையில் கிடைக்கும் மித் வெடி

தம்பி..... அண்ணனுக்கு ஒரு சூடான மித்வெடி கொண்டுவா! தேனீர்கடை முதலாளி வேலை செய்யும் பொடியனை கூறி அழைத்தார். அதிர்ச்சியடைய வேண்டாம். இன்று யாழ். குடாநாட்டின் பெரும்பாலான தேனீர்கடையில் விற்பனையாகும் ஒரு சாப்பாட்டுப் பொருள்தான் அது, யுத்தத்தில் பிறந்த இந்த மித்வெடி ஒன்றரை அங்குலம் உயரம் 4அங்குலம் விட்டம் கொண்டது. எண்கணிதம் தெரிந்தவர்கள் இதன் பரப்பளவையும், சுற்றளவையும் கண்டுபிடித்துவிடலாம். மரவள்ளிக்கிழங்கு, அவித்த முட்டை, இறைச்சி, வெங்காயம் சேர்ந்து தயாரிக்கப்பட்ட மித்வெடியின் விலை 15ரூபாதான். ஒன்று சாப்பிட்டால் வயிறு நிரம்பி பசி பறந்துவிடும். ஏழைகள் மத்தியில் இந்த மித்வெடி சிற்றுண்டிக்கு மவுசு அதிகம். இதற்கு மித்வெடி என்று பெயர் வைத்தவரை பாராட்டாமல் இருக்க முடியாது. யாழ் குடாநாட்டின் தடைசெய்யப்பட்ட பொருள்களில் ஒன்றாக இதை அரசாங்கம் சேர்க்காமல் இருந்தால் சரி.

பொற்காலம்

94ம் ஆண்டு யாழ்- கோட்டையை படையினரிடமிருந்து கைப்பற்றிய புலிகள் அதை இடித்து தள்ளிவிட்டார்கள். ஒரு பழைய நினைவுச் சின்னமான ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கோட்டையை ஏன் இடித்தார்கள் என்பது அப்போதுயாருக்கும் புரியவில்லை. இடிப்புக்கு புலிகள் சொன்ன வியாக்கியானம், 'அது நினைவுச் சின்னம் அல்ல ஒரு அழிவுச்சின்னம். படையினரின் ஷெல் தாக்குதலால் யாழ் நகரமே சிதைக்கப்பட்டது. ஷெல்கள் இந்த கோட்டையிலிருந்துதான் ஏவப்பட்டது. அப்படிப்பட்ட இந்த அழிவுச் சின்னம் இருக்கக்கூடாது. நியாயமான காரணம்தான். ஆனால் கோட்டை இடிப்புக்கு வேறு காரணமும் இருந்திருக்கின்றது.

படையினர் மீண்டும் யாழ் நகரை கைப்பற்றி கோட்டையில் குடியேறக் கூடாது என்பதுதான். அப்போ! யாழ்நகரம் பறிபோகும் என்பதை தலைவர் பிரபாகரன் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்று சொல்லுங்கள்.

☆ சைக்கிள் ரயருக்கு ரியூப் இல்லையா வைக்கோலை கயிறாக திரித்து போட்டுக்கொள்.

☆ ரேடியோ கேட்க பற்றரி இல்லையா சைக்கிள் டைனமோவில் கேட்டுக்கொள்.

☆ வாகனங்களுக்கு பெற்றோல் இல்லையா மண்ணெண்ணெய் மாற்றி ஓட்டிக்கொள்.

☆ சோப்பு இல்லையா பனங்கிழங்கில் உற்பத்தி செய்து துணிகளை துவைத்துக்கொள்.

இன்றைய விஞ்ஞான உலகில் இப்படி எங்கே நடந்தது என்று கேட்கிறீர்களா. நம்ம தமிழ் ஈழத்தில் தான். புலிகளின் ஆதரவாளர்களால் பொற்காலம் என்று சொல்லப்பட்ட புலிகளின் ஆட்சிக்காலத்தில்தான் 95ம் ஆண்டு யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றியிருக்காவிட்டால் தமிழ் மக்கள் கற்காலத்திற்கே ஓட்டிச்செல்லப் பட்டிருப்பார்கள். நெருப்பு பற்றவைக்க கற்களைத் தேடியிருப்பார்கள். நல்லகாலம் மக்கள் தப்பித்தார்கள்.

Digital Library

www.padippakam.com

திருகோணமலை துயரம்

பத்தாம் நம்பர் திருகோணமலை நகரினுள் இருக்கும் மீனவக் கிராமம். யூன் மாதத்தின் பிற்பகுதியில் கடலுக்கு சென்ற மீனவர்கள் மூன்று பேரைக் காணவில்லை. அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக சக மீனவர்கள் 60கிலோ மீற்றர் வரை தேடுதல் நடத்தினர்.

இத் தேடுதலுக்கு சிங்கள மீனவர்களும் வள்ளங்களைக் கொடுத்து உதவினார்கள். பத்தாம் நம்பர். படுக்கை, பள்ளத்தோட்டம், மூன்றாம்கட்டை, மீனவர் கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் ஒரு கிழமை தேடியும் கண்டுபிடக்க முடியவில்லை. கடற்படைக்கும் அறிவித்துப் பார்த்தார்கள் பயனேதும் இல்லை. 'வெள்ளிநிலாவே விளக்காய் எரியும், விடிந்தால் விடியும் தொடர்ந்தால் தொடரும் இதுதான் எங்கள் வாழ்க்கை....' மீண்டும் வழமை போல் வாழ்க்கை ஓடுகிறது.

படுக்கை, திருக்கடலூர் மீனவர் சங்கங்களிடம் புலிகள் பணம் கேட்டு மூன்றுகிழமை அவகாசம் வழங்கியிருந்தார்கள் கட்டாத படியால் 3இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

தமிழ் மீனவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டால் சூட்டி என்ற சிங்கள மீன் வியாபாரியின் தயவை நாடவேண்டிய பரிதாப நிலை இப்பகுதி மீனவர்களுக்கு இருக்கின்றது.

திருமலை நகரத்தில் மீன்பிடிப்பதில் கட்டுப்பாடுகள் பெரிதாக இல்லாவிட்டாலும் வள்ளங்கள் காணாமல் போவதும் மீனவர்கள் கைது செய்யப்படுவதும் அன்றாட நிகழ்ச்சி. அண்மையில் 3 மீனவர்கள் கடற்படையால் அநாவசியமாக சுடப்பட்டார்கள்.

இன்று வடகிழக்கில் திருமலை மீன்பிடித்தொழிலில் கணிசமான வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு பிரதேசமாக இருப்பினும் மீனவர்களின் அன்றாட வாழ்வில் இருக்கும் கெடுபிடிகளும் பதட்டமும் ஒரு நிச்சயமற்ற நிலையை உருவாக்கியுள்ளது.

மூதூர் விவசாயம்

மூதூரின் தொலைதூர கிராம விவசாயிகளுக்கு பாசனத்திற்கான தண்ணீர் ஒரு பூதாகரப்பிரச்சினை. கல்லாறு வாய்க்கால் ஊடாக பாசனம் இருக்கும் என்றால் பிரச்சினை இல்லை. ஆனால் இடையில் சிங்களவர்களின் பிரதேசமாகிவிட்ட சேருவாவிலைக்கு தண்ணீர் திசை திருப்பப்படுகிறது. இதனால் மூன்றாம் கொலனி, கிளிவெட்டி, தோப்பூர், மேன்காமம், 58ஆம் கொலனி, மல்லிகைத்தீவு, பெரியவெளி, பச்சனூர், 65ம் கட்டை ஆகிய கிராமங்கள் வானம் பார்த்த பூமிகளாகின்றன. தச்சன்குளம், சிறுகுளம், நீலாப்பளை இவ்வாறு பல இடங்களுக்கு தண்ணீர் அங்கிருந்துதான் வர வேண்டும்.

விவசாயிகள் உரம் பெறுவதானால் இராணுவத்தின் "பாஸ்" அவசியம் இராணுவத்திடம் பாஸ் எடுத்துத்தான் கடையில் உரம் வாங்கமுடியும்.

மூதூர், தோப்பூர் கூட்டுறவுச் சங்கம் 'அலிஒழுவ' என்ற சிங்கள கிராமத்தில்தான் இருக்கிறது. ஈச்சிலம்பத்தைத் தமிழ் மக்கள் எட்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்துதான் பொருள்களை வாங்க வேண்டும்.

போக்குவரத்து

மூதூர் வெருகலுக்கு இடையே எந்த போக்குவரத்து வசதியும் இல்லை. 5-6கிலோ மீற்றர் நடந்துதான் செல்ல வேண்டும். ஈச்சிலம்பத்தை, கிளிவெட்டி, மாவடிச்சேனை பாதைகள் சீரமைக்கப்படவில்லை. மூதூர்-கூனித்தீவு வரையில் பஸ்வசதி உண்டு. ஆனால், பாட்டாளிபுரம், இத்திகுளம், செல்வாநகர், ஜின்னா நகர், வீரமாநகர் போன்ற காட்டை அண்டிய பிரதேசங்களில் இருந்து மக்கள் பல கிலோமீற்றர் தூரம் நடந்துதான் வரவேண்டும்.

படகு போக்குவரத்து

தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபையினாலும், மூதூர் கூட்டுறவு சங்கத்தினாலும் ஒரே ஒரு படகுச் சேவையே மூதூர்-திருமலைக்கு இடையே நடாத்தப்படுகிறது. அதுவும் நிச்சயமற்றது, பயங்கரம் நிறைந்தது. பழைய படகே பாவனையில் உள்ளது. பலமான காற்று வீசும் காலம் பயணம் செய்வதே ஆபத்தானது. அரசாங்கம் தனியான சேவை ஒன்றை நடத்த வேண்டும் என்பது மக்களின் நியாயமான எதிர்பார்ப்பு. அது இன்று நேற்றல்ல பல வருடங்களாக. கிண்ணியா ஊடான திருமலைக்கான தரைப் பாதை திருத்தப்படவேண்டும்.

வைத்தியசாலை

மூதூர் வைத்தியசாலையில் சிரேஷ்ட வைத்திய அதிகாரி யாரும் இல்லை. குளிர்சாதன வசதியில்லை. தோப்பூர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் கிடையாது.

திருமலை சந்தை விவகாரம்

சிங்கள வியாபாரிகளின் அபிலாசைகளுக்காக புதிய சந்தை செயற்படுவதற்கு எதிரான இராணுவ, அரசஅழுத்தங்கள் தொடர்கின்றன.

குடியேற்றங்கள்

ஏற்கனவே லவ்லேன், உவர்மலை பகுதிகளில் போன்றே தில்லை நகர் பகுதியில் மீனவர் குடியேற்றத் திட்டம் என்ற போர்வையில் திட்டமிட்ட குடியேற்றத்துக்கு அடிகோலப்பட்டது. ஆனால் அப்பகுதியில் 30வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வரும் மக்களின் கடுமையான ஆட்சேபணையாலும், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் முன்முயற்சியாலும் அது தடுத்து நிறுத்தப் பட்டது.

லிங்கநகர் பகுதியில் குடிசைகள் எரிக்கப்பட்டதும் கண்ணாடித் தொழிற்சாலையில் இருந்த அகதி மக்களை குச்சுவெளி இராணுவமுகாம் பகுதியில் குடியேற வற்புறுத்தியமையும் கசப்பான அனுபவங்களை ஏற்படுத்துவனவாக அமைந்தன.

அரசஅதிபர் இன உறவுகளுக்கு பாதகமாக செயற்பட்டு வருகின்றார் என்பது நீண்டகாலமாக இருந்து வரும் குற்றச்சாட்டு. ஆனால் அவரும் படையினரும் திருமலையில் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வில் அளவுக்கதிகமான தலையீட்டைச் செய்கிறார்கள் என்பது பரவலான அபிப்பிராயம்.

எல்லாவற்றுக்கும் மேலாக பட்டதாரிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவளித்த பாடசாலை மாணவர்கள் தாக்கப்பட்டது திருமலையில் எந்தவித எதிர்ப்பு இயக்கத்தையும் நசுக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமே.

- சிறிதரன்

குறுகிய அரசியல் இலக்கணங்களைத் தவிர்த்து விட்டால், எந்தத் தன்மானமுள்ள மனிதன் இடதுசாரியில்லை? சுயகௌரவம் உள்ள எவனுக்கு ஒரு சமூகத்தையோ அல்லது இதர உதிரி மனிதர்களையோ சுரண்டி வாழ மனம் இடங் கொடுக்கும்? மனச்சாட்சியுள்ள எந்த மனிதன் மற்றவருக்கு மறுத்துத் தனக்கு மட்டும் சலுகைகள் தரப்பட வேண்டுமென வாதம் புரிவான்?

- அசோகமித்திரன்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

யாழ் மாநகர சபையில் நடந்த குண்டுவெடிப்பில் யாழ் மாநகர முதல்வர் உட்பட யாழ் நகரக் கட்டளை அதிகாரி யாழ் மாநகர சபையின் அதி உயர் உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிவிலியன்கள் என இருபதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரேகடியரையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கொன்று விட்டதாக புலிகள் புளகாங்கிதமடையலாம். ஆனால் மாநகர நிர்வாகத்தை நடாத்தும் நகரபிதா பொறியிலாளர்கள், கணக்காளர்கள் நிர்வாக உத்தியோகத்தர்கள் போன்ற பல உத்தியோகத்தர்கள் இக்காட்டுமிராண்டித்தனமான குண்டுவெடிப்பில் பலியாகியுள்ளனர். யாழ் குடாநாட்டில் இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதில் இவ் அதிகாரிகளின், உத்தியோகத்தர்களின் பங்கு மகத்தானது மாத்திரமல்ல அளவிடற்கரியதும் கூட. புலிகளின் பாசிசப் போக்காலும், அராஜகத்தனத்தாலும், பல உயரிய கல்விமான்களையும், அரசியல் தலைவர்களையும் நாம் முன்னரே இழந்துள்ளோம். அதே வரிசையில் எமது சமூகத்தின் அரிய பல நிர்வாகிகள் கொல்லப்படுவதானது வருந்தக்கதும், வேதனைக்குரியதுமாகும்.

தமிழ் மக்களுக்கான விமோசனத்திற்காகப் போராடுவதாகக் கூறுபவர்கள்-தமிழ் மக்களின் நிர்வாகத்தையே சீர்குலைப்பதும், அதற்காக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளையும் அலுவலர்களையும் கொல்வதானது மக்களால் அழுத்தம் திருத்தமாக கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

யாழ் மாநகரசபையில் கொல்லப்பட்ட நகரபிதாவும் உத்தியோகத்தர்களும், துரோகிகளா? என்பதை மக்கள்தான் சொல்ல வேண்டும். எமது மண்ணில் எமது தேவைகளை நிறைவு செய்து வாழ ஆசைப்படுவதும் கூட துரோகம் என எண்ணப்படலாமா?

துப்பாக்கித் துரைத்தனத்தால், மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களைக் கொன்றும், மக்களை மிரட்டிப் பணியவைப்பதன் மூலமும் யாரும் ஏகப்பிரதிநிதிகளாகிவிட முடியாது என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும். இக்கொலைகள் இப்படியே தொடருமானால் தமிழீழமல்ல சுடுகாடுதான் மிஞ்சும்.

எனவே எமக்கு சிவில் நிர்வாகம் வேண்டுமா? ஜனநாயகம் வேண்டுமா? அல்லது இந்தக் கொலை காரத்தனங்கள் தொடர வேண்டுமா? என்பதை மக்கள் தெளிவாகச் சொல்ல வேண்டிய நேரம் நெருங்கி விட்டதென்பதை மக்களும் உணரவேண்டும்.

எமது மக்களின் நல்வாழ்விற்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்த யாழ் மாநகர உத்தியோகத்தர்களுக்கும் முன்னாள் மேஜர் சரோஜினி யோகேஸ்வரனின் கொலைக்குப் பின்னரும் யாழ் மாநகர வேலைகளை முன்னெடுத்த திரு. சிவபாலன் அவர்கட்கும், யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை கொண்டுவர பல முயற்சிகளை மேற்கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சிரம் தாழ்த்தி தனது அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்வதுடன், இவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஜனநாயகத்தின் அத்தியாவசியத்தை தொடர்ந்து வற்புறுத்துவோம்.

கே. பிரேமச்சந்திரன்
செயலாளர் நாயகம், ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ் மாநகர முதல்வருக்கு அஞ்சலி

யாழ் மாநகர முதல்வர் பொன். சிவபாலனின் இறுதி யாத்திரையின் போது, யாழ் மாநகர சபை உறுப்பினரும் E.P.R.L.F இன் மத்திய கமிட்டி உறுப்பினருமான தோழர் சுபத்திரன் அவர்கள் அஞ்சலி செலுத்துகின்றார்.

யாழ் நகர பிதா பொன். சிவபாலனின் மரணச்சடங்கில் உறவினர்கள் கதறியழும் காட்சி.

யாழ் மாநகரசபைக்கு குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட கட்டடக் கலைஞர் திருமதி மல்லிகா ராஜரட்ணம் அவர்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

படிப்பகம்

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.